Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 07 வெள்ளிக்கிழமை (23.08.2013) பக்கங்கள் 20 ஓசை - 327

## மாணவனின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கோணாவில் கிழக்கு ராஜன் குடியிருப்பில் 17 வயது மாணவன் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

செல்வகுமார் யூட்சன் (வயது - 17) என்ற இந்த மாணவன் வீட்டுக்குப் பின்னாலுள்ள பற்றைக்குள் நாவல் மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுப் பகல் 11.00 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டு சடலத்தை மீட்டு சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சியில் இவ்வாறு இடம் பெறும் நான்காவது மரணம் இதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## தபால் மூலவாக்களிப்பு; ஏற்பாடுகள் பூர்த்தி


(கொழும்பு)

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு தபால் வாக்குச்சீட்டுக்கள் நேற்று தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுவதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இம்முறை மாகாண சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 387 அரச ஊழியர்கள் தகுதி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் குருநாகல் மாவட்டத்தில் அதிகளவான 46 ஆயிரத்து 374 பேர் தபால் மூலம் வாக்களிக்கவுள்ளனர்.

செப்ரெம்பர் 9,10 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

## பொட்டுக்கேடுகளை புட்டு வைக்கிறார் மாணிக்கசோதி




(யாழ்ப்பாணம்)

கூட்டமைப்பு மாகாணசபை வேட்பாளர்கள் இன்றுவரை ஒன்றுபடவில்லை, ஆனால் அவர்கள் மக்களை ஒன்றுபடுமாறு கூறிவருகின்றனர் என்று எதிர்வரும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடும் மாணிக்கசோதி அபிமன்னசிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து 19 ஆம் புக்கம் பார்க்க

## ஜீ.எல்.பீரிஸ் பாகிஸ்தானில்

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று அதிகாலை பாகிஸ்தான் நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்.

இந்த விஜயத்தின்போது பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு. அழைப்பு விடுப்பதும் இந்த விஜயத்தின் நோக்கம் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# அரசியல் தீர்வுக்கு "13" தான் ஒரே வழி

## விடாப்பிடி நிலையில் புதுடில்லி



(புதுடில்லி)

வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியான தீர்வு காண்பதற்கான மிகப்பொருத்தமான அடிப்படை இலங்கையின் அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்திலேயே உள்ளது.

எனவே அதன் அடிப்படையிலேயே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக்காண வேண்டும் என்று நாம் இலங்கை அரசுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றோம் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார்.

இந்திய மாநிலங்கள் அவையில், நேற்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் டி.ராஜா உரையாற்றும் போது,

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்கக் கூடாது என்று தமிழகத்தைச் சேர்ந்த எம்.பிக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக தமிழகம் மற்றும் புதுச்சேரி முதல்வர்கள் அனுப்பிய கடிதத்தை மத்திய அரசு 19 ஆம் பக்கம் பார்க்க










# உரிமைக்கான பயணத்தை '13' இல் ஆரம்பிப்போம்

## வெல்வது நிச்சயம்

(யாழ்ப்பாணம்)

எமது மக்கள் நிமிர்ந்தெழும் காலம் நெடுந்தூரமில்லை. அதற்கான எமது இலட்சியக் கனவுகள் நிறைவேறும் பொற்காலம் இன்று கனிந்து வந்திருக்கிறது.

எமது மக்கள் தமது மண்ணில், சுதந்திரப் பிரஜைகளாக சகல உரிமைகளும் பெற்று, முகமுயர்த்தி வாழும் காலச் சூழலே நாம் விரும்பும் இலட்சியக் கனவாகும்.

தமிழ்பேசும் மக்கள் தோற்றுப் போன சமூகம் அல்ல. இதை மெய்ப்பித்து, அடைய வேண்டிய எமது அரசியல் இலக்கின் வெற்றியைக் கொண்டாடி மகிழ, நாம் ஏந்த வேண்டியது அனுபவத்துடன் கூடிய அறிவாயுதம் மட்டுமே.

நாம் செல்ல வேண்டியிருப்பது மதிநுட்பம் நிறைந்த சாணக்கிய, தந்திரோபாய வழி முறை நோக்கியே.

எமது ஆரம்ப கால நீதியான உரிமைப் போராட்டத்தை நேரிய முறையில் வழி நடத்திச் சென்றவர்கள் நாம். அதற்காக பல அர்ப்பணங்களைச் செய்தவர்கள் நாம். இத்தகைய தியாக



வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட நாம், அடைய வேண்டிய எமது அரசியலுரிமை சுதந்திரத்திற்காக, காலத்தின் சூழலைக் கருத்தில் கொண்டு, நடைமுறைச் சாத்தியமான யதார்த்த வழி நின்று, ஜனநாயக வழி முறையில் தொடர்ந்தும் உழைத்து வருகின்றோம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டிருக்கும் பத்திரிகை அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

எமது மக்களின் உரிமைக்குக் குரல் கொடுத்து வருகின்ற நாம், யாருடன் பேசி உரிமைகளைப் பெற முடியுமோ அந்த வகையில் அரசோடு தொடர்ந்தும் நாம் உறவுக்குக் கரம் கொடுத்தும், எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தும் வருகின்றோம். எமது மக்களின் உரிமைக்காக நாம் சுமந்திருக்கும் எமது உறுதி மிக்க உணர்வுகளும், அரசாங்கத்தின் உறவைக் கொண்டிருக்கும் எமது வலிய கரங்களும் ஒன்றிணைந்தே, இது வரை காலமும் எமது மக்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்காக உறுதி கொண்டு உழைக்க முடிந்திருக்கிறது. எமது அரசியல் பலத்திற்கு ஏற்ற வகையில் அதில் நாம் முடிந்தளவு வெற்றி 19 ஆம் பக்கம் பார்க்க



5ஆம் பக்கத்தில் சிறப்பு நேர்காணல்

# இறுதிப் போர் வெடிக்க எழிலன் தான் காரணம்



### வேட்பாளர் அனந்தி மன்னிப்புக் கோர வேண்டும் ஜனாதிபதியின் இணைப்பாளர் ஆவேசம்

(கொழும்பு)

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் முறிவதற்கும் இறுதி யுத்தம் வெடிப்பதற்கும் புலிகளின் திருமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனே முக்கிய காரணமாக இருந்தார்.

இவரின் செயற்பாடே இறுதி யுத்தமாக வெடித்தது என்றும், இதற்காக இப்போது வடக்கு தேர்தல் களத்தில் போட்டியிடும் அவரது மனைவியான அனந்தி வடக்கு தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் தமிழ் ஊடகங்களுக்கான ஜனாதிபதியின் இணைப்பாளரான 19 ஆம் பக்கம் பார்க்க

# வெற்றுக் கோஷங்களுடனும், வெறுங்கைகளுடனும் தேர்தலில் வெற்றிபெற்றுவிட முயற்சிக்கின்றார்கள்

## ஐ.ம.சு.முன்னணியின் முதன்மை வேட்பாளர்



(அல்வாய்)

சுயலாப அரசியல்வாதிகள் வெற்றுக் கோஷங்களுடனும், வெறுங்கைகளுடனும், தேர்தலில் வெற்றிபெற்றுவிட முயற்சிக்கின்றார்கள் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதன்மை வேட்பாளரான சின்னத்துரை தவராசா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அல்வாய் வடக்கில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் வன்முறைகளை நாம் விரும்பவில்லை. ஆனால் அனுதாப வாக்குகளைப் பெறவும், தம்மை புனிதமானவர்களாக காட்டிக்கொள்ளவும், தாம் தாக்கப்ப்டுவதையும், அதனால் மக்களிடம் ஒரு பதற்றம் ஏற்படுவதையும் இங்கே சிலர் விரும்புகின்றனர் என்றும் தெரிவித்தார்.

அவர்களுக்கு வாக்காளப் பெருமக்களாகிய உங்களுக்கு கூறுவதற்கு புதிய செய்திகளோ, ஆக்கபூர்வமான வேலைத்திட்டமோ இல்லை. வெற்றுக் கோஷங்களுடனும், வெறுங்கைகளுடனும், தேர்தலில் வெற்றி பெற்றுவிட முயற்சிக்கின்றார்கள்.

வலிந்து வன்முறையை தூண்டிவிடுவதையும், அனுதாப அலையை ஏற்படுத்துவதிலும் திட்டமிட்டு ஈடுபட்டு வருகின்றார். தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதை அவர்கள் விரும்பவில்லை. அவ்வாறு நடந்தால், வடக்கில் சுமூக நிலைமை இல்லை என்று அவர்கள் செய்துவரும் பரப்புரைகள் பொய்யாகப்போய் விடுமென்று அஞ்சுகின்றார்கள்.

தேர்தல் அமைதியாக நடைபெற்றால் தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிக்க முயற்சிப்பார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். தமிழ் மக்கள் சிந்திக்கத் தொடங்கினால் தாம் கூறும் வெற்றுத் தேசிய உணர்ச்சியும் உணர்ச்சியூட்டும் அர்த்தமற்ற அரசியல் போக்கும் தமிழ் மக்களால் தூக்கி எறியப்பட்டு விடுமென அவர்களுக்குத் தெரியும்.

வன்முறைகளைத் தூண்டிவிட்டு செயற்கையான பரபரப்பையும், குழப்பத்தையும் ஏற்படுத்த எத்தனிக்கின்றார்கள். அமைதியை விரும்பும் எமது மக்களாகிய நீங்கள் இந்த வன்முறைப் பிரியர்களை நிராகரிக்க வேண்டும். ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

தென் இலங்கையில் வாழும் மக்கள் போல் நாமும், எல்லாமும் பெற்றுவாழ வேண்டும். நமக்கான நிர்வாக மையத்தை பாதுகாத்து நமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும். வட மாகாண சபை என்பது நீண்ட காலமாக நமக்கு மறுக்கப்பட்ட அரசியல் வாய்ப்பாகும். அதை நாம் நழுவவிடக்கூடாது. சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாங்கள் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டாலும் என்றும் உங்கள் எண்ணத்தால் வாழபவர்கள். எனவே எம்மை பெரும்பான்மையாக வெற்றி பெறச் செய்வீர்கள் என்று அவர் மேலும தெரிவித்துள்ளார்.

# வீதியைக் கடக்கமுயன்ற பெண் மோட்டார் சைக்கிள் மோதிக் காயம்

(சாவகச்சேரி)

ஏ - 9 வீதியைக் கடக்க முற்பட்ட பெண்ணொருவர் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் கைதடியில் இடம்பெற்றுள்ளது.


நேற்றுக் காலை 8.45 மணியளவில் கைதடியிலுள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எதிரில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த கோகிலா என்ற பெண்மணியே காயமடைந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞரும் சிறு காயங்களுக்குள்ளானார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, தனியார் சிற்றூர்தியில் கைதடி நுணாவிலில் இருந்து கைதடி நோக்கிச் சென்ற பிரஸ்தாப பெண் குறித்த இடத்தில் பஸ்ஸை விட்டு இறங்கி வீதியைக் கடக்க முற்பட்டுள்ளார்.

எனினும் பஸ்ஸிற்குப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டார். மயக்கமடைந்த நிலையில் இப்பெண் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (இ)


# நெடுங்கேணியில் பாரம்பரிய உணவுத் திருவிழா



வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் சேவாலங்கா நிறுவனத்தினால் பாரம்பரிய உணவுத்திருவிழா வெகுசிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. நெடுங்கேணியில் நேற்று பாரம்பரிய உணவுகளையும் இன்றைய சமுதாயத்திறகு அதை வெளிப்படுத்தும் முகமாகவும் திணைமா, ஒடியல்க்கூழ், குரக்கன்பிட்டு, கீரைபிட்டு, மரக்கறிக்கூழ், பலவகையான கழிகள், பல்வேறுவகைப்படுத்தப்பட்ட உணவுகளையும் சமைத்து இலவசமாக வழங்கப்பட்டது.

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலர் க.பரந்தாமன் சேவாலங்கா வவுனியா மாவட்ட திட்டப்பணிப்பாளர் திலீபன், சுகதாரப் பரிசோதகர் நக்கீரன், நெடுங்கேணிப் பிரதேச சபை செயலாளர் நெடுங்கேணிப் பொலிஸ் பொறுப்பதிகாரி, பனை தென்னைவள கூட்டுறவுசங்கம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் அகியவற்றில் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடதக்கது. (40

# மயிர்க்கொட்டிகளின் தாக்கம் ஏழாலையில் அதிகரிப்பு




ஏழாலைப் பகுதியில் மயிர்க்கொட்டிகளின் தாக்கம் தறபோது அதிகரித்துக் காணப்படுகின்றது. வீதி ஓரங்களில் உள்ள மரங்களில் இவை அடர்ந்து காணப்படுவதனால் வீதிகளில் பயணம் செய்வோர் மற்றும் சிறுவர்கள் இதன் தாக்கத்திலற்கு உள்ளாகின்றனர். குறித்த வீடு, வேலி உரிமையாளர், மயிர்கொட்டிகளை அழித்து வீதிகளில் பயணம் செய்வோருக்கும், பொதுமக்களுக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அப்பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். (66)

# பரிசளிப்புவிழாவும் நூல் வெளியீடும்

நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலைப் பரிசளிப்பு விழாவும் நீர்வை. தி.மயூரகிரி எழுதிய "ஏற்றம் புரிய வந்தாய்" கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் உள்ள திருமுருகன் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் நூலின் அறிமுகவுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் வழங்குவார். தீவக வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் நூலை வெளியிட்டு வைக்க தொழிலதிபர் க.கிருபாகரன் தம்பதியர் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வர்.



கோண்டாவில் கிழக்கு இருபாலை வீதியில் வீதித்திருத்த வேலைகளின்போது கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் வெட்டப்பட்ட வாய்க்கால் இன்றும் சீர் செய்யப்படாத நிலையில் நீர்தேங்கி நிற்கின்றது. இதனால் நுளம்புப் பெருக்கம் இப்பகுதியில் அதிகரித்து இருப்பதோடு, துர்நாற்றமும் வீசுகின்றது. ஆனால் இச்சீர்கேடானது உரிய அதிகாரிகளின் கவனத்தில் எடுக்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (படம் - பிரசாத்)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2454 திகதி 21-08-2013

ஆங்கில எழுத்து: A

வெற்றி எண்கள்: 02 08 11 21

போனஸ் இல: 45

ஜக்பொட் பரிசு ரூ.22,870,525/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 248830 | 20/- | ,4,976,600/- |
| 2 இல | 17806 | 100/- | 1,780,600/- |
| 3 இல | 374 | 1,000/- | 374,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9913 | 40/- | 396,520/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 726 | 1,000/- | 726,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 22,870,525/- | - |
| 1 இல + போனஸ் இல | 11896 | 100/- | 1,189,600/- |
| 2 இல + போனஸ் இல | 547 | 500/- | 273,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 471 | 200/- | 94,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 22 | 1,500/- | 33,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 290606 | | 12,574,020/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2013 ஓகஸ்ட் 24 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 23,549,850/-

(C/3004)

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

# வெள்ளைத் தண்டு தத்தியின் தாக்கம்

# நெற்செய்கை முற்றாகப் பாதிப்பு

## நஷ்டத்தில் வவுனியா விவசாயிகள்



(சாவகச்சேரி)

சிறுபோக நெற்செய்கையில் இம்முறை வெள்ளைத் தண்டு தத்தியின் தாக்கம் வெகுவாக அதிகரித்தமையால் தாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்டத்தில் இம்முறை சிறுபோக நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

செட்டிகுளம், பூவரசங்குளம், சமளங்குளம் போன்ற பகுதிகளில் இம்முறை சிறுபோக செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்பட்டது. ஆண்டின் ஆரம்பப் பகுதியில் பெய்த மழையை அடுத்து இம்முறை அதிகளவில் விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையினை மேற்கொண்டிருந்தனர்.


எனினும் பிற்காலப்பகுதியில் மழை இல்லாத கால நிலையுடன் அதிக வெப்பத்தாக்கமும் காணப்பட்டதை அடுத்து நெற்பயிர்கள் எரிவு நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகின அத்தோடு வெள்ளைத் தண்டுத் தத்தியின் தாக்கமும் அதிகளவில் காணப்பட்டதாகவும் இதனால் எதிர்பார்த்தளவு விளைச்சல் தமக்கு கிடைக்கவில்லை என்றும் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளவென வங்கிகளில் தாம் பெற்ற கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் விவசாயிகள் பலரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போது காலபோக செய்கைக்கான மழை பொழியத் தொடங்கியுள்ளது. இதனையடுத்து உழவு வேலைகளை ஒரு சில விவசாயிகள் மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இம்முறை சம்பா நெற்பயிரே அதிகளவில் பாதிக்கப்பட்டமையால் காலபோக செய்கையில் சம்பா நெற்செய்கையை மேற்கொள்ளப போவதில்லை எனவும் விவ சாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து இப்பகுதி விவசாய போதனாசிரியர் தெரிவிக்கையில் அதிக் வெப்பம், மற்றும் கூடிய காற்று என்பவற்றால் இந்நோய்த் தாக்கம் ஏற்பட்டதாகவும் இதனைக் கட்டுப்படுத்த தாம் விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்கியுளளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் மீது வழக்குத் தாக்கல்



(கோப்பாய்)

கோப்பாய் சந்தியில் உள்ள அலுவலகம் ஒன்று சுகாதாரச் சீரழிவோடு காணப்பட்டதாக பொதுச்சுகாதாரப் பரிசோதகரினால் அடையாளம் காணப்பட்டு அதன் உரிமையாளர் மீதும் அங்கு பணியில் இருந்த இரண்டு ஊழியர் மீதும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உணவு தயாரிக்கும் பொருட்களை தரையில் வைத்திருந்தமை, மேல் சட்டை, கையுறை மற்றும் 'ஏப்ரன்' அணியாமை, நகம் வளர்த்து அழுக்குப் பேணியமை போன்ற குற்றங்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

கடந்த 6 ஆம் திகதி கோப்பாய், இருபாலை பகுதிகளைச் சேர்ந்த பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் பா.சயந்தன், ம.அனுசூதனன் ஆகியோர் இவ் உணவகத்தின் மீது மேற்கொண்ட திடீர் பரிசோதனையின போது உரிமையாளரும், ஊழியர்களும அகப்பட்டுக் கொண்டனர்.

எதிர்வரும் 9ஆம் திகதி இவர்கள் மீதான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதிவான் நீதிமன்றில் நடைபெறவுள்ளது. (137)

# நாவற்காடு-மிருசுவில் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(வரணி)

வரணி சுட்டிபுரம் அம்பாள் ஆலயத்திற்கு கிழக்கு பக்கமாக உள்ள நாவற்காடு-மிருசுவில் வீதியானது மிகவும் சேதமடைந்து பாவிக்கமுடியாமல் உள்ளது.

இந்த வீதியானது கடந்த 2012 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்டது. தார் வீதியாக உள்ள வீதியினை களிமண் பறிக்கப்பட்டு உயரமாக்கப்பட்டிருந்தது. கல்லுப் போட்டு உயர்த்தி தார் வீதியாக மாற்ற வேண்டிய நிலையில் களிமண் பறிக்கப்பட்ட காரணத்தினால் வீதியில் இறுகாமல் மழைகாலங்களில் சேறும் சகதியுமாக உள்ளது. இதனால் போக்குவரத்து செய்ய முடியாமல் இருக்கின்றது.

மழைகாலங்களில் நீர் நிற்கின்ற காரணங்களை காட்டி களிமண் பறிக்கப்பட்டு வீதி உயர்த்தப்பட்டுள்ளதே தவிர வேறு எந்த பயனும் இல்லை என இப்பகுதி பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மழைகாலம் வந்தால் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பாடசாலை செல்வதற்கு இரண்டு கிலோமீற்றர் தூரம் சுற்றி பாடசாலை செல்ல வேண்டிய தேவை உள்ளதாகவும் மழை காலம் வருவதற்கு முன்னர் இந்த வீதியினை திருத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என நாவற்காடு, குடமியன் மிருசுவில போன்ற பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி வியாபாரிமூலை அருள்மிகு கற்பூர விநாயகப் பெருமானுக்கு தற்போது வருடாந்த உற்சவம் நடைபெற்று வரும் அதேவேளை கடந்த சனிக்கிழமை புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்றது.

98 வருடமாக கட்டுத்தேரில் உலா வந்த விநாயகப் பெருமானுக்கு இந்த ஆண்டு புதிதாக சித்திரத்தேர் உருவாக்கப்பட்டது.

வெள்ளோட்ட நிகழ்வை அடுத்து சிறப்பு மலர் ஆலய நிர்வ கத்தால் வெளியிட்டுவைக்கப்பட்டது. (150)



சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற நடமாடும் சேவையின் பதிவு (104)

# ஆலய உற்சவங்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி செருக்கல் பதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.


இதில் எதிர்வரும் 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ)

(சாவகச்சேரி)

மட்டுவில் சந்திரபுரம் அருள்மிகு செல்லப்பிள்ளையார் திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

உற்சவ கிரியைகளை விளைவேலி கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆற்றவுள்ளார். (இ)

# நல்லைக் கந்தனுக்கு இன்று பன்னிரண்டாம் திருவிழா



## மக்கள் துயர்தீர்த்திடு முருகா!

குஞ்சரியர் சகிதம் குலம் காக்க வீதி வலம் வரும்
நாற்திசையும் புகழ் பரப்பி நிற்க்கும்-முருகா
சித்தர்கள் தடம் பதித்து முத்திபெற்ற நல்லை வீதியிலே
தன்னை நாடிவரும் பக்தர்கள் குறைதீர்க்கும்-வேலா
தந்தைக்கு உபதேசம் செய்து கோபத்துடன்
பழனியிலே கச்சையுடன் தனியநின்ற-கந்தா
இனியாவது எம்மக்கள் துயர்தீர்த்திட
பாதிமனமுருகி எழுந்தோடிவாராயோ-கடம்பா

க. கனகசபை சண்டிலிப்பாய்

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார திணைக்களத்தால் தினமும் மாலை 3 மணியளவில் ஆன்மிக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் 12 ஆம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை அலங்காரம் பாடி அழகனைத் தொழுவோம என்னும் விடயம் பற்றி சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்ற வுள்ளார்.

தொடர்ந்து சண்டிலிப்பாய் சேக்கிழார், இணுவில் இளந்தொண்டர் சபை, நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கம் தினமும் மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காமணிமண்டபத்தில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று திருமதி குமுதா உமாநந்தனின் பாட்டு பக்கவாத்திய கலைஞர்கள் சகிதம் இடம்பெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் ப்ரம்மகான சபா நடாத்தும் தெய்வீக இசைச்சங்கம நிகழ்வு தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய் மண்டபத்தில் இடம்பெற்று வருகிறது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பிரமஸ்ரீ விஜயகுமாரசர்மா வத்சாவதிதசர்மா தேவசேனாவின் பாட்டு கச்சேரி இடம்பெறவுள்ளது.

சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு தெய்வீகப் பேருரை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் இன்று முருகவழிபாடு என்ற விடயம் பற்றி கலாநிதி மா. வேதநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (42, 06)

மகோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்




உள்நாட்டு, வெளிநாடுகளுக்கான
துரித தபால்கள் சேவை.
259, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

எதிர்ப்பு இல்லாத இடத்தில் வெற்றி இல்லை
- சுவாமி விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## காகங்கள் திட்டுவதோடு சரி!

தேர்தல் கால இரைச்சல்களால் நிறையத் தொடங்கியிருக்கிறது வடமாகாணம். வெறுமனே பேசிப் பேசியே வெற்றிகளை ருசிபார்த்து வருகிறவர்களுக்கு தேர்தல் காலம் என்றால் மேலும் மேலும் பேச்சுக்களை வீரியப்படுத்த வேண்டிய கட்டாயம்.

எதையெதையோ சொல்லிப் பார்க்கிறார்கள். வீரமுடன் சவால்களை எடுத்து விளாசுகிறார்கள். அரசை எதிர்த்து ஒரு அடி கூட இதுவரை முன் நகர்ந்து காட்டாதவர்கள், அதுபற்றி எந்த சுயவிமர்சனமும் செய்துகொள்ளாமல் அரசை எதிர்த்து சவால் மேல் சவால்களாக அடுக்கிக்கொண்டே இருக்கிறார்கள்.

மாடு அதன்பாட்டுக்கு நடந்து சென்றுகொண்டிருக்கிறது காகங்கள் ஒவ்வொருமுறையும் ஊருக்கு மட்டும் கத்திக் கரைந்து 'சமா' காட்டிக்கொண்டிருப்பதோடு சரி.

"அடிக்கிறார்கள்... தாக்குகிறார்கள்... அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடுகிறது... வன்முறையே அறியாத அப்பாவிகள் நாங்கள்... எதிர்த்தரப்பு வன்முறைக்கு இரையாகித் துடிக்கிறோம்... மக்களே யுத்தம் முடியவில்லை பாருங்கள்" என்ற 'சீன்' போடும் குய்யோ முறையோ கூப்பாடுகளே இம்முறையும் வெற்றியைக் கொண்டு வந்துவிடும் என்று முழு நம்பிக்கையோடு செயற்பட்டு வருகிறார்கள்.

மாகாண சபையை வென்று என்ன செய்யப்போகிறோம் என்பதைச் சொல்லவே தேவையில்லை. தீர்வைக் கொண்டு வருவதற்கான திட்டம் என்ன என்பதைப் பறையவே வேண்டாம். இவர்களை வெல்ல வைத்தால் மக்கள் வாழ்வில் என்ன மாற்றம் வரும் என்று யாருக்கும் தெரிய வேண்டாம். ஓங்கிய குரலெடுத்துக் கத்திக் கொண்டிருந்தால் தமிழ்மக்களை உணர்ச்சி வசப்பட வைத்து வாக்குகளை அள்ளிவிடலாம் என்ற யுக்தியையே இப்போதும் தொடர்கிறார்கள்.

சும்மா பேசிப் பேசியே மக்களைப் பேய்க்காட்டி அழைத்துச் செல்லுதல் என்பது மட்டுமே அவர்களுக்குத் தெரிந்த—அவர்கள் செய்துவரும் ஒரே அரசியல். எனவே எமது மக்களும் சவால்கள், சபதங்கள், முழக்கங்கள், மிரட்டல்கள் என அவர்களது பேச்சுச் சுதந்திரத்தின் ஜிலுஜிலுப்பை மட்டுமே பெருமளவுக்கு அனுபவித்து வருகிறார்கள். ஒட்டுமொத்த சமூகமே பேச்சோசையால் விளையும் இரைச்சலில் திளைக்கிறது.

பேச்சினால் ஒருவர் என்னென்ன விதமாக தொல்லைக்கு ஆளாக நேரும் அல்லது ஆளாக்கலாம் என்பதை நாமெல்லோருமே அறிந்திருக்கிறோம். உலகையே உதறி வெல்லும் 'வீர' உணர்வும், மற்றோரெல்லாம் எதிரிகளே என்னும் வெறுப்புணர்வும் நமக்குச் சும்மா வந்துவிடவில்லை. 'நாம் வேறு அவர்கள் வேறு' என்று நம் அடிநாளிலிருந்தே பேசிப் பேசி நம்மை ஆக்கி வைத்திருக்கிறார்கள் இப்படி!

மூன்றாவது யுத்தத்தை நடத்த சர்வதேசத்தை அழைத்து வரும் கதையெல்லாம் ஏதோ நமது மக்கள் இப்போதுதான் புதுசாகக் கேட்கிறார்கள் என்றில்லை. "மரம் பழுத்தால் வெளவால் வரும்" போன்ற வீரக்கதைகளை எல்லாம் முப்பது வருசங்களுக்கு முன்பே கேட்டவர்கள்தான் நமது மக்கள்.

சர்வதேசமும் வந்திறங்கவில்லை; நம்மவர்களும் அந்தப் பேச்சை நிறுத்துவதாக இல்லை. அரசாங்கத்தையும் தென்னிலங்கைப் பெரும்பான்மை மக்களையும் மிரட்டுகிறார்களாம். இப்படி வெறுமனே மிரட்டிக் கொண்டிருக்கிற சந்தோசம் மட்டுமே அவர்களுக்குப் போதுமாக இருக்கலாம்.

ஆனால் போரினால் இழந்தவைகளிலிருந்து மீள முடியாமல் அடிப்படைத் தேவைகளுக்கே இன்னும் அல்லாடிக் கொண்டிருக்கும் பெரும்பான்மைத் தமிழ் மக்களுக்கு அதுவே போதுமா?

– ஆசிரியர்

# 13 இல் திருத்தம் இல்லையெனில்
# தெரிவுக்குழுவிலிருந்து விலகுவோம்

## எச்சரிக்கிறது ஜாதிக ஹெலஉறுமய

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடிய சாதகமான நிலைப்பாட்டை எடுக் காவிட்டால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்து விலகி விடுவோம் என ஜாதிக ஹெல உறுமய எச்சரித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவில் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எதனைக் கூறினாலும், நாட்டுக்கு நன்மை ஏற்படும் வகையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் பாதுகாக்கும் என அமைச்சர் பீரிஸ் தெரிவித்திருந்ததாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த சிறி வர்ணசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என்ற கொள்கையில் ஜாதிக ஹெல உறுமய தொடர்ந்தும் உள்ளது. இந்த நிலைப்பாட்டில் இருந்து கொண்டு, 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஹெல உறுமய பங்கேற்கும்.

அரசாங்கம் செப்ரெம்பர் 21 ஆம் திகதிக்கு முன்னர் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாதகமான நிலைப்பாட்டை எடுக்காவிட்டால் ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்து விலகி விடும் என்று தெரிவித்துள்ளார்.

# எலிகளைப்போல பிள்ளைகளை சோதனை செய்ய அனுமதி இல்லை

## அமைச்சர் சம்பிக்க் தெரிவிப்பு

பால்மா உற்பத்தி நிறுவனங்களில் எலிகளை வைத்து பரிசோதனை செய்வதைப் போன்று எமது நாட்டுப் பிள்ளைகளை வைத்து சோதனை செய்வதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோமென தொழில்நுட்ப, ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற "டிசிடி" தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நியூஸிலாந்து அரசாங்கத்தின் கூற்றின் படி கடந்த 2012 ஆம் ஆண்டுவரை டி.சி.டி. இரசாயனப் பொருளை தாம் பயன்படுத்தியதாகவும் அதனைத் தற்போது உபயோகிப்பதில்லை எனவும் தெரிவித்துள்ளது.

ஆனால் பொன்டேரா நிறுவனம் தனது உற்பத்திகளில் டி.சி.டி. கலந்திருக்கவில்லை என்று தெரிவிக்கின்றது. இதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இது வெறும் பொய்யான கூற்றாகும். வியாபார நிறுவனங்களின் விற்பனை நோக்கத்தின் அடிப்படையிலேயே இது முன்னெடுக்கப்படுகின்றது.

பால்மா உற்பத்தி நிறுவனங்களின் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக எமது நாட்டின் பிள்ளைகளை எலிகளாக பயன்படுத்த நாம் இடமளிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறுநீரகத் தொற்றால் ஊவாவில் 3000பேர் பாதிப்பு

சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஊவா மாகாணத்தில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்கள் அனைவரும் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனினும், அடுத்த ஆறு தொடக்கம் பத்து மாதங்களிற்குள் அவர்களில் பலர் இறக்கலாம் என ஊவா மாகாண சுகாதார அமைச்சு அச்சம் வெளியிட்டுள்ளது. சுமார் 3 ஆயிரம் பேர் சிறுநீரக நோயிற்காக ஊவா மாகாணத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனினும் இவர்களின் வாழ்கை அபாய நிலையில் உள்ளது என மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சந்தியா அம்பென்வெல தெரிவித்தார்.

இந்த நோய் ஆசனிக், பூச்சி கொல்லி மற்றும் இரசாயன உரம் போன்றவற்றின் பாவனையினால் ஏற்படுகின்றது என வைத்தியர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் சுகாதார அமைச்சின் அதி காரிகள் மேற்கொண்ட விசாரணை மூலம் வெளிக் கொணரப் பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவிற்கான வாக்குறுதிப்படியே வடமாகாணசபைத் தேர்தல்

## என்கிறார் ரில்வின்

(கொழும்பு)

இந்தியாவிற்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரமே வடக்கில் தேர்தல் நடத்தப்படுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கல்கமுவ பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்தக் கருத்தை கூறினார். வடபகுதி மக்களின் பிரச்சினைகளுக்குப் பதிலளிக்க வேண்டும் என்று குறிப்பிட்ட அவர் எம்மை விட அவர்களது வாழ்க்கை சிரமமானது. யுத்தம் முடிவடைந்து 4 வருடங்கள் கடந்துள்ள நிலையில் வடபகுதி மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வு காணவில்லை. அவ்வாறு தீர்வு வழங்கப்பட்டிருந்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடபகுதியில் தேர்தலில் வெற்றி பெற்றிருக்காது.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்காக எதனையும் செய்த கட்சி அல்ல என சுட்டிக்காட்டினார். அரசாங்கம் இயலுமானால் வடபகுதியில் வாக்குகளை பெற்றுக்காட்டட்டும் என அவர் சவால் விடுத்துள்ளார்.

# சட்டவிரோத ஆட்கடத்தலை இலங்கையால் நிறுத்த முடியாது

## கூறுகிறார் அமைச்சர் ஹக்கீம்

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை இலங்கையினால் தடுத்து நிறுத்த முடியாது என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு ரீதியில் எடுக்கப்படும் நடவடிக்கைகளினால் மட்டும சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு நிரந்தரமான தீர்வினை எட்ட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.


சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் காத்திரமான பிரசாரம் செய்யப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளின் மூலம் கடந்த காலங்களில் பணம் திரட்டியதாகத் தெரிவித்துள்ளார்.

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யாழ். மாவட்ட வேட்பாளரும், சட்டத்தரணியுமான திரு. றெமிடியஸ்



**இனப்பிரச்சினை என்கின்ற சொற்பதமே இனங்களிற்கிடையிலான பிரச்சினையைத் தூண்டுகின்றது. இதைத் தவிர்ப்போம். இணக்கப்பாட்டினை முதலில் கட்டியெழுப்புவோம். இதுவே தீர்வுக்கு வழிவகுக்கும் - இனங்களிற்கிடையிலான பிரச்சினையல்ல. இது தமிழர்களிற்கான உரிமை கோரல்.**

## சமூக பொருளாதார கலாசார உரிமைகள் ஒரு நாட்டில் வலுப்படுத்தப்படும்போது அரசியல் குடியியல் உரிமைகள் அங்கு பெரும் பிரச்சினையாக இருக்காது

நேர்கண்டவர் : ஆர். கே. மேனன்

**கேள்வி:-** அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராகப் போட்டியிட்ட நீங்கள் இன்று ஆளும் கட்சி சார்பாகப் போட்டியிடுவதற்கு என்ன காரணம்?

**பதில்:** முள்ளிவாய்க்காலில் எமது போராட்டம் முடிவிற்கு வந்தவுடன் அரசு மாநகர சபைத் தேர்தலை வைத்தது. அப்போது யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பல இழப்புக்களைச் சந்தித்த நிலையில் எமது உறவுகள் இருப்பதை உணர்ந்த நான், எமது மக்களிற்கு ஏதோ ஓர் வழியில் உதவ வேண்டும் என முன்வந்தேன். இந்தக் கட்டத்தில் கூட்டமைப்பு மக்களின் உரிமைகள் தொடர்பாக கதைப்பவர்களாக இருந்தார்கள். ஆகவே அந்தக் கட்சியுடன் இணைந்து மக்களிற்கான அரசியல் உரிமைகளை வென்றெடுக்க முடியுமென்ற நம்பிக்கையில் சேர்ந்தேன். ஆனால், இணைந்த பின்பு அவர்களின் செயற்பாடுகள் என்னை வெறுப்பூட்ட ஆரம்பித்தது. மக்களின் எதிர்கால அரசியல் தொடர்பான திட்டங்களோ, அபிவிருத்தி தொடர்பான திட்டங்களோ எதுவுமே இல்லாத நிலை அவர்களிடம் காணப்பட்டது. அவர்களுடன் இருந்து வெறும் கோரிக்கைகளைத்தான் வைக்க முடியும். வேறு எதனையும் சாதிக்க முடியாது. மக்களின் இன்றைய தேவைகளை நிறைவு செய்ய முடியாது என்பதை உணர்ந்த நான் இந்த முக்கியத்துவம் வாய்ந்த மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்குத் தீர்மானித்தேன்.

**கேள்வி:-** தமிழ்க் கூட்டமைப்பிற்கும் உங்களிற்கும் இடையில் முரண்பாடுகள் எதனால் உருவானது? 13ஆவது அரசியல் திருத்தத்தை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா?

**பதில்:** அதில் தான் முரண்பாடுகளே ஆரம்பமானது. நான் கடந்த ஒன்றரை வருடங்களாக ஒன்றை வலியுறுத்தி வருகின்றேன். வீம்பு வார்த்தைப் பிரயோகங்களை நிறுத்திவிட்டு, இருக்கின்ற உரிமைகளைத் தக்கவைப்பதற்கும், அதில் இருந்து மேல் அபிவிருத்தி தொடர்பாகவும் சிந்திக்க வேண்டும். 13இல் உள்ள அரசியல் உரிமைகளைக் கொண்டு அதன் மூலம் மக்களிற்கு எதை சாதிக்க முடியும் எனச் சிந்திக்க வேண்டும். நாம் வெளிவிடும் எதிர்க் கோசங்கள் சிங்கள இனவாதிகளைத் தூண்டிவிட்டு அரசிற்கு அழுத்தங்களைக் கொடுத்து, இருக்கின்ற உரிமைகளையும் பறிக்கின்ற செயற்பாடாகவே அமையும். 13இல் இருக்கின்ற உரிமைகள் போதுமா? போதாதா, என்பது அதனை நடைமுறைப்படுத்திப் பார்க்கின்றபோதுதான் புரியும். ஆகவே, 13ஆவது திருத்தம் தொடர்பாக உருவாக்கப்பட்ட தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிக்க வேண்டும் என நான் வலியுறுத்தி வந்தேன். இவ்வாறு யதார்த்த பூர்வமாக சிந்தித்து நாம் செயற்படாவிட்டால் சிங்கள இனவாத சக்திகள் தலையெடுத்து உரிமைகளைத் துண்டாடுமென்றேன். இது தென்பகுதியில் தற்போது நடப்பதை கண்கூடாகப் பார்க்கின்றோம். இந்நிலை தொடருமானால் 13ஆவது திருத்தத்தை இல்லாது செய்வதற்கே அரசிற்கு அந்தப் பெரும்பான்மை சக்திகள் அழுத்தங்களைக் கொடுக்கும். இந்தக் கட்டத்தில் நாம் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் செயற்படக்கூடாது என கூட்டமைப்பினை வலியுறுத்தி வந்தேன்.

**கேள்வி:-** தமிழ்த் தேசிய தீவிரவாத அலையை மேவி, இணக்க அரசியல் கொள்கையைச் சொல்லி, தமிழ் மக்களின் ஆதரவினை உங்களால் பெற முடியுமா?

**பதில்:** இவ்வாறான சிந்தனைகள் தமிழ் மக்கள் மத்தியில் இருப்பதனால்தான் இந்த நிலைக்கு நாம் தள்ளப்பட்டு இருக்கின்றோம். துரோகிகள் என்பார்கள். அரசிற்கு அடிமையாகிவிட்டோம் என்பார்கள். சரணாகதியாகிவிட்டோம் என்பார்கள். கைக்கூலியாகிவிட்டோம் என்பார்கள் அல்லது ஒட்டுக்குழுக்கள் என்பார்கள். இவ்வாறான குற்றச்சாட்டுக்களூடாக மக்களைத் தேவையற்ற விதத்தில் சிந்திக்கவைத்து உண்மையான ஜனநாயகமென்ன? மக்களின் உரிமையென்ன? யதார்த்த அரசியலென்ன? என்பதை மக்களிற்கு மறைத்து வைத்திருக்கின்றார்கள். நாங்கள் மக்களின் தேவைக்காக குரல் கொடுக்கும்போது சலுகைக்காக குரல் கொடுக்கின்றோம் எனத் தவறாக பிரசாரம் செய்கின்றார்கள்.

**கேள்வி:-** தமிழர்களின் உரிமை என்பது இந்த ஜனநாயக நாட்டில் எது? பெரும்பான்மை அரசாட்சி மத்தியில் எதை நாம் எதிர்பார்க்க முடியும்?

**பதில்:** உரிமைகள் இரண்டு வகைப்படும்.

1) சமூக பொருளாதார கலாசார உரிமை

2) அரசியல் குடியியல் உரிமை.

எந்த இடத்தில் இந்தப் பொருளாதார சமூக பண்பாட்டு கலாசார உரிமைகள் நிறைவு செய்யப்படுகின்றதோ அந்த இடத்தில் இந்த அரசியல் குடியியல் உரிமைகள் எமக்கு பெரும்பிரச்சினையாக இருக்காது. சமதர்ம, சோசலிசவாதிகளின் கருத்துப்படி பொருளாதார உரிமைகள் பூரணப்படுத்தப்படும்போது அரசியலுரிமைகள் என்கின்ற தேவையே இருக்காது என்கின்றார்கள். ஏனெனில், பொருளாதார கலாசார உரிமைகள் நிறைவு செய்யப்படும்போது எல்லோரும் சம வாழ்வியல் உரிமைகளைப் பெறுவார்கள். இந்த இடத்தில் ஒருவரையொருவர் அடக்கியாள வேண்டுமென்கின்ற எண்ணம் வராது. பொறாமைப்படுகின்ற தன்மை உருவாகாது. இனவாத சிந்தனைக்கு அங்கு இடமிராது. 1966ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் இந்த உரிமைகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறு இரண்டாகப் பிரிக்கப்பட்டு பொருளாதார கலாசார உரிமைகள் உடனடியாக அனைத்து நாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. காரணம், இப்பொருளாதார சமூக கலாசார உரிமை வலுப்படுத்தப்படும் போது அரசியல் உரிமைகள் இலகுவாக பெறமுடியும் அல்லது அவ் உரிமை எமக்குத் தேவைப்படாமற்போகும் என்பதேயாகும்.

**கேள்வி:-** தமிழ் மக்களின் பிரச்சினை வேறு தமிழரசுக் கட்சி உட்பட்ட தமிழ்க் கூட்டமைப்பினது பிரச்சினை வேறு என்கின்ற பொதுவான கருத்து உள்ளது. இது தொடர்பாக நீங்கள் என்ன சொல்வீர்கள்?

**பதில்:** தமிழ் மக்கள் மத்தியில் அன்றாட வாழ்வியற் பிரச்சினைகள் பல துருவங்களில் இருக்கின்றன. குறிப்பாக, போராளிகள் என்றும், தியாகிகள் என்றும் போற்றிப் புகழ்ந்து தோள் மீது அன்று தூக்கிய நாம் இன்று புனர்வாழ்வு முகாம்களைவிட்டு சமூகத்தோடு வாழ வந்த போராளிகளை தூரவைக்கின்றோம். பாகுபாடு காட்டுகின்றோம். குறிப்பாக ஏன் இதைக் கூறுகின்றேன் என்றால் இவ்வாறான ஆழமான பல பிரச்சினைகள் நம் மத்தியில் இருக்கின்றன. இளைஞர்கள் வேலை வாய்ப்புகள் இன்றி விசனப்பட்டு இருக்கின்றார்கள். போரினால் எத்தனையோ பெண்கள் கணவரை இழந்து இருக்கின்றார்கள். எத்தனையோ பேர் அங்கவீனர்களாக இருக்கின்றார்கள். இவர்களின் எதிர்காலமென்ன? இன்று எத்தனையோ குடும்பங்களிற்கு மலசலகூடமில்லை. இவையெல்லாம் யாருக்கு விளங்கப்போகின்றது. இன்று தேசியம் பேசுவோருக்கும், உரிமைகள் தொடர்பாக பேசுவோருக்கும் இது பற்றி ஏதாவது அக்கறை இருக்கின்றதா? தமிழ் மக்கள் எதைப் பேசினாலும் ஏற்றுக்கொள்வார்கள். தங்கள் அரசியல் பயணத்தைப் பாதுகாப்பார்கள் என்பதை உணர்ந்து அதற்கேற்ப தமிழ்த் தேசியம் பேசுவதை மாத்திரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்து வருகிறது. ஆகவே, இவர்களது பிரச்சினை வேறு. தமிழ் மக்களின் பிரச்சினை வேறு என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, வரும் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறுமாய் இருந்தால் இருக்கின்ற உரிமைகளும் இல்லாமல் போகும் என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

**கேள்வி:-** யாரிடம் மாகாண சபை செல்ல வேண்டும் என்பதில், அறிவார்ந்து சிந்திக்கிறவர்களிடமும் பலவிதமான முரண்பட்ட கருத்துக்கள் உள்ளன. இது தொடர்பாக உங்களது கருத்து என்ன?


**பதில்:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறுமாய் இருந்தால் இங்கு முரண்பாடுகள்தான் மிச்சமாகுமே தவிர தமிழ் மக்களிற்கு எதுவும் சாதகமாகக் கிடைக்காது. இருக்கின்ற உரிமைகளும் இல்லாது போகும் சந்தர்ப்பமே உண்டு. ஆனால், ஆளும் கட்சிக்கு அதிகாரங்கள் கிடைக்கும் பட்சத்தில் கட்சி சார் தமிழ்த் தலைவர்கள் மூலம் முன்னெடுக்கப்படும் செயற்பாடு முரண்பாடுகளிற்கப்பால் வெற்றிபெறும் என்பதே எனது கருத்து. வடமாகாண சபைத் தேர்தல் வெற்றி கிடைத்த பின் ஏராளமான வெளிநாட்டு அரச நிதிகள் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படும் என்பது நூற்றுக்கு நூறு வீதம் உண்மை. ஆனால், அந்த நிதிகள் உள்வருவதற்கு மத்திய அரசு இடம்கொடுக்க வேண்டும். கூட்டமைப்பு புலம் பெயர் மக்களிடமிருந்து நிதிகளைப் பெறும் என்றால், அரசின் ஒத்துழைப்புக்களின்றி அதை எவ்வாறு பயன்படுத்த முடியும். ஆகவே, அரச கட்சி மாகாண சபையில் வெற்றி பெறுவதே ஆரோக்கியமானது என்பதே எனது கருத்து.

**கேள்வி:-** கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இதுவரை முன்பின் முரணாகக் கூறிய கருத்துக்களை மாகாண சபை பிரசாரங்களில் முன்னெடுக்க முடியாததொரு கட்டத்தில் புதிய முகமாகிய விக்னேஸ்வரனை முதன்மை வேட்பாளராக்கி, அதனூடாக புதிய கருத்துக்களை வைக்க முனைகின்ற தமிழரசுக் கட்சியின் தந்திரோபாயம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** 75 வயது நிரம்பிய விக்னேஸ்வரனை முதன்மை வேட்பாளராக நியமித்ததற்கான சம்பந்தரின் அடிப்படை நோக்கம், விக்னேஸ்வரனால் தேர்தல் பிரசாரத்திற்கான முன்வைக்கப்படும் கருத்தை தாங்கள் தங்களுடைய வாயால் மக்கள் மத்தியில் கூறினால் அடுத்த வருடம் நாடாளுமன்றத் தேர்தலில் தாங்கள் வெற்றிபெற முடியாது என்பதைக் கருத்திற் கொண்டே ஆகும். அவர்களுக்கு வடமாகாண சபை கைப்பற்றப்படுகின்றதா இல்லையா என்பதைவிட எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என்பதில்தான் அதிக அக்கறையில் உள்ளார்கள். ●

# அமெரிக்க இராணுவம் மனித உரிமையை பாதுகாக்கிறதா என ஆராயுங்கள்

## நவிப்பிள்ளையை கேட்கிறார் விமல்



(கொழும்பு)

இலங்கை சிறார்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றதா என்பதை ஆராயும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர், அமெரிக்க இராணுவம் மனித உரிமைகளைப் பாதுகாக்கின்றதா என்பதை ஆராய்வதில்லை என பொறியியல் நிர்மாண சேவைகள் மற்றும் வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தங்கொடுவ பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர், ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் ஈராக்கில், ஆப்கானில் அல்லது அமெரிக்காவில் மனித உரிமை நிலைமையை ஆராய்வதில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி வீழ்ச்சியடைந்துள்ளது என்பதால் எதிரிகள இல்லை எனக் கருத வேணடாம் எனக் குறிப்பிட்டுள்ள அவர், ரணிலும் கட்சியும் பலவீனமடைந்துள்ள போதிலும், தூதரகங்கள் பலமாக காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# பிரகீத் எக்னெலிகொடவை தனிப்பட்ட ரீதியாகத் தெரியாது

## அருந்திக எம்.பி.தெரிவிப்பு

பிரான்ஸில் எக்னெலிகொட என்ற பெயருடைய ஒருவரை மஞ்சுல வெடிவர்தன தனக்கு காட்டியதன் அடிப்படையில், எக்னெலிகொட பிரான்ஸில் இருப்பதாக நாடு திரும்பிய பின்னர் தாம் தெரிவித்திருந்ததாக புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக்க பெர்னாண்டோ நேற்றுமுன்தினம் நீதிமன்றத் தில் தெரிவித்தார்.

பிரகீத் எக்னெலிகொடவை தனிப்பட்ட ரீதியாக தாம் அறிந்திருக்கவில்லை எனவும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஹோமாகம நீதவான் லு.சீ.. நெலும்தெனிய முன்னிலையில், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையில் சாட்சியமளித்தபோதே ஐக்கிய மக்கள் சுகந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ இவ்வாறு கூறியுள்ளார்.

# பல்வேறு விடயங்கள் குறித்து பிரிட்டன் தூதுவர் - பசில் பேச்சு



(கொழும்பு)

பிரித்தானிய உயர்ஸ்தானிகருடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

பொருளதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கும், பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கீனுக்கும் இடையில் இந்தச் சந்திப்பு நடாத்தப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மீள்குடியேற்றம், வடக்கு அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளுக்கான ஏற்பாடுகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அமர்வுகளில் பங்கேற்கும் நாடுகளுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்து அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

# இந்திய புலனாய்வு அறிக்கை முற்றாக மறுக்கும் இராணுவம்

(கொழும்பு)

பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்பான லஸ்கர்-ஈ-தைபா, தமிழ் நாட்டின் மீது தாக்குதல் நடத்த இலங்கையை தளமாக பயன்படுத்தவுள்ளது என இந்திய புலனாய்வு பிரிவு வெளியிட்டதாகக் கூறப்படும் புலனாய்வு அறிக்கையை மேற்கோள் காட்டி இந்திய ஊடகங்கள் வெளியிட்ட செய்தியை இலங்கை இராணுவம் மறுத்துள்ளது.

இலங்கைத்தீவு முழுவதுமே பாதுகாக்கப்பட்டுள்ளது எனவும் எந்த ஒரு ஆயுதக் குழுவும் இவ்வாறு தாக்குதல் நடத்த முடியாது எனவும் இராணுவம் கூறியுள்ளது.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு நடக்க முடியாது என பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

# அமெரிக்காவின் செயற்பாடு அதிருப்தியில் இராணுவம்

(கொழும்பு)

அமெரிக்காவின் நடவடிக்கைகள் குறித்து இராணுவம் அதிருப்தியை வெளியிட்டுள்ளது. முக்கியமான சர்வதேச நிகழ்வு ஒன்றில் இலங்கையின் இரண்டு சிரேஸ்ட இராணுவ அதிகாரிகளுக்கு சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மனித உரிமை குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் குறித்த உயர் இராணுவ அதிகாரிகளுக்கு இந்த சந்தர்ப்பம் மறுக்கப்பட்டிருந்தது. சந்தர்ப்பம் நிராகரிக்கப்பட்ட ஒரு அதிகாரிக்கு ஏற்கனவே நிகழ்வு ஒன்றில் பங்கேற்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

பின்னர் அமெரிக்க அரசாங்கம் அவர் மீதான குற்றச்சாட்டை வாபஸ் பெற்றுக் கொண்டதாகவும், தற்போது மீண்டும் சர்வதேச நிகழ்வொன்றில் பங்கேற்பதற்கு குறித்த அதிகாரிக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சில தரப்பினர் இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்த முயற்சித்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வினை நேரடியாகவோ மறைமுகமாகவோ சீர்குலைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கண்காணித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

# அகதிகளை அழைத்துவர அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை மீண்டும் இலங்கைக்கு கொண்டுவர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அகதிகள் தொடர்பான ஆணையாளர் மற்றும் வெளிவிவகார அமைச்சருடன் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

யுத்த காலத்தின்போது இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்ற இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வந்து, இவர்களை தமது சொந்த இடத்திலேயே குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் குணரத்ன வீரக்கோன் தெரிவித்தார்.

# இந்தியாவுடன் முரண்பாடா? இல்லை என்கிறது அரசு



(கொழும்பு)

இந்தியாவுடன் எவ்வித முரணபாடுகளும் கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வில் பங்கேற்பது தொடர்பில் இந்தியா எவ்வித சர்ச்சைகளையும் கிளப்பவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமர்வுகளை புறக்கணிக்கப் போவதாக இந்தியா எவ்வித அறிவிப்பையும் விடுக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை நிலைமைகள் மோசமடைந்துள்ளதாகவும் இதனால் அமர்வுகளை பகிஷ்கரிக்கு மாறும் தமிழகத்தின் முக்கிய அரசியல் கட்சிகள், இந்திய பிரதமரிடம் கோரியுள்ளனர்.

அமர்வுகளுக்கான ஏற்பாடுகள் திருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வு ஏற்பாட்டுப் பணிகளை கண்காணிப்பதற்காக இலங்கைக்கு விஜயம் செய்திருந்த உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் கனேடிய பிரதிநிதிகளும் உள்ளடங்கியிருந்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமர்வுகளின் போது போக்கு வரத்து நெரிசல் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் எதுவும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# எதிரணி பலவீனமாக உள்ளதால் ஆளும் கட்சியில் விருப்புவாக்கு போட்டி

## என்கிறார் அமைச்சர் சுசில்

பலவீனமடைந்திருக்கும் எதிர்க் கட்சியுடன் போட்டியில்லாததன் காரணமாகவே, ஆளும் கட்சி வேட்பாளர்களிடையே விருப்பு வாக்குப் போட்டிகள் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்துள்ளார்.

எனினும் நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும் நடாத்துவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் நாயகம் அமைசசர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்கள் பலர் போட்டியிடுகின்றனர்.

இதனால் தேர்தல் நீதியாகவும, சுதந்திரமாகவும் நடைபெறுமா என எதிர்க்கட்சியின் பிரதம கொரடா ஜோன் அமரதுங்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை வரலாற்றைப் பொறுத்தவரையில் அரசியல் தலைவர்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்கள், தேர்தலில் போட்டியிடுவது புதிய விடயமல்ல. இதற்கு எமது வரலாற்றில் பல உதாரணங்கள் காணப்படுகின்றன.

இலங்கையில் மாத்திரமின்றி ஆசிய பிராந்தியத்திலும், அமெரிக்கா உள்ளிட்ட பல உலக நாடுகளிலும் குறித்த நிலை காணப்படுகின்றது. இதற்காக தேர்தல் நீதியாகவும், சுதந்திரமாகவும் நடைபெறாதென குறிப்பிட முடியாது.



மேலும் ஆளும் கட்சியானது தேர்தல் சட்டவிதிமுறைகளுக்கு அப்பால் சென்று எவ்வித தேர்தல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. தேர்தல்கள் திணைக்களத்தின் அனுமதியுடனே அனைத்து பிரசார கூட்டங்கள் மற்றும் கட்சி அலுவலகங்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த மேலும் தெரிவித்துள்ளார்.

# வர்த்தக நிலையங்களினது உரிமை மாற்றம் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக் குட்பட்ட வர்த்தக நிலையங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் வர்த்தகர்களது உரிமை மாற்றம் தொடர்பிலான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தர் தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் மேற்படி கலந்துரையாடல் நேற்று முன்தினம்இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த வர்த்தகர்கள் பாதிக்கப்படாத வகையில் வர்த்தக நிலையங்கள் உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டுமென அமைச்சர் ஏற் கனவே மாநகர சபை முதல்வர் மற்றும் ஆணையாளர் ஆகியோ ரிடம் பணிப்புரை விடுத்த நிலையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் வர்த்தகர்களது கோரிக் கைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர், துறை சார்ந்தோருடன் கேட்டறிந்து கொண்டார்.

அதன்பிரகாரம் யாழ்.மாநகர சபையும் வர்த்தகர்களும் ஓர் இணக்கப்பாட்டிற்கு வருவதன் ஊடாக இந்த உரிமை மாற்றம் தொடர்பான பிரச்சினைக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் எதிர்வரும் சனிக்கிழமை இதுதொடர்பில் துறைசார்ந்தோருடன் ஆராய்ந்து உரிய தீர்வு எட்டப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.



இதில் அமைச்சர் கருத்துத் தெரிவிக்கும் போது கடந்த 20 வருடங்களுக்கு மேலாக மாகாணசபை முறையை நாம் வலியுறுத்தி வருகின்றோம் என்பதுடன், இதனூடாக வளமான செல்வங்கொழிக்கின்ற பகுதியாக எமது பகுதியை மாற்றியமைக்க முடியுமென்ற நம்பிக்கை எமக்குள்ளது. அதுமட்டுமல்லாமல் அரசியல் பிரச்சினைக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு எமக்கு விருப்பம் மட்டுமல்லாமல் ஆற்றலும் எம்மிடம் மட்டுமே உள்ளது என்றும் சுட்டிக் காட்டினார்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, மாநகர ஆணையாளர் பிரணவநாதன், வர்த்தக சங்க செயலாளர் ஜனத்குமார், ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒருங்கிணைப்பாளருமான கே.வி குகேந்திரன் (ஜெகன்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மகா-கும்பாபிஷேகம்

(வரணி)

இயக்கச்சி முகாவில் பறையோம்பிக்குளம் (வில்வ குளம்)திருவருள்மிகு ஸ்ரீ ராஜகணபதி திருக்கோவில் புனருத்தாரண பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஸ்டா மகா கும்பாபிசேக பெருந்திருவிழா எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது. எண்ணெய்க் காப்பு 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளது. (130)

✶ ✶ ✶ ✶ ✶

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நுணாவிற்குளம் அருள்மிகு கண்ணகைஅம்பாள் தேவஸ்தான மகாகும்பாபிஷேகப்பெருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் நாளை சனிக்கிழமை பகல் 12.30 மணிமுதல் அடியார்களின் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். கும்பாபிஷேக கிரியைகளை உரும்பிராய் சிவஸ்ரீ க.மு.சோமசுந்தரக் குருக்கள் ஆற்றவுள்ளார். இணைக்குருக்களாக புன்னாலைக் கட்டுவன் சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் கிரியைகளை ஆற்றவுள்ளார்.

இதில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு லக்ஷ்மி ஹோமம் இடம்பெவுள்ளதுடன் மாலை 4மணிக்கு சுமங்கலி பூசை ,திருவிளக்கு பூசை என்பன இடம்பெறவுள்ளது. அடியார்கள் தமது பெயர்களை ஆலயத்தில் பதிவு செய்யுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ)

# பணமோசடியில் ஈடுபட்ட நபருக்கு விளக்கமறியல்

வெளிநாட்டுக்கு வேலைக்கு அனுப்புவதாகக் கூறி பணம் மோசடி செய்த நபரை நீதி மன்றம் விளக்கமறியல் வைக் குமாறு உத்தரவிட்டுள்ளது.

வெள்ளாம் முள்ளிவாய்க்கால் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் 4 இலட்சத்து 72ஆயிரம் ரூபா பணத்தினை வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்புக்காக அனுப்பு வதாக கூறி ஏமாற்றியதாக முள்ளியவளையைச் சேர்ந்த நபர் ஒருவர் முள்ளியவளை பொலி சாருக்குமுறைப்பாடு செய்தார் இதனைத் தொடர்ந்து முள்ளிய வளைப் பொலிசாரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டு நீதி மன்றில் ஆஜர்படுத்திய போது சந்தேகநபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி மாணிக்க வாசகர் கணேசராஜா உத்தர விட்டுள்ளார்.

சந்தேக நபர் தான் குறித்த பணத்தை முறைப்பாட்டாளருக்கு தவணை முறையில் செலுத்து வதாக மன்றில் உறுதியளித்து ள்ளார். (170)

# ஒளிராத வீதி மின்விளக்குகள் விபத்துக்கள் ஏற்படுவதாக விசனம்

(சுன்னாகம்)

கே.கே.எஸ் வீதியால் மருதனார் மடத்தில் இருந்து மல்லாகம் சந்தி வரை மின்கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் இரவு நேரத்தில் ஒளிராமையால் வீதி வெளிச்சமின்றி இருப்பதுடன் இரவு நேரங்களில் பயணம் செய்வோர் பெரும் கஸ்ரங்களை எதிர்நோக்குவதுடன் விபத்துக் களையும் சந்திப்பதாக தெரி விக்கின்றனர்.

குறித்த வீதிப்பகுதியில் மின் கம்பங்களில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் அவை ஏன் ஒளிர்வதில்லை? என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். சுன்னாகம் இலங்கை வங்கி கிளை, சுன்னாகம் பொது நூலகம் ஆகியவற்றிற்கு முன்னால் உள்ள மின் கம்பங்களின் மின்விளக்குகள் ஒளிர்கின்ற நிலையில் இவ் வீதியில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகளையும் ஒளிரச் செய்ய உரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (66)

# கட்டாக்காலி நாய்களால் அவதியுறும் மல்லாகம் மக்கள்

(மல்லாகம்)

மல்லாகம்,புகையிரத வீதிப் பகுதியில் நாய்களின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கட்டாக்காலிகளாக காணப்படும் இந்நாய்களினால் பலர் நாய்க்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரத்தில் மட்டும் நான்கு பேர் நாய்க்கடிக்கு உள்ளாகியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, வீட்டு வளவில் கட்டி வைக்கப்பட்டிருந்த ஆடொன்று நாய்களின் கடிக்கு இரையாகி இறந்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.இது தொடர்பில் பிரதேச சபை உரிய கவனம் செலுத்த வேண்டும் என பிரதேச மக்க்ள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழாவில் யாழ்.திருமறைக்கலாமன்ற இயக்குனர் வணபிதா மரியசேவியர் அடிகளாருக்கு யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா விருது வழங்குவதைக் காணலாம்... (105)

# திரிபோஷா வழங்கல்

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் உள்ள இரண்டு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தற்போது திரிபோஷா வரணிப்பிரதேச வைத்தியசாலையில் வைத்து குடும்ப நல உத்தியோகத்தரால் வழங்கப்படுகிறது. (50)

# முரசின் இன்றைய பலன்




(23.08.2013 வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் ஆவணி மாதம் 07 ஆம் திகதி.
பூரட்டாதி நட்சத்திரம் மு.ப 11.55 வரை,பின் உத்தரட்டாதி
திருதியை திதி,சித்தநாமயோகம்
இராகுகாலம 10.35- 12.05 வரை. சுபநேரம 06.05- 07.35 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | ஒளித்தெறிப்பு ஸ்ரிக்கர் ஒட்டியிருப்பதனால் விபத்தினின்றும் விலகுதல்,வாதம், விதண்டாவாதத்தினால் முறுகல் நிலை, ஆவணம் இன்மையால் தண்டம். |
| ரிஷபம் | விவசாயத்தை கைவிட்டு வியாபாரம் செய் யும் உத்தேசம்,காது நோய் குணமடையாதலால் கவலை,பணவரவு. |
| மிதுனம் | சத்தியத்தையும் தர்மத்தையும் கடைப்பிடித்ததனால் நேர்மை, விஷக்கடியை அலட்சியம் செய்ததால் ஏற்பு நிலை. சொல்வழி கேளாத பெண் பிள்ளையால் மானக்கேடு. |
| கடகம் | சூதாட்டத்தினால் நண்பர் உறவு பாதிப்பு, வெளி ச்சம் இன்றிச் சென்றதால் விபத்து, புதிய முயற்சி ஒன்று ஆரம்பிக்கும் திட்டம். |
| சிம்மம் | அரசியல் வாதியினால்தொழில் பெற ஆதரவு, நோய் குணமடைய அயல் நாடு செல்லும் திட்டம். |
| கன்னி | பழுதான உணவுப்பொருளால் உடல்நலப்பாதிப்பு, வங்கிக் கடன் பெற முகாமையாளருடன் தொடர்பு,வீடு பெற அலைச்சல் தக்கவைப்பு, |
| துலாம் | பறிமுதலான வானங்களை வாங்கும் ஆவல், இடப்பக்க உறுப்பு பாதிக்கப்படல்,மருத்தீடு விழுத்த வைத்தியரை நாடல், ஆலயத்தில் உடைமை பறி கொடுக்கும் அச்சம். |
| விருச்சிகம் | சமாதானம் பேச முன்வந்து காயமேற்படல், வாடகைக்கு கேட்கச் சென்றதால் துக்கம்,கடனால் அவமானம், நண்பரின் உதவி பொறுத்த கட்டத்தில் கிட்டுதல். |
| தனுசு | தடை செய்யப்பட்ட பொருட்களை பதுக்கியதனால் தண்டம்,ஒலிபெருக்கிப் பாவனையால் சச்சரவு,மின்சார சீர்கேட்டால்வியாபாரம் பாதிப்பு, இனிக்கப்பபேசி உதவிபெறும் சாமர்த்தியம். |
| மகரம் | ஞாபக இழப்பினால் பொருட்களை தவறவிடும் அபாயம்,குடும்பப் பிணக்கு தீர்த்து வைக்க பெரியோரை நாடல், மாமியார் மருமகள் உறவில் விரிசல், நிற்பாட்டியிருந்த தொழில் மீண்டும் கிடைக்கும் செய்தி. |
| கும்பம் | அவசரக்கடுக்கையால் ஆபத்தேற்படல், பதவி முன்னேற்றக்கடிதம் கிட்டல்,புதிய மனை கட்டுந்திட்டம். |
| மீனம் | ஆபத்தான வேளையில் துணிவுடன் செயற்பட்டதனால் வெற்றி,திருட்டு மின்சாரத்தால் தண்டம், சந்தேகக் கோடு சந்தோஷக்கேட்டைத்தருதல், புலனடக்கத்தால் தவறினைக் கைவிடல். |

# புரொட்டை அழவையுங்கள்



(சிட்னி)

பிடி ஆனது தெரிந்தும் வேண்டுமென்றே களத்தை விட்டு வெளியேற மறுத்த இங்கிலாந்து வீரர் ஸ்ரூவெர்ட் புரொட்டை அடுத்த ஆஷஸ் தொடரின் போது அழவைக்க வேண்டும் என்று அவுஸ்ரேலிய இரசிகர்களை பயிற்சியாளர் டரன் லீமன் கேட்டுக் கொண்டுள்ளார்.

நொட்டிங்காமில் கடந்த மாதம் நடந்த அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் கிரிக்கெட் தொடரின் முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து வீரர் புரொட், பிடி ஆகியும் நடுவர் விரலை உயர்த்தாததால் வெளியேற மறுத்த விவகாரம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

இந்த நிலையில் புரொட் மீது அவுஸ்ரேலிய அணியின் பயிற்சியாளர் டரன் லீமன் திடீரென சூடான தாக்குதலை தொடுத்திருக்கிறார். அவுஸ்ரேலிய வானொலிக்கு லீமன் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

காலம் கடந்தாலும் கூட் புரொட்டின் பிடியை அவுஸ்ரேலிய வீரர்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள். இது ஒரு அப்பட்டமான மோசடி. அவுஸ்ரேலிய மக்களும் இதை மறக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். எல்லா பிடிகளுக்கும் உடனே களத்தைவிட்டுத் திரும்ப வேண்டும் என்று சொல்லவில்லை. சிலவற்றில் சந்தேகம் இருக்கும். ஆனால் துடுப்பில் உரசியபடி முதல்ாவது ஸ்லிப்பில் பிடியாகும் போது வெளியேற மறுப்பதை ஜீரணிக்க முடியாது.

அடுத்த ஆஷஸ் தொடர் எங்கள் நாட்டில் கோடை காலத்தில் நடைபெறவுள்ளது. அப்போது எங்களது இரசிகர்கள் அவருக்கு சரியான பதிலடி கொடுப்பார்கள் (கிண்டல், கேலி உள்ளிட்டவை மூலம் வெறுப்படைய செய்து) என்று நம்புகிறேன். அந்தத் தொடரின் போது புரொட் கண்ணீர் வடித்தபடி தான் நாட்டிற்கு திரும்புவார் என்று நம்புகிறேன்.

பந்து துடுப்பில் உரசிக் கொண்டு தான் சென்றது என்பது புரொட்டுக்கு நன்கு தெரியும். நடுவர்களின் மோசமான தீர்ப்புத் தான், அவரை முட்டாள் போன்று ஆக்கி விட்டது. ஆனால் இப்போது அவர் வெளிப்படையாக கூறி வரும் கருத்துகள் அபத்தமானது. அதனால் தான் அவர் மீது எங்கள் நாட்டு மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, லீமனின் கருத்திற்கு ஸ்ரூவெட் புரொட் பதிலடி கொடுத்துள்ளார். இதில் அவர் தெரிவித்திருப்பதாவது, ஆமாம்... பந்து துடுப்பில் பட்டது உண்மை தான். ஆனால் இந்த தொடரை நீங்கள் பார்த்தீர்களே என்றால், சில அவுஸ்ரேலிய வீரர்களும் அதாவது டேவிட் வோர்னர், கஜாஜா, ஸ்டீவன் ஸ்மித், கிளார்க் ஆகியோரும் பந்து துடுப்பில் உரசி பிடியானபோதும் உடனடியாக வெளியேறாமல் இருந்ததை பார்த்திருக்கலாம். இந்த வகையிலான பிடிகளில் நிறைய வீரர்களுக்கு இது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கத்தான் செய்கிறது. ஆனால் என்னை மட்டும் குறி வைத்து வசைப்பாடுவது ஏன்? எனது துடுப்பில் உரசிய பந்து, விக்கெட் கீப்பரின் கையுறை பக்கமாக தாண்டி முதலாவது ஸ்லிப்புக்கு சென்றது. உடனே நான் எதிர்முனையில் நின்ற சக வீரர் இயன் பெல்லிடம் இது பற்றிப் கேட்டேன். அதற்கு இங்கு என்ன நடந்தது, எனக்கு எந்த சத்தமும் கேட்கவில்லையே என்று கூறினார். பந்து வீசிய ஆஷ்டன் அகரும், பந்து துடுப்பில் உரசியது என்று உறுதியாக சொல்லவில்லை. எல்லோருக்கும் குழப்பம் இருந்தது. அதனால் தான் தொடர்ந்து களத்திலேயே இருப்பது என்று முடிவு செய்தேன் எனத் தெரிவித்தார்.

# ஹோலி மீது வழக்கு

(புதுடில்லி)

விளம்பர ஒப்பந்தத்தை ஹோலி மீறிவிட்டதாக நைகி நிறுவனம் அவர் மீது வழக்குத் தொடர்ந்துள்ளது.

கர்நாடக உயர்நீதிமன்றத்தில் நைகி தொடர்ந்த வழக்கை விசாரித்தார் நீதிபதி "ஹலுவாடி ஜி.ரமேஷ் அடுத்த 4 மாதங்களுக்கு நைகி ஒப்பந்த விதிகளின் படி நடந்து கொள்ளவேண்டும் என்று ஹோலிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு வரை நைகி நிறுவனத்தின் விளம்பரத் தூதுவராக தான் நீடிக்க முடியாது என்று ஹோலி மறுத்ததாக நைகி நிறுவனம் வழக்குத் தொடர்ந்தது.

முதன் முதலாக நைகி நிறுவனம் ஹோலியை ஜனவரி 1, 2007 முதல் 31 டிசம்பர் 2007 வரை ஒப்பந்தம் செய்தது. பின்னர் 2008 முதல் 2013 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது.

ஒப்பந்த விதிகளின் படி ஒப்பந்தத்தை ஒரு ஆண்டு மேலும் நீடிக்கலாம் அதாவது ஜூலை 31, 2014ஆம் ஆண்டு வரை ஹோலி விளம்பர தூதராக இருக்கவேண்டும் என்பதே நைகி தரப்பு வாதமாகும்.

இதற்காக 1.42 கோடிக்கு ஹோலி ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஆனால் இதற்கிடையே ஜுன் 6, 2013இல் ஹோலி நைகி நிறுவனம் ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதில் ஏகப்பட்ட குளறுபடிகள் செய்ததாகக் குற்றம்சாட்டி, ஒப்பந்தத்தை நீடிக்க முடியாது என்று ஹோலி நைகிக் கடிதம் அனுப்பியுள்ளார்.

முன்னதாக ஹோலி நைகி நிறுவனத்திடம் ஏதோ எதிர்பார்த்தார் என்றும் அது நிறைவேறவில்லை என்ற ஆத்திரத்தில்தான் இப்படிச் செய்துள்ளார் என்றும் நைகி நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது.

எனவே இப்போதைக்கு, இந்த வழக்கு முடியும் வரை அல்லது இந்த விவகாரத்தில் சுமுக தீர்வு ஏற்படும் வரை ஹோலி பிற நிறுவனங்களுக்கு புதிதாக ஒப்பந்தம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# மறுமணம்



(லாகூர்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் வாசிம் அக்ரம் (வயது-47) தனது 30 வயதான அவுஸ்ரேலிய காதலி தோம்சன் ஷனீராவை மணந்ததாக நேற்று முன்தினம் அறிவித்தார். லாகூரில் கடந்த 12ஆம் திகதி எளிமையாக நடந்த விழாவில் நான் க்ஷனீராவை திருமணம் செய்துகொண்டேன். இது எனக்கு, எனது மனைவி, மகன்களுக்கும் ஒரு புதிய வாழ்க்கையின் தொடக்கமாக இருக்கிறது என்றும் அவர் கூறினார். அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த முன்னாள் மக்கள் தொடர்பு ஆலோசகரான காதலி ஷனீராவிடம் அக்ரம் திருமணம் செய்துகொள்வது குறித்து கடந்த மாதம் பேசினார். இதனையடுத்து இருவீட்டர் சம்மதத்துடன் சென்ற அவர்கள் திருமணம் செய்துகொண்டனர். அவரது முதல் மனைவி ஹூமா நோய்வாய் பட்டநிலையில் 2009ஆம் ஆண்டு சென்னையில் இறந்தார். உடல் நிலை சரியில்லாத தனது தந்தையின் விருப்பத்திற்கு ஏற்பவும், திருமணம் செய்து கொள்ளாமல் இருவர் சேர்ந்து வாழ்வது இஸ்லாத்துக்கு எதிரானது என்று மதபோதகர் கூறியதை அடுத்தும் இந்தத் திருமணம் நடந்தது என்று கூறப்படுகிறது.

# உலகக் கிண்ண கால்பந்தாட்டம் நுழைவுச் சீட்டிற்கு முண்டியடிப்பு




(லண்டன்)

உலக கிண்ணக் கால்பந்து போட்டிக்காக, 7 மணி நேரத்தில் 10 இலட்சம் பேர் நுழைவுச் சீட்டு வேண்டுமென கேட்டு விண்ணப்பித்துள்ளனர்.

சர்வதேசக் கால்பந்து கூட்டமைப்பு (பிபா) சார்பில், 20ஆவது உலக கிண்ணக் கால்பந்துத் தொடர் அடுத்த ஆண்டு (2014) ஜுன் 12 முதல், ஜூலை 13 வரை, பிரேசிலில் நடைபெறவுள்ளது. இதற்கான நுழைவுச் சீட்டு விற்பனை, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

லீக் போட்டிகளுக்கான நுழைவுச் சீட்டு ஒன்றின் விலை குறைந்தது ரூ. 5750 முதல் ரூ. 11,000 வரை விற்கப்படும்.விலகல் முறையிலான போட்டிகளுக்கு ரூ. 28,000 மாக முடிவு செய்யப்பட்டுள்ளது. இறுதிப் போட்டிக்கு ரூ. 63,000 வரை இருக்கும் எனத் தெரிகிறது.

இருப்பினும், இப்போதிருந்தே கால்பந்து இரசிகர்கள் நுழைவுச்சீட்டுக் கேட்டு விண்ணப்பிக்கத் ஆரம்பித்துவிட்டனர். சாவ் பாவ்லோ மைதானத்தில் நடக்கவுள்ள ஆரம்பப் போட்டிக்கு (2014, ஜுன் 12) 1,68,000இற்கும் அதிகமானோர் நுழைவுச் சீட்டு கேட்டுள்ளனர். ரியோ டி ஜெனிரோவில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்கு (2014, ஜூலை 13), 1,65,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்.இதில்பெரும்பாலானவை பிரேசில், ஆர்ஜென்ரீனா, அமெரிக்கா, சிலி மற்றும் இங்கிலாந்தில் இருந்து வந்தவையாம். இதனால், யாருக்கு நுழைவுச் சீட்டு என்பதை குலுக்கல் முறையில் முடிவு செய்யவுள்ளனர்.

# நடன நிகழ்வால் வந்தது விபரீதம்

(லாகூர்)

சிம்பாப்வே செல்லும் பாகிஸ்தான் அணி இரண்டு டெஸ்ட், இரண்டு ருவென்ரி-20, மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் ருவென்ரி-20 இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் சிம்பாப்வே புறப்படுவதற்கு சில மணி நேரத்திற்கு முன் லாகூரில் உள்ள திரையரங்கு ஒன்றில் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் யுனைட்கான், அன்வர் அலி, ஆசாத்அலி ஆகியோர் நடிகைகளின் ஆபாச நடன நிகழ்ச்சியைப் பார்த்துள்ளனர். இதனைத் தனியார் தொலைக்காட்சி ஒன்று படம் பிடித்து அம்பலப்படுத்தியது.

இது குறித்து அங்குள்ள நடனப் பெண் ஒருவர் கூறுகையில் யுனைட் கானை இங்கு பார்த்தது மிகவும் வியப்பாக இருந்தது என்றார். சமீபத்தில் அணியின் முகாமையாளராக நியமிக்கப்பட்ட மொயின்கான், வீரர்களின் ஒழுக்கம் குறித்துப் பேசி வரும் நிலையில் இப்பிரச்சினை பூதாகரமாகியுள்ளது.

# விலகல்

தோற்பட்டை காயம் காரணமாக அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரிலிருந்து விலகுவதாக ரென் னிஸ் கவர்ச்சிக் கன்னி மரியா ஷரபோவா அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்சிலாம் போட்டியான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 9ஆம் திகதி வரை நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் அமெரிக்க ஓப்பன் போட்டியில் இருந்து முன்னணி வீராங்கனையான மரியா ஷரபோவா (ரஷ்யா) விலகியுள்ளார். வலது தோற்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் அமெரிக்க ஓப்பன் போட்டியில் ஆடவில்லை. இதைப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

ஷரபோவா 2006ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க ஓப்பனில் சம்பியன் பட்டம் பெற்று இருந்தார். காயம் காரணமாக அவர் அமெரிக்க ஓப்பனில் விலகுவது இது 2ஆவது முறையாகும். இதற்கு முன்பு 2008ஆம் ஆண்டு விலகி யிருந்தார். சமீபத்தில் நடந்த விம்பிள்டனில் அவர் 2ஆவது சுற்றிலேயே அதிர்ச்சிகரமாக தோற்று வெளியேறியிருந்தார். ஷரபோவா உலக தர வரிசை பட்டியலில் 3ஆவது இடத்திலுள்ளார்.



# மீண்டு வருவேன்

(வெலிங்டன்)

எனக்கு விதிக்கப்பட்ட தடை காலம் முடிந்தவுடன், மீண்டும் நியூசிலாந்து அணியில் இடம்பிடித்து எனது திறமையை வெளிப்படுத்துவேன் என ஜெசி ரைடர் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் நடந்த உள்ளூர் அணிகளுக்கு இடையிலான போட்டி (வெலிங்டன் அணி) நடக்கவிருந்தது. இதற்கு, இரண்டு நாட்களுக்கு முன் உடல் எடையைக் குறைக்கும் மருந்தை ரைடர் எடுத்துக்கொண்டுள்ளார். இதில் தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து இருந்ததாக பிரச்சினை கிளம்பியது.

இதனையடுத்து, இவருக்கு ஒக்ரோபர் மாதம் வரை எந்த விதமான போட்டியிலும் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது. இது குறித்து ரைடர் கூறுகையில், இந்த ஆண்டில், எனக்கு என்ன நடந்தது என்பதே தெரியவில்லை. தற்போது விதித்துள்ள தடைக்குப்பின், மீண்டும் போட்டியில் பங்கேற்பேன். நியூசிலாந்து அணி சார்பில் விளையாடுவதை, என் இலக்காக வைத்துள்ளேன். தவிர, அணி கப்டன் பிரண்டன் மக்கலம், பயிற்சியாளர் மைக் ஹெசனிடம் தொடர்பில் உள்ளேன் என்றார்.

**விளையாட்டுச் செய்திகள்**

# மட்டுவில் வளர்மதி, கச்சாய் ஸ்ரீமுருகன் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி

(மட்டுவில்)

மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரதேச மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு மட்டுவில் வளர்மதி, கச்சாய் ஸ்ரீமுருகன் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் தென்மராட்சிப்பிரதேச கரப்பந்து அணிகளுக்கிடையிலான மாபெரும் கரப்பந்தாட்டப் போட்டி மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் இரண்டு காலி றுதிப் போட்டிகள் இடம்பெற்றன. இதற்கு முன்னர் கெருடாவில் ஐங்கரன் மற்றும் கைதடி குமரன் அணிகளுக்கிடையில் முதல் போட்டி இடம் பெறவிருந்தது. இப்போட்டியில் கெருடாவில் ஐங்கரன் அணி சமூகமளிக்காத காரணத்தால் கைதடி குமரன் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலம் கைதடி குமரன் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் கச்சாய் ஸ்ரீமுருகன் அணியும், மீசாலை சீமா ஏ அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கச்சாய் ஸ்ரீமுருகன் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி அணியும், கைதடி குமரன் அணியும் மோதின. இதில் சிறப்பான முறையில் ஆடிய மட்டுவில் வளர்மதி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. அரையிறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (118)

# உடற்கல்வி ஆசிரியர்களுக்கு நாளை 2ஆம் கட்டப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி ஆசிரியர்களுக்கான இரண்டாம் கட்டப் பயிற்சி முகாம் நாளை களுத்துறையில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண கல்வி வலயங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உடற்கல்வி ஆசிரியர்களுக்கான இரண்டாம் கட்டப் பயிற்சி முகாம் களுத்துறை துன்ரட்ட தேசிய கல்வியியற் கல்லூரியில் நாளை இடம்பெறவுள்ளது.

பாடசாலைகள் மட்டத்தில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் முகமாக இலங்கை கல்வி அமைச்சினால் இப் பயிற்சி முகாம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் கரப்பந்து, வலைப்பந்து, மெய்வல்லுநர் போட்டிகளுக்கான விசேட பயிற்சிகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (42)

# இறுதியில் மன்னார் சென். லூட்சியஸ்

(நெல்லியடி)

வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு மன்னார் பள்ளிமுனை சென். லூட்சியஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வடமாகாண அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்டப் போட்டித் தொடரை நடாத்தி வருகின்றது.

அணிக்கு ஏழு பேர் கொண்ட இக்கால்பந்துப் போட்டித் தொடர் வதிரி டையமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் கடந்த 18ஆம் திகதி இரண்டாவது அரையிறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் மன்னார் பள்ளிமுனை சென். லூட்சியஸ் மற்றும் இளவாலை யங்ஹென்றிஸ் அணிகள் மோதின. இதில் முற்பாதி ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. இருப்பினும் மன்னார் சென். லூட்சியஸ் அணியின் ஆதிக்கம் அதிகம் காணப்பட்டது. இறுதியில் மன்னார் சென். லூட்சியஸ் அணி 5-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது. ஏற்கனவே, நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணியை வீழ்த்தி நாவாந்துறை சென். மேரிஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டி அடுத்த மாதம் 14ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)

# இணுவில் அறிஞர் வி.க.வின் மாபெரும் தாச்சி இறுதிப் போட்டியில் மயிலிட்டி வள்ளுவர்

(இணுவில்)

இணுவில் அறிஞர் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாவட்ட தாச்சிப் போட்டியில் த்ரில் வெற்றிபெற்று மயிலிட்டி வள்ளுவர் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் இணுவில் அறிஞர் விளையாட்டுக்கழகத்தினால் மாவட்ட தாச்சி அணிகளுக்கிடையிலான மாபெரும் தாச்சிப் போட்டியை நடாத்தி வருகின்றது.

லீக் போட்டிகள் நிறைவடைந்து புள்ளிகள் அடிப்படையில் அரையிறுதிப் போட்டிக்கு அணிகள் தெரிவு செய்யப்பட்டன. இதில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் முதலாவது அரையிறுதிப் போட்டி நடைபெற்றது.

இதில் மயிலிட்டி வள்ளுவர் அணியும், உடுவில் வைகரை ஏ அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே பழங்களை வாரிக்குக் குவிக்கும் முனைப்பில் வேகமாகச் செயற்பட்டன. ஆரம்பத்தில் உடுவில் வைகரை ஏ அணியின் ஆட்டம் இரசிகர்களை மெய்சிலிர்க்கும் வகையில் அமைந்திருந்ததுடன் போட்டியில் முன்னிலையும் பெற்றிருந்தது. பின்னர் விஸ்வரூபம் கொண்ட மயிலிட்டி வள்ளுவர் அணி வேகமாகச் செயற்பட்டு பழங்களைப் பெற்றுக்கொண்டன. தாச்சி இரசிகர்களின் பெரும் விருந்தாக அமைந்த இப்போட்டியில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் தமது திறன்களை வெளிக்கொணர்ந்தன. இறுதி பத்து நிமிடத்தில் போட்டியின் முழு ஆதிக்கத்தை மயிலிட்டி வள்ளுவர் அணி தன்வசப்படுத்தியது. நிறைவில் மயிலிட்டி வள்ளுவர் அணி 7-6 என்ற பழம் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத்தகுதி பெற்றது.

இரு அணிகளின் ஆட்டம் தாச்சி இரசிகர்களுக்குப் பெருவிருந்தாக அமைந்திருந்தது என்றும், இது போன்ற ஆட்டங்கள் சிறந்த போட்டியாளர்களை உருவாக்க வழி செய்யும் என்றும், இந்த ஆட்டம் அமைந்த வகையில் முதன்மைமிக்கதாக அமைந்திருந்தது என்றும், திறமையுடன் செயற்பட்ட இரு அணி வீரர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் பெருமையுடன் தெரிவித்தனர். இதேவேளை, இறுதிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# தேசிய மட்ட கரப்பந்து

(கொழும்பு)

39ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக இடம்பெறவுள்ள கரப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது. இதில் வடமாகாணம் சார்பாக ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணி பங்குகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பெருவிளையாட்டுப் போட்டிகள் நிறைவுற்றதுடன் மெய்வல்லுநர் போட்டிகள் இடம் பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.





சிறுப்பிட்டி கலைமகள் முன்பள்ளி சிறார்களின் வருடாந்த முன்பள்ளி விளையாட்டுப் போட்டி கடந்த வாரம் முன்பள்ளி முன்றலில் சிறப்புற நடைபெற்றது. இதில் சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் பல இடம்பெற்றன. இதில் கிராம இளைஞர்களுக்கும் பாரம்பரிய விளையாட்டுக்களும் நடாத்தப்பட்டன. பங்குகொண்ட அனைத்து சிறார்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. கலைமகள் சனசமூக நிலையத்தலைவர் சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஐங்கரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறார்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். மற்றும் அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.ச கல்வி உத்தியோகத்தர் சிறிகாந், சமுர்த்தி உத்தியோகத்தர் சுதர்சன், கலைமகள் விளையாட்டுக்கழகத் தலைவர் நிமல், பெற்றோர், பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறார்களை உற்சாகமூட்டியமை குறிப்பிடத்தக்கது. சிறார்களின் இடைவேளை நிகழ்வையும், கிறிஸ் மரம் ஏறுவதையும் காணலாம்.



# மாகாணசபை முறைமையை ஏற்றுக்கொண்டுவிட்ட கூட்டமைப்பினர்!

– வேங்கையின் மைந்தன் கட்டுரையிலிருந்து.

மாகாண சபைக்கான தேர்தல் திருவிழா தமிழர்களை மீளமுடியா ஆசனப் போட்டிக் கட்சி அரசியலுக்குள் தள்ளி விட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. முதலமைச்சர் வேட்பாளர் தெரிவு இழுபறியில் ஆரம்பித்து, அங்கத்துவக் கட்சிக்குள் ஆசன ஒதுக்கு இழுபறிக்கு சென்றடைந்து, யாருக்குக் கட்சிக்குள் ஆசனங்கள் என்ற பிரச்சினையில் சிக்குப்பட்டு, தற்போது சற்று ஓய்வு கொள்கிறார்கள். இனிக் காரசாரமாக விருப்பு வாக்குகள் கேட்கப் போகிறார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் அல்லது அதனது அங்கத்துவக் கட்சிகள் எதற்குள்ளும் மாகாண சபையில் ஏன் போட்டியிடுகின்றோம் என்பதனைப் பற்றிய தெளிவான உள்ளகக் கலந்துரையாடல் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. அது இப்போது முக்கியமில்லை இவர்களுக்கு. தேர்தலில் வெற்றி பெறுவது தான் முக்கியம். மிகவும் அழிவுகரமான, தான்தோன்றித்தனமான அரசியலுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களை அழைத்துச் சென்றுள்ளது.

மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றுவதை வைத்து அரசாங்கமும் இந்தியாவும் பின்வருமாறு வியாக்கியானப்படுத்தக் கூடும் என்பதனை நாம் அவதானிக்க வேண்டும்:

1. தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட்டு விட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு வட மாகாண சபைத் தேர்தலை கைப்பற்றியுள்ள நிலையில் இனி தேசிய இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை. மாகாண சபைக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இருக்கக்கூடிய வழமையான இழுபறிகளே தமிழர்களது பிரச்சினைகள் என்று அர்த்தம் கற்பிக்கப்படக் கூடும்.

2. ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் மார்ச் 2013 இன் 22ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தனது முகவுரைப் பந்தியில் (preamble) வட மாகாணசபைத் தேர்தல் செப்ரெம்பர் 2013இல் நடைபெறவுள்ளமையை வரவேற்றிருந்தது. தற்போதைய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தான் நியமிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் அமெரிக்க செனட் முன்பாக நிகழ்த்திய உரையில், இலங்கையில் மீளிணக்கம் ஏற்படுவதற்கு தேவைப்படும் மூன்று முக்கியத் தேவைப்பாடுகளில் ஒன்றாக வட மாகாணசபைத் தேர்தல் நடைபெறவேண்டியதை குறிப்பிட்டார்.

கொமன்வெல்த் மாநாடு இலங்கையில் நடத்தப்படுவதற்கு தனது ஆதரவை வழங்குவதற்காக, வட மாகாணசபைத் தேர்தலை நடத்தி ஆக வேண்டும் என இந்தியா நிபந்தனை விதித்திருந்ததாக சொல்லப்படுகின்றது. இது தொடர்பில் கொமன்வெல்த் அமைச்சர்கள் செயற்பாட்டுக் குழுவின் தற்போதைய தலைமையான பங்களாதேஷ் மீது இந்தியா இது தொடர்பில் அழுத்தம் பிரயோகித்ததாகக் கூறப்படுகின்றது.

தினக்குரல் பத்திரிகையின் மிக முக்கியமான பத்தி எழுத்தாளரான யதீந்திரா (இவரது கட்டுரைத் தொகுப்பு நூலொன்றை அண்மையில் திரு. சம்பந்தன் அவர்கள் திருகோணமலையில் வெளியிட்டு வைத்தார்) “தமிழ் தேசியக் கூட்டமைப்பு முழுமையாக மாகாண சபை முறைமையை அரசியல் தீர்விற்கான அடிப்படையாக ஏற்றுக்கொண்டு விட்டனர்” என்று எழுதுகிறார். (03.08.2013, தினக்குரல்) இது ஆரோக்கியமானது என்றும் பரப்புரை செய்கின்றார். யதார்த்தம் என்ற ஒற்றைப் பரிமாண அரசியலில் மட்டும் தான் நாம் பிரயாணிக்க வேண்டும் என்கிறார்.

கடந்த 2010 நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட வீரகேசரி நாளிதழின் ஆசிரியர் “இருப்பதை பாதுகாப்பதற்காக வட மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுவதானது வரவேற்கப்படவேண்டிய விடயமாகும். வட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவு வழங்காவிட்டாலும், மக்களை குழப்பும் செயற்பாட்டில் தமிழ்க் கட்சிகள் ஈடுபடுவது, இருப்பதையும் இல்லாது செய்வதற்கே உதவும். எனவே, இந்த விடயத்தில் உதவி செய்யாவிட்டாலும், உபத்திரவம் செய்யாது நிதானத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடைப்பிடிக்க வேண்டும்” என்று அறிவுரை கூறுகிறார் (வீரகேசரி ஆசிரியர் தலையங்கம் 01.08.2013). ஒரு தேசியப் பத்திரிகையின் ஆசிரியர் “உசுப்பேற்றும் விதத்தில் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் இருக்கக் கூடாது“ என்கிறார்.

உதயன், சுடரொளியை பற்றிக் குறிப்பிடவே தேவையில்லை. அவை கூட்டமைப்பு எம்.பி ஒருவரின் சொந்தப் பத்திரிகை. தனது பத்திரிகை முதலாளியை “ஊடகப் போராளி” என்று முன்னிறுத்தி, பிரசாரம் செய்து கடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெறச் செய்தது உதயன். இது தான் இன்றைய தமிழ் பத்திரிகை அரசியல் சூழல். தமிழ் தேசியப் பத்திரிகைகளின் முதலாளிகளும் அவர்கள் தம் பத்திராதிபர்களும் ஒரு நேர்மையான விவாதத்திற்கான களத்தை அமைத்துக் கொடுப்பதற்கு விருப்பற்றவர்களாகவே உள்ளனர் என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது.

# பிழையின்றித் தமிழ் 40

– ஞானச்செல்வன் –

உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று சிலப்பதிகாரத்துக்கு ஒரு பெயருண்டு. அதனால் உரைநடை சங்கச் சார்புக் காலத்திலேயே தமிழில் தோன்றிற்று. இறையனார் களவியலுரையும் பழந் தமிழில் உள்ள உரைநடை. அடியார்க்கு நல்லார் உரை, பரிமேலழகர் உரை, சேனாவரையர் உரை என்றெல்லாம் பழந்தமிழ் உரை நடைகள் பல உண்டெனினும், ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே தமிழில் உரைநடை வளர்ச்சி பெற்றது. உரைநடையில் புதினங்கள், ஆய்வுக் கட்டுரைகள், சிறுகதைகள் என்று பலவும் தோற்றம் பெற்றன. ஆதலின் வாக்கிய அமைப்புப் பற்றிய செய்திகள் ஆங்கில மொழியைத் தழுவியே ஈண்டு எழுதப்பட்டுள்ளன.



ஈண்டுரைக்கப்பட்ட வாக்கிய அமைப்புகள் பல இந்நாளில் சிதைவுற்றுப் போயின. தொடர் வாக்கியம், கலவை வாக்கியம் இரண்டும் இணைந்த தொடர் கலவை வாக்கியங்கள் நிரம்ப எழுத்துகளில் வந்துவிட்டன. பொதுவாகச் சிறிய சிறிய வாக்கியங்களாக அமைத்து எழுதுதல் நல்லது. மிக நீண்ட வாக்கியங்கள் படிப்பவர்க்குக் குழப்பத்தையும் மலைப்பையும் உண்டாக்கக்கூடும்.

எழுத்தாளர் சிலர், “எப்படி எழுதினால் என்ன? பல்லுடைக்கும் பண்டிதர் தமிழில் எழுத வேண்டுமா?” என்று பேசி வருவது நன்றாகாது. பல்லுடைக்கும் தமிழ் எங்குள்ளது? எவர் அறிவார்? தமிழ் எழுத வராதவர்கள் தாம் தப்பித்துக் கொள்ளச் செய்கின்ற வாதம் இது. ஆங்கில நாளிதழ்களில் மொழியறிவு, புலமை இல்லாதவர் எழுத முடியுமா? பிழையான ஆங்கிலத்தைத் தமிழர்கள் ஏற்பார்களா? தமிழ் என்றால் மட்டும் ஏனோ புறக்கணிப்பு?

உரை வகை நடை என்னும் குறிப்பு தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. செய்யுளியலில் “பாட்டிடை வைத்த குறிப்பினானும் பாவின்று எழுந்த கிளவியானும்” எனத் தொடங்கி உரைவகை நடை நான்கு என மொழிப” என்றார் தொல்காப்பியர். பாட்டின் உரைக்குறிப்புகள், பாக்கள் அல்லாது தோன்று சொல்வகையாக உலக வழக்கில் நிகழும் உரையாடல் என்று பலவாறு விளக்கம் தரப்படுகிறது. ஆயினும் முற்றிலும் இஃது உரைநடைத் தமிழ் பற்றிய செய்தி ஆகாது. உரையாப்பு வகை என்று இது குறிக்கப்படுகிறது. விரிவு விரும்புவோர் தொல் - நூற்பா 1429 ஐ காண்க. கிளவி - சொல்.

### தமிழின் சீர்மை

இயற்கையாய் இருக்கும் அனைத்துப் பொருளுக்கும் தமிழில் சொற்கள் உள்ளன. கருவிகளுக்கும், பண்டங்களுக்கும் சொற்கள் உள்ளன. சொற்பெருக்கம் உடைய மொழி நம் தமிழ். மிகப் பழங்காலம் தொட்டு, நம் நாட்டிற்குப் புதிதாக வந்தவற்றுக்கு எப்படிப் பெயர் அமைத்தார்கள் எனச் சில காட்டுகள் வழியாகக் காண்போம்.

குதிரை பண்டு தொட்டுத் தமிழகத்தில் இருக்கவில்லை. அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுப் புதிதாக வந்தபோது அது குதித்துக் குதித்து ஓடுவது கண்டு தமிழர்கள் அதற்குக் குதிரை எனப் பெயரிட்டனர்.

நம்நாட்டில் மிளகு இருந்தது. கார்ப்புச் சுவைக்கு (காரம்) இதனையே பயன்படுத்தி வந்தோம். உடல் நலனுக்கும் ஏற்றதாய் இருந்தது. வெளிநாட்டிலிருந்து ஒரு காய் புதிதாய் வந்தது. அது கார்ப்புச் சுவை கொண்டது. அதனால் முன்னிருந்த மிளகை அடிச்சொல்லாகக் கொண்டு மிளகாய் என்று புதிய சொல்லை உண்டாக்கினர்.

பலவகை இலைகள் நம் நாட்டிலே உண்டு. புதிதாக ஓர் இலை இறக்குமதியாயிற்று. அந்த இலையைப் பயன்படுத்திப் புகை வரச்செய்து பயன்படுத்தினார்கள். புகை வரக் கூடிய இலையைப் புகையிலை என்று சொல்லலாயினர்.

தட்டச்சு, பேருந்து, தொடர் வண்டி, நடைமேடை, அலுவலகம், கணினி, குறுஞ்செய்தி, குறுவட்டு, மின்னஞ்சல், முகப்பக்கம், இணையத்தளம் என்பனபோல் நூற்றுக்கணக்கான சொற்கள் காலந்தோறும் தமிழில் உருவாகி வந்துள்ளன; வருகின்றன.

இப்போது புதிதாகத் தமிழ்ச்சங்கமம், இசைச் சங்கமம் என்றெல்லாம் எழுதுகிறார்கள். சங்கமம் என்பது வடசொல். கூடல் என்பதே தமிழ்ச் சொல். மூன்று ஆறுகள் சேருமிடம் “திரிவேணி சங்கமம்” என்பதைத் திருமுக்கூடல் என்றே தமிழர் சொல்லி வந்தனர். கூடலுடன் ஒரு “திரு” சேர்த்துக் கொண்டால் சொல்ல அழகாய் இருக்கும். இலக்கியத் திருக்கூடல் எப்படி?

"ஜெய் சென்ன கேசவா" என்று தொடைதட்டி ரயிலையே திருப்பி அனுப்புகிற பாலகிருஷ்ணா படங்கள், மஞ்சள் சட்டையும் சிவப்பு பாண்ட்டுமாக ஊட்டி சூட்டிங் ப்ளேசில் தொப்புள் தெரிகிற நாயகியோடு குத்தாட்டம் போடுகிற வயதான ஹீரோ, அல்லது கையில் விதவிதமான வித்தியாசமான ஆயுதங்களோடு ரத்தம் தெறிக்க தெறிக்க கூறுபோடுகிற படங்கள்தான் நமக்கு அதிகமாக பரிச்சயமான தெலுங்கு சினிமா. அதுமாதிரியான திரைப் படங்களே தொடர்ந்து தமிழில் டப் செய்யப்பட்டும் வெளியாகின்றன.

ஆனால் "அந்தால ராட்சசி" படத்தை பார்த்து முடிக்கும்போது, தெலுங்கு திரையுலகம் குறித்த நம்முடைய சகல முன்முடிவுகளும் உடைந்து நொறுங்கும்.

# மௌனராகம் ரீமேக்!

– அதிஷா –

அடேங்கப்பா டோலி வுட்ல இப்படி கூடவா படம் எடுக்கிறார்கள் என்கிற எண்ணம் தலைப்படும். அப்படி ஒரு படம் "அந்தால ராக்சசி" (தமிழில் அழகான ராட்சசி!). அந்த அளவுக்கு மென்மையான காதலையும் அன்பே உருவான யதார்த்த மனிதர்களையும் கொண்டிருக்கிறது இத்திரைப்படம்.

படத்தின் இயக்குனர் ஹனு ராகவப்பூடி ஒரு HARDCORE மணிரத்னம் ரசிகராக இருப்பார் போலும். படத்தின் ஒவ்வொரு ஷொட்டிலும் ஒவ்வொரு ஃப்ரேமிலும் லொக்கேஷனில் வசனத்திலும் பாத்திரங்களின் நடை, உடை, பாவனை தொடங்கி சகலத்தி லும் மணிரத்னம் தெரிகிறார். அதற்காகவே தென்னிந்திய சினிமாவை மணிரத்னம் ஆட்சி செய்த 90களின் தொடக்கத்தை தன்னுடைய படத்தின் காலமாக வைத்திருக்கிறார்.

நாடிநரம்பெல்லாம் மணிரத்னத்தை நேசிக்கிற ஒரு ரசிகனால் மட்டும்தான் இப்படி ஒரு படத்தினை எடுக்க முடியும். படத்தின் கதையும் கூட மௌனராகம் கதையேதான்!

மௌனராகம் படத்தின் கிளைமாக்ஸ்தான் இந்தப் படத்தின் இடைவேளை. இறந்து போன பழைய காதலனை மறந்துவிட்டு தன்மீது உயிராய் இருக்கிற கௌதமோடு புதிய உறவில் அடியெடுத்து வைக்கிறாள் மிதுனா. அந்த நேரத்தில் அதிர்ச்சிகரமான ஒரு தகவல் கௌதமுக்கு வருகிறது. இறந்துபோனதாக நினைத்துக்கொண்டிருந்த சூர்யா இறந்துபோகவில்லை இன்னும் உயிருடன்தான் இருக்கிறான்!

தன்னுடைய அடையாளங்களை மறைத்துக்கொண்டு சூர்யா குடிகாரனாக அவளை நினைத்து பைத்தியக்காரனைப்போல வாழ்ந்துகொண்டிருக்கிறான். எதற்காக சூர்யா இப்படி தலைமறைவானான்? கௌதம் இப்போது என்ன செய்யப்போகிறான்? மிதுனா யாருடன் சேர்ந்தாள்? என்பதை எல்லாம் வெள்ளித்திரையில் காணலாம்.

மிதுனாவாக நடித்திருக்கிற லாவண்யா திரிபாதி நிஜமாகவே அழகான ராட்சசிதான். அதோடு மணிரத்னம் படங்களில் வருவதைப்போலவே குழந்தைகளை அடிக்க ஓடும்போது நாயகனை சந்திப்பதும், முதலில் அவனை வெறுத்து திட்டுவதும்.. பிறகு அவனுக்காக கிடந்து உருகுவதும் அழகு!

அனைவரும் பார்த்து ரசிக்க ஏற்ற படம் தான் என்றாலும் நீங்கள் மணிரத்னம் ரசிகராக



இருந்தால் உங்கள் நொஸ்டால்ஜியாவுக்கு சரியான தீனிபோடக் கூடியதாகவும் இப்படம் இருக்கும்.

தெலுங்குப் படங்களுக்கே உரிய எந்த அடையாளங்களும் இன்றி, இயல்பாக இனிமையாக அதிக ஆர்ப்பாட்டமில்லாமல் எளிமை யான காதலை சொன்ன இப்படத்தை தயாரித்திருப்பவர் எஸ்.எஸ். ராஜமௌலி! பிரமாண்ட படங்கள் மட்டுமே எடுக்கிற டோலிவுட் ஷங்கர். (நான் ஈ படத்தின் இயக்குனர் என்றால் எளிதாக புரிந்துகொள்ளலாம்.)

# டாக்ஸி ட்ரைவராக மாறிய பிரதமர்!




பிரதமர் தனது அலுவலகத்தில் உள்ள ஓர் அறைக்குள் நுழைகி றார். வெளியே வரும்போது அவர் உடை மாறியிருக்கிறது. ஒரு டாக்ஸி ட்ரைவரைப் போல உடை. கண்களில் சன் கிளாஸ். தலை யில் தொப்பி.

கறுப்பு நிற மெர்சிடெஸ் டாக்ஸியில் ட்ரைவர் சீட்டில் ஏறி அமர்கிறார் பிரதமர். தலைநகரின் மையப் பகுதிக்குக் கார் பறக்கிறது. சாலையில் ஒருவர் டாக்ஸிக்காக கையை நீட்டுகிறார். அவரை ஏற்றிக் கொண்டு கார் செல்கிறது. பிரதமர் டாக்ஸி ட்ரைவராக இருந்து கொண்டு, பின் சீட்டில் அமர்ந்திருக்கும் பயணி யிடம் பேச்சுக் கொடுக்கிறார். அரசியல், தொழில், பொருளாதார வளர்ச்சி என்று ஏதேதோ பேசிக் கொண்டே போகிறார். பிரதமர் என்று தெரியாத பயணி தனது மனதில் பட்டதை எல்லாம் எந்தத் தயக்கமும் இல்லாமல் சொல்கிறார்.

"இதுக்குத்தானே இந்த வேஷம்?" என்று மனதுக்குள் மகிழ்கிறார் பிரதமர்.

இது ஏதோ திரைப்படத்துக்காக எடுக்கப்பட்ட காட்சியல்ல.

அந்தக் காலத்து மன்னர்கள் மாறுவேடமணிந்து நகர்வலம் வந்ததைப் போல இந்தக் காலத்தில் ஒரு பிரதமர் உண்மையாகவே இப்படிச் செய்திருக்கிறார், அவர் நோர்வே பிரதமர் ஜென்ஸ் ஸ்டோலென்பெர்க்.

நோர்வேயில் வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடக்கவிருக்கிறது. கடந்த 2005 ஆம் ஆண்டிலிருந்து பதவி யில் இருக்கிறது இடதுசாரிகளின் ஆதரவு பெற்ற தொழிற்கட்சி. தொழிற்கட்சிக்கு இந்த ஆண்டு தேர்தலில் கணிசமாக வாக்குகள் குறையும் என்று ஒரு கருத்துக் கணிப்பு சொன்னது. இது உண்மைதானா? மக்கள் உண்மையில் என்ன நினைக்கிறார்கள் என்று நேரடியாகத் தெரிந்து கொள்ளவே தொழிற்கட்சியைச் சேர்ந்த பிரதமர் ஜென்ஸ் ஸ்டோலென்பெர்க் சாரதி வேடம் பூண்டார்.

54 வயதுப் பிரதமர் டாக்ஸி ட்ரைவராக உருமாறினார். காரில் ரகசியமாக வீடியோ கமெராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. இத்தனைக்கும் அவர் கார் ஓட்டி எட்டு ஆண்டுகள் ஆகின்றன. காரில் கிளட்சை அழுத்துவதாக நினைத்துக் கொண்டு தானியங்கி பிரேக்கை மிதித்து, அடிக்கடி காரை பயங்கரமாகக் குலுங்கச் செய்திருக்கிறார். பயங்கரமான அதிர்வுடன் கார் அவ்வப்போது நின்று, தலைநகர் ஒஸ்லோவின் வீதிகளில் பயணித்திருக்கிறது. காரில் பயணம் செய்தவர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள். காரை விட்டு இறங்கியதும் தங்களுடைய கருத்தை வெளிப்படையாகச் சொன்னார்கள்.

"நீங்கள் கார் ஓட்டியது படுமோசமாக இருந்தது. இவ்வளவு படுமோசமான ட்ரைவிங்கை என் வாழ்க்கையில் இதுவரை நான் அனுபவித்ததேயில்லை"

இன்னொருவர் சொன்னார்: "நான் உயிருடன்தான் இருக்கிறேன் என்று நினைக்கிறேன். கடவுளுக்கு நன்றி"

இவற்றைப் பற்றியெல் லாம் கவலைப்படவில்லை ஜென்ஸ் ஸ்டோலென்பெர்க்.

"மக்கள் உண்மையி லேயே என்ன நினைக்கி றார்கள் என்பதைத் தெரிந்து கொள்வது எனக்கு முக்கியம். மக்கள் மனதில் நினைப்பதை எந்தத் தடையுமில்லாமல் பேசும் இடம் டாக்ஸி என்பதால் டாக்ஸி ட்ரைவராக மாறி னேன். இன்றைய அரசிய லைப் பற்றி மக்களின் நேர்மையான விமர்சனத் தைத் தெரிந்து கொண்டேன்" என்கிறார் அவர்.

அவர் கார் ஓட்டிக் கொண்டே பயணிகளிடம் பேச்சுக் கொடுத்தது, பயணி கள் அவரிடம் பேசியது எல்லாம் வீடியோவில் பதிவாகி, இப்போது இணைய தளங்களின் மூலம் உலகம் முழுவதும் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கிறது.

"நீங்கள் தேர்தலில் தோற்றுவிட்டால் பிரதமர் பதவியிலிருந்து விலகி டாக்ஸி ட்ரைவர் ஆகி விடுவீர்களா?" என்று ஓர் இளம் பத்திரிகை நிருபர் குறும்பாகக் கேட்டார்.

அதற்கு ஜென்ஸ் ஸ்டோலென்பெர்க் சிரித்துக் கொண்டே சொன்னார்: "நான் தேர்தலில் வெற்றி பெற்று பிரதமரானால் நாட்டுக்கும், தோல்வியடைந் தால் டாக்ஸி ட்ரைவராகி பயணிகளுக்கும் என்னால் முடிந்த அளவுக்குச் சிறப் பாகப் பணியாற்று வேன்"

இது தேர்தலுக்கான ஸ்டண்ட் என்று காட்டமாக விமர்சித்திருக்கிறது எதிர்க்கட்சியான நோர்வே கன்சர்வேட்டிவ் கட்சி.

# சத்தமிடுவது ஏன்?



கோபப்படும்போது ஏன் சத்தமாகப் பேசுகிறார்கள் தெரியுமா? என்று குரு கேட்டார்.

சிஷ்யன் விழித்தான். குருவே கூறினார் இப்படி:


கோபம் வரும்போது மனம் தூரமாகப் போகின்றது. அதனால்தான் சத்தமாகப் பேசுகிறோம். மனம் நெருக்கமாக இருந்தால் மெதுவான குரலில் பேசினால்கூட கேட்கும். காதலர்களின் மனம் நெருக்கமாக இருப்பதால்தான் அவர்களால் மெதுவாகப் பேசினால்கூட கேட்டுக்கொள்ள முடிகிறது.


# உலகில் மிகப் பெரிய காதல் கடிதம்!

மார்ஷல் டி வெக்லூர் ஒரு பெர்ஸிய ஓவியர். 1875 ஆம் ஆண்டில் இவர் உலகிலேயே மிகப் பெரிய காதல் கடிதத்தை எழுதினார். அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்க்க வேண்டுமானால் குறைந்தது இரண்டு மாதங்களாவது ஆகும்.

அவ்வளவு பெரிய அந்தக் கடிதத்தில் இருக்கும் மொத்த வார்த்தைகள் 7,56,25,000. அதாவது இவ்வளவு வார்த்தைகளில் 70 நாவல்களை எழுதி முடித்துவிடலாம். இந்தக் கடிதத்தை எழுத ஒரு குமாஸ்தாவை சம்பளம் கொடுத்து வைத்திருந்தார். "மாலிக் டி வில்லடோ" என்ற பெண்ணுக்குத்தான் இந்தக் காதல் கடிதம் எழுதப்பட்டது.

"நான் உங்களைக் காதலிக்கிறேன்" என்ற மூன்று வார்த்தையை மட்டும் மார்ஷல் இக்கடிதத்தில் 18,75,000 இடங்களில் குறிப்பிட்டுள்ளாராம்.








# நயினாதீவும் அதன் தெய்வீக வரலாற்றுச்சிறப்பும்

**யாழ்**.மாவட்டத்திலுள்ள(Jaffna District) சப்த தீவுகள் என அழைக்கப்படும் ஏழு தீவுகளில் நயினததீவும் ஒன்று. இது நாகதீபம் (சிங்கள மொழியில், நாகதீப) நயினாதீவு எனவும் அழைக்கப்படுகிறது. இந்தத் தீவில் உள்ள நாக பூஷணி அம்மன் கோயில வரலாற்றுச்சிறப்பு மிக்கதாகும்.

இந்தக்கோயில் "நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில்" என்ற பெயர் பெற்றதாகும். இந்தக்கோயிலின் அண்மையில் ஒரு சிறிய பௌத்த விகாரை உள்ளது. இதனை நாகவிகாரை என்று அழைப்பர். இலங்கையிலுள்ள பௌத்த சமயத்தவர் புத்த பெருமான் இந்தத் தீவுக்கு வருகை தந்ததாக நம்புகிறார்கள். இந்த விகாரையில் சில பௌத்த பிக்குகள் உள்ளனர்.

இவர்களைத் தவிர இந்தத்தீவில் வரலாற்று ரீதியாக வசிக்கும் மக்கள் அனைவரும் தமிழர்களாவர்.இந்தத தீவு யாழ்ப்பாணத்திலிருந்து கடல் வழியாக, தென் மேற்குத் திசையில் 23 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இதற்குக் கிழக்குத் திசையில் புங்குடுதீவும், நேர் வடக்கில் அனலைதீவும் அமைந்துள்ளன.

நயினாதீவிற்கு தரை வழியாக பயணிப்பதற்கான பாதைகள் இல்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து நயினாதீவு செல்வோர் குறிகாட்டுவான் வரை பேருந்தில் சென்று, குறிகாட்டுவானில் இருந்து படகு மூலம் நயினாதீவிற்கு செல்ல முடியும். நயினா தீவிக்குள் ஒரு உள்ளூர் பேருந்து சேவைஉள்ளது.

இலங்கையின் வரலாறு கூறும் மகாவம்சம் என்னும் நூலில் நயினாதீவு பற்றிய பல குறிப்புகள் உள்




ளன. புத்தர் வாழ்ந்த காலத்தில் இலங்கையில் ஆட்சி புரிந்த இரண்டு நாக அரசர்களுக்கிடையில் ஒரு மணியாசனத்தின் உரிமை தொடர்பாக ஏற்பட்ட பிணக்கைத் தீர்த்து வைப்பதற்காக அவர் நாகதீபத்துக்கு வந்ததாக மகாவம்சம் கூறுகிறது. இதே பிணக்கு யுத்தம் 'மணிபல்லவத்தில்' இடம்பெற்றது என்று 'மணிமேகலை'க் காப்பியம் கூறுகின்றது. இங்கே பௌத்த கோவில் ஒன்று இருந்ததாகவும், இந் நூலில் குறிப்புகள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

"மணிபல்லவம்" என்ற பெயரும் "நாகதீபம்" என்ற பெயரைப் போன்று முழு யாழ்ப்பாணக் . குடாநாட்டையுமே குறிப்பதாக வழங்கப்பட்டது என்பது நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், முதலியார் சி. இராசநாயகம் ஆகிய அறிஞர் பெருமக்களது கருத்தாகும். போல் பீரிஸ், பரணவிதான போன்ற சிங்கள தொல்பொருளியல் அறிஞர்களும் இதே கருத்தையே வெளியிட்டுள்ளனர்.

இலங்கை வரலாற்று நூலா்ன தீபவம்சம், மகாவம்சம் மற்றும் தமிழ் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை போன்ற நூல்கள் நாக மன்னர்களுக்கு இடையே நடந்த போர் பற்றி விளக்குகிறது. அவையாவன,நாகராசன் என்னும் மன்னன் விசயன் என்றவனுக்கு முன்பே நாகநாடான இலங்கை நயினாதீவு கோநகராக்கி ஆழ்கிறான்.

இவனுக்கு ஒரு மகளும் மகோதரன் என்ற மகனும் இருந்தனர். தன் மகளை மலையராட்டிர நாகராசன் என்ற வேறொரு நாகமன்னனுக்கு மணமுடித்து அவளுக்கு சீதனமாக தன் மணியாசனத்தையும் கொடுத்தனுப்பினான். அவர்களுக்கு குலோதரன் என்னும் மகன் பிறக்கிறான்.

நயினாதீவு நாகராசன் தான் இறக்கும் முன்பு தன் மகனான மகோதரனுக்கு பட்டம் கட்டிவிட்டு இறக்கிறான்.அப்போது மகோதரன் மலையராட்டிர நாகராசனான் குலோதரன் மீது மணியாசனத்தை பெறும் பெயரில் போர் தொடுக்கிறான்.இரு படைகளுக்கும் போர் நடக்கும் போது அவர்களின் நடுவில் புத்தர் தோன்றி பேரிருளை உண்டாக்கியதால் நாகர்கள் அஞ்சினர். மீண்டும் புத்தர் அங்கு வெளிச்சத்தை உருவாக்கியவுடன் நாகர்கள் புத்தரை வணங்கி போருக்குக் காரணமான மணியாசனத்தில் புத்தரையே அமரச்செய்தனர்.



இதே கதையை மணிமேகலையும் கூறுகிறது. இந்த யுத்தம் நடந்த இடம் 'நாகதீபம்' என்று மகாவம்சம் கூறுகின்றது. இதே யுத்தம் 'மணிபல்லவத்தில்' இடம்பெற்றது என்று 'மணிமேகலை'க் காப்பியம் கூறுகின்றது. ஆகவே, 'மணிபல்லவமும் நாகதீபமும் ஒன்றே யாழ்.குடாநாடுதான் நாகதீபம் என்றால், அதுவே மணிபல்லவமுமாகும்' என்று மேற்கூறிய அறிஞர் பெருமக்கள் முடிவுகட்டியுள்ளதுபோன்று தோன்றுகின்றது.

இதில் ஒருவேளை தவறிருக்கலாம்• மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடும் 'மணிபல்லவம்'– நயினாதீவாக இருக்கக் கூடும் என்ற கருத இடமுண்டு, ஆனால் 'நாகதீபம்' என்று பெயர் பண்டைய நாட்களில் நாகர் அரசாட் சிக்குட்பட்ட ஒரு தேசத்தை அல்லது இராச்சியத் தைக் குறிக்க வழங்கப்பட்டதே அல்லாது, எமது ஊரைப் போன்ற ஒரு சிறிய ஊரைக் குறிக்க வழங்கப்படவில்லை என்பதற்கு நிறைய ஆதாரங்களுண்டு.

இது குறைந்த பட்சம் யாழ் குடாநாட்டையும் அயல் தீவுகளையும் உள்ளடக்கியதாக இருந்தது. இன்றைய வடமாகாணம் முழுவதையும் மேற்குக்கரையில் கல்யாணி (களனி) ஆறு வரையான பகுதிகளையும் கூட 'நாகதீபம்' உள்ளடக்கியிருந்தது என்ற கருத்தும் உண்டு. ஆகவே, 'நாகதீபம்' என்பது ஒரு இராச்சியத்தின் பெயர் நயினாதீவைப் போன்ற ஒரு சிறிய தீவை அல்லது ஊரைக் குறித்த பெயரல்ல. ஆனால், மணிபல்லவம் ஒரு சிறிய தீவு. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து தெற்கே முப்பது 'யோசனை' தூரத்தில் அமைந்திருந்தது என்று 'மணிமேகலைக் காப்பியம் கூறும் விவரங்கள் நயினாதீவுக்குப் பொருந்துவனவாக உள்ளன.

'புத்தர் இங்கு வந்தார். போரை நிறுத்திச் சமாதானம் செய்து மணியாசனத்தில் அமர்ந்து பஞ்சசீலத்தைப் போதித்தார்' என்பது உண்மையோ பொய்யோ என்பது வேறு விடயம். அதுபற்றி சிங்கள வரலாற்றுத் துறை அறிஞர்களிடையேகூடக் கருத்து வேறுபாடு உண்டு.



ஆனால், ஒரு காலத்தில் இங்கு வாழ்ந்த தமிழ் நாகர்கள் பௌத்த சமயத்தைத் தழுவியிருந்தனர். இந்தத் தீவு ஒரு பௌத்த வழிபாட்டுத் தலமாக அக்காலத்திலும் திகழ்ந்திருந்தது. ஆகவே, 'மணிமேகலை'க் காப்பியம் எழுந்த சங்கமருவிய காலத்தில் - அதாவது கி.பி.மூன்றாம் நூற்றாண்டு அளவில் - நயினாதீவு, 'மணிபல்லவம்' என்றும் அழைக்கப்பட்டது என்றும், இது நாக அரசர்களால் ஆட்சிசெய்யப்பட்ட நாகதீவு (அல்லது 'நாகதீபம்') என்ற இராச்சியத்துக்குட்பட்டிருந்தது என்றும் கொள்வது தவறன்று. சிலப்பதிகாரத்திற்கு அடுத்ததாக இலக்கிய அழகில் பெருமைவாய்ந்த மணிமேகலை, ஐம்பெரும தமிழ் காப்பியங்களுள் ஒன்றாகும். இக்காப்பியத்தின் தலைவி, மணிமேகலை, சிலப்பதிகாரத்தின் கோவலன் மற்றும் மாதவி என்பவர்களின் மகளாவாள். கோவலனின் துயர மரணத்திற்குப் பிறகு மாதவி தன் மகளை ஒரு புத்த துறவியாக வளர்த்தாள்.

ஒரு சமயத்தில் மணிமேகலையும் அவளுடைய தோழியும் பூப்பறிக்கச் சென்றிருந்தபோது, உதயகுமரன் என்ற சோழ மன்னன் மணிமேகலையின் மீது காதல் மயக்கம் கொண்டான். கடலின் கடவுளான மணிமேகலா, மணிமேகலையின் உலக இன்பங்கள்



துறந்த வாழ்க்கையைப் பாதுகாக்க, அவளை தான் அறியாமலே மணிபல்லவம் என்ற தீவில் கொண்டு விட்டாள். அத்தீவில் மணிமேகலை ஒரு புத்த பீடிகை மூலம் தனது முன்பிறப்பைப் பற்றி அறிந்தாள்.

அதன் பிறகு, கடலின் கடவுள் மணிமேகலா, மணிமேகலையிடம் அவள் ஏன் மணிபல்லவத்திற்கு அழைத்து வரப்பட்டாள் என்பதைக் கூறி, மூன்று அதிசய மந்திரங்களையும் கற்றுக்கொடுத்தாள். அத்தீவில் மணிமேகலை "அமுத சுரபி" என்ற உணவுக் கிண்ணத்தைக் கண்டெடுத்து, அதிலிருந்து அளவற்ற உணவை புகாரிலுள்ள ஏழைஎளியோருக்கு வழங்கினாள். இதையெல்லாம் கண்ட உதயகுமரன், மணிமேகலை தன்னை மணக்க வேண்டும் என்று அவளை வற்புறுத்தினான்.

ஆனால் மணிமேகலை தான் கற்ற வித்தையைப் பயன்படுத்தி காயசண்டிகையாக உருமாற்றிக் கொண்டாள். உண்மையான காயசண்டிகையின் கணவன் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் உதயகுமரனைக் கொலை செய்துவிட்டான். இதற்காகக் காயசண்டிகையின் உருவத்தில் இருக்கும் மணிமேகலை கைது செய்யப்படுகிறாள்.

ஆனால் தனது தாயாரின் உதவியோடு விடுவிக்கப்படுகிறாள். பிறகு அவள் வஞ்சி நகரத்திற்குச் சென்று தந்து ஞான ஆசிரியரான கண்ணகியிடம் உரையாடி அறிவுரை பெற்றாள்.

அத்துடன் அனைத்து மதங்களின் நிறைகுறைகளை வல்லுனர்களிடமிருந்து அறிந்தாள். அதன்பிறகு காஞ்சி நகரத்திற்குச் சென்று தனது ஆசானான அறவண அடிகளிடம் படிப்பினை பெற்று ஒரு முழுமையான புத்த துறவியாகி, தவத்தில் ஆழ்ந்தாள்.

இவ்வாறான பல்வேறு வரலாறுகளைக்கொண்ட ஓர் புனிதபூமியே இந்த நயினாதீவாகும்.

# தேர்தல் முறைப்பாடுகளை தெரிவிக்க 5 நிலையங்கள் அமைக்கப்படும்

## -தேர்தல்கள் ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் திணைக்களத்தின் தேர்தல் முறைப்பாடுகள் கையேற்கும் 5 நிலையங்கள் யாழில் ஆரம்பிக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நண்பகல் யாழ். நூலக கேட்போர் கூட்டத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து செய்தியாளர்களுடனான சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

வேலணை, பருத்தித்துறை, சாவகச்சேரி, சண்டிலிப்பாய், நெடுந்தீவு போன்ற பிரதேசங்களில் இவற்றை திறப்பதற்கு சம்மதித்துள்ளோம். விரைவில் திறக்கப்படும் அத்தோடு யாழ். மாவட்டத்திற்குள்ளேயே இடம் பெயர்ந்துள்ள வாக்காளர்கள் தமது வாக்களிப்பு் நிலையங்களுக்குச் செல்வதற்கான ஏற்பாடு செய்வதற்காக இலங்கை போக்குவரத்துச்சபையுடனும், தனியார் போக்குவரத்து நிறுவனத்துடனும் கலந்துரையாடி இதற்குத் தீர்வு காணப்படும் என்றார். (இ)

# பசுக்கன்றை சாகடித்த நாய்க் கூட்டங்கள்

## தாவடியில் சம்பவம்

(திருநெல்வேலி)

ஏழு நாய்கள் ஒன்றாகச் சேர்ந்து பசுக்கன்று ஒன்றையும், குட்டித்தாச்சி ஆடு ஒன்றையும் கடித்துக்குதறி சாகடித்துள்ளன. இச்சம்பவம் தாவடியில் கடந்த திங்கட்கிழமை இரவு நடை பெற்றது. வீட்டுக்காரர்கள் நல்ல உறக்கத்தில் இருந்தவேளை இரவு சுமார் 12.30 மணியளவில் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள காணியொன்றில் பசுமாட்டுக்கு அருகில் கட்டப்பட்டிருந்த பசுக் கன்றைக் கதறக் கதற இந்த நாய்கள் கடித்துக்குதறின.

வீட்டுக்காரர் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்த போது பசுக்கன்று இறந்து கிடக்கக் கண்டார்.

இது தவிர, இவ் வீட்டுக்கு சில வீடுகள் தள்ளி மற்றொரு வீட்டில் கட்டியிருந்த தாய் ஆடு ஒன்றையும் இதே நாய்க்கூட்டம் அதே இரவு சென்று கடித்துக் குதறின.

இவ்வீட்டை அண்மித்ததாக உள்ள வேறு இரண்டு வீடுகளுக்குச்சென்ற இந்த நாய்க்கூட்டம் அங்கும் இரண்டு ஆடுகளைக் கடித்தன. ஆடுகளின் சத்தத்தைக்கேட்ட வீட்டுக்காரர்கள் உறக்கத்திலிருந்து விழித்து பொல்லுகள், கற்களினால் நாய்களைக் கலைத்துத் துரத்தியமையால் அந்த ஆடுகள் தப்பித்துக் கொண்டன.

ஆட்டைக் கடித்து , மாட்டைக்கடித்துக் கடைசியில் மனிதனைக்கடித்த கதையாக இது மாறக்கூடும் என்பதால் கட்டாக் காலி நாய்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ள வேண்டும். எனப் பொதுமக்களினால் கோரிக்கைவிடப் பட்டுள்ளது. (137)



தருநகர் ஐந்து மாடி கட்டடத்தின் அபிவிருத்தி பணிகள் ஈ.பி.டி.பி. யாழ்ப்பாண அமைப்பாளர் றீகன் தலைமையிலான குழுவினரின் மேற்பார்வையில் இடம்பெற்று வருகிறது. (படம் ராஜகுமார்)

## வெள்ளி நற்சிந்தனை...

# "இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

இந்த உலகம் தோன்றிய காலம் தொட்டு மனித்ன் அமைதியையும், மகிழ்ச்சியையும் தேடி அலைந்து கொண்டே இருக்கின்றான். அவை அவன் பிடிக்குள் அகப்படாமல் அவனை விட்டு எட்ட விலகிச் சென்று கொண்டே இருக்கின்றன.

அமைதியையும் ஆனந்தத்தையும் எங்கே போய்தேடுவது அது நமக்குள்ளே இருக்கும் போது அப்படி இருந்தும் அவற்றை ஏன் அனுபவிக்க முடிய வில்லை? ஆன்மீகத்தில் நமக்குள்ள அறியாமையே அவற்றை நாம் உணர முடியாமல் செய்து விடுகின்றது.

அஞ்ஞான இருளை அகற்றி விட்டால், அன்பையும் ஆனந்தத்தையும் பெற்றுவிடலாம் அதற்கு வழி என்ன? ஒழுக்கம், பக்தி, உண்மை ஆகிய அரிய குணங்களைப் பெற்றுள்ள பெரியவர்களின சகவாசம் முதலில் நமக்குக் கிடைக்க வேண்டும். அது நமக்குக் கிடைத்து விட்டால், தீயவைகளை ஒதுக்கிவிடும் சுபாவம் நம்மிடம் தோன்றி வளர ஆரம்பித்து விடும். பிறகு பற்றற்ற மனநிலை மெல்ல மெல்ல உருவெடுக்கும். எந்த அளவிற்கு பற்றற்ற நிலை நமக்கு வாய்க்கின்றதோ அந்த அளவுக்கு அமைதியையும் பெற முடியும்.

பற்றற்ற நிலை என்பது எல்லாவற்றையும் ஒதுக்கித் தள்ளுவதல்ல எதிலும் ஆசை வைக்காமல் விடுவது தான். காட்டில் ஒரு துறவி வாழ்ந்து வந்தார் அவர் பற்றிய செய்திகள் பல, நாட்டு மன்னனுக்கு எட்டியது. அவரை வணங்கி ஆசி பெற வேண்டி நாட்டிற்கு அழைத்து வந்தான். துறவிக்கு நல்ல இராஜமரியாதை செய்யப்பட்டது. துறவியும் அரண்மனையில் பட்டுப் பீதாம்பரங்களையும், ஆபரணங்களையும் அணிந்து தங்கக்கட்டிலில் சுகமாக இருந்தார். அரசனுக்கு துறவி மீதுசந்தேகம் வந்து விட்டது. முற்றும் துறந்த பற்றற்றவர் என்று சொன்னார். ஆனால் துறவி ஆசையின் உச்சத்தில் அல்லவா இருக்கிறார். என்று நினைத்து துறவியிடம் தங்களைப் பற்றற்றவர் என்றல்லவா நினைத்தேன் ஆனால் நீங்கள் எந்தப் பற்றையும் துறந்தவர் போலத் தெரியவில்லையே என்று நேரடியாகவே கேட்டு விட்டான். துறவி இந்த வினாவுக்கு பதில் கூறாமல் அணிந்திருந்த ஆடை, ஆபரணங்கள் யாவற்றையும் கழற்றினார் நாலுமுழத்துண்டைக் கட்டினார். எப்படி வந்தாரோ அப்படியே காட்டுக்குச் சென்று விட்டார். பற்றற்ற நிலை என்றால் என்ன என்பது புரிகிறதா, மன்னனுக்குப் புரிந்தது. இருப்பதைப் பயன்படுத்துவதில் தவறில்லை ஆனால் இது இல்லாவிடின் வாழ்வே இல்லை. என நினைக்கக் கூடாது என்ற உயர்ந்த நிலை தான் பற்றற்ற நிலையாகும். நம்முடைய துன்பத்திற்கு நாம் தான் காரணம்.

ஒரு மனிதன் அடையும் துன்பங்களிற்கெல்லாம் பூர்த்தி அடையாத அவனுடைய ஆசைகளே காரணமாகும். ஆகவே பலன் கருதாமல் தன்னுடைய கடமையைச் செய்து பற்றுக்களை நீக்கி வாழக் கற்றுக் கொண்டால் இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

சில கவிதைகள் புரிவதில்லை என்ற குற்றச்சாட்டு ஒருபுறமிருக்க, பதிலாக கவிதையைப் புரிந்து கொள்வதில் வாசகனின் பங்கே முக்கியமானது என்றும், திரும்பத் திரும்ப வாசிப்பதன் மூலம் கவிதையைப் புரிந்து கொள்ள நாம்தான் முயற்சிக்க வேண்டும். என்றும் சொல்லப்படுகிறது. "நமது பங்கைக் கேட்டாமல் வெள்ளையாக நிற்கும் கவிதைகள் வெட்கங்கெட்டவை" என்று சொல்வார் சுந்தர ராமசாமி.

விழிகள் நட்சத்திரங்களை வருடினாலும்
விரல்கள் என்னவோ ஜன்னல் கம்பிகளோடுதான்.

என்று எண்ணங்களோடு ஒத்துவராத யதார்த்தத்தைக் கவிதையில் சொல்லும் போது புரிந்து கொள்ளச் சிரமமிருப்பதில்லை. ஆனால் நகுலனின், பிரபலமான ராமச்சந்திரன் கவிதை சட்டென்று தன்னை வெளிபடுத்திக் கொண்டுவிடும் கவிதை இல்லை. எந்தவித சிக்கலான வார்த்தைப் பிரயோகமுமின்றி என்ன சொல்கிறார் என்று நம்மை யோசிக்க வைத்துவிடும் அந்தக் கவிதை இது:

ராமச்சந்திரனா / என்று கேட்டேன்
ராமச்சந்திரன் என்றார் / எந்த ராமச்சந்திரன்
என்று நான் கேட்கவில்லை / அவர் சொல்லவுமில்லை.

எல்லோருக்கும் நேரும் அடையாளக் குழப்பத்தைத்தான் நகுலன் சொல்ல வருகிறார். வாழ்க்கையில் நேரும் பல விசித்திரங்களும் குழப்பங்களும் என்ன விதமாகச் சொல்லியும் புரியவைத்துவிடக் கூடியவையா என்ன? ஞானக்கூத்தன் அதையே நையாண்டியாக மாற்றிவிடுகிறார். அவரது கவிதையைப் பாருங்கள்.

என்னை நோக்கி ஒருவர் வந்தார்
எதையோ கேட்கப் போவது போல.
கடையா? வீடா? கூடமா? கோயிலா?
என்ன கேட்கப் போகிறாரென்று
எண்ணிக்கொண்டு நான் நிற்கையில்
அநேகமாய் வாயைத் திறந்தவர் என்னிடம்
ஒன்றும் கேளாமல் சென்றார்
என்ன மாதிரி உலகம் பார் இது!

கவிதையைப் புரிந்து கொள்வது பற்றி சுந்தர ராமசாமி இப்படிச் சொல்கிறார்: முதல் வாசிப்பிலோ அல்லது இரண்டாவது வாசிப்பிலோ ஒரு கவிதை தன்னை முழுமையாக வெளிப்படுத்திக் கொண்டுவிட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. முன்பின் பழக்கமற்ற ஒரு குழந்தையை நாம் அணுகும்போது, சில சமயம் அது நம்மை நோக்கி வரலாம். அநேக சமயங்களில் அது வராமலும் இருக்கக்கூடும். இவ்வாறு தான் கவிதையும். கவிதை விலகி நிற்கும்போது, உன்னிடம் உறவுகொள்ள நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன் என்று சொல்லிக்கொண்டு நாம் மௌனமாக காத்திருக்க வேண்டும். உடனடியாகப் புரியும்படி கவிதையை வற்புறுத்தக்கூடாது. இதுபோன்ற வற்புறுத்தலால் குழந்தை மனதளவில் பின்னகர்ந்து தன் இடைவெளியை அதிகப்படுத்திக் கொள்ளும் என்கிறார் அவர்.

இரா.பொன்னாண்டான் என்ற கவிஞர் தன் கவிதையில் இப்படிச் சொல்கிறார்:

என் எழுத்தை வாசிக்க முடியவில்லை / என்றீர்களாம்
அது என் குற்றம் இல்லை / என்னால் அவ்வளவே இயலும்
குழந்தையின் எழுத்தை வாசிக்கத் தெரிந்த / உங்களுக்கு
இது இயலாமல் போனது ஆச்சரியமே
பேச்சும்கூட புரியவில்லை / என்றீர்களாம்
அதுவும்என் குற்றம் இல்லை / என்னால்அவ்வளவே இயலும்
அரசியல்வாதியின் பேச்சைப் புரிந்துகொண்ட / உங்களுக்கு
இது புரியாமல் போனதிலும் ஆச்சரியமே.
ஒருவேளை / உங்கள் கண்களிலும் காதுகளிலும் கூட பழுது இருக்கலாம் அல்லவா?
அதை ஏன் மறந்து போனீர்கள்?

நாம் கவிஞர்களைப் பள்ளிக்கூட ஆசிரியர்களாக மாற்றாதிருந்தாலேயே அவர்களை ரசிக்கக் கற்றுக்கொண்டு விடுவோம் என்பார் மா.அரங்கநாதன். கவிதையை ரசித்தல் என்பது அவரவர் அனுபவம், முயற்சி, அக்கறை என்பவற்றைப் பொறுத்ததாகவும் தான் இருக்கிறது.

உங்கள் எழுத்தை மூன்று முறை படித்துப் பார்த்தேன் எனக்குப் புரிவில்லை என்ன செல்வது? என்று ஒருவர் கேட்டாராம். அதற்கு,

எழுத்தாளர் வில்லியம் /போக்னர் சொன்னார்: "நாலாம் தரம் படியுங்கள"

# சிறுவர் துஷ்பிரயோக குற்றச்செயல்

# மரணதண்டனை வழங்க ஆலோசனை



சிறுவர் துஷ்பிரயோக குற்றச் செயலுக்கு மரணதண்டனை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் மீண்டும் அவதானம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பான ஆலோசனை சட்டமா அதிபர் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு 6 மாதங்கள் நிறைவடைந்துள்ளது.இந்நிலையில் ஆலோசனையை சட்டமூலமாக மாற்றியமைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் விளக்கம் கோரவுள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவோருக்கு எதிராக தற்போது வழங்கப்படும் தண்டனைகள் போதுமானதாக இல்லை. தற்போதைய சட்டத்திற்கமைய சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படும் வழக்குகளின் போது சிறுவர்கள் வாலிப வயதையடைந்ததும் வழக்குகளை வாபஸ் பெறும் சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன.

இதனால் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கு விசாரணைகளை துரித கதியில் நிறைவு செய்து கடும் தண்டனை வழங்கும் விதத்தில் சட்டமூலத்தை மாற்றியமைக்கும் தேவை உருவாகியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பெற்றோரகளுக்கே கூடுதலான பொறுப்பு காணப்படுகிறது. இதனைக் கருத்திற்கொண்டே 5 வயதுக்கு குறைவான குழந்தைகள் உள்ள தாய்மார்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக செல்வதை தடை செய்ய அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேராவுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாகவும் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

# தேசிய கல்விச்சட்டமூலத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை

தேசிய கல்விக் கொள்கையொன்றின் அனுசரணையுடன் கல்விச் சட்டமொன்றை உருவாக்குவதற்கான யோசனைகள் அடங்கிய அறிக்கை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள கல்வி விவகாரங்களுக்கான விசேட நாடாளுமன்ற ஆலோசனை செயற்குழுவின் தலைவரான அமைச்சர் பந்துல குணவர்தன அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.அரசாங்க மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றமடையாத கல்விச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான யோசனைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.ஆளுங் கட்சி மற்றும் எதிர்க்கட்சியின் 23 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற விசேட செயற்குழுவில் அங்கத்துவம் வகித்ததாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

புத்திஜீவிகள், சமயத் தலைவர்கள், தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆயிரத்திற்கும் அதிகமானோர் நாடாளுமன்ற செயற்குழு முன்னிலையில் யோசனைகளை முன்வைத்துள்ளதாக கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தலைமைத்துவ பயிற்சிக்காக 15 பெண்கள் இந்தியாவிற்கு

(கொழும்பு)

இந்தியாவில் நடைபெறவுள்ள "அபிவிருத்திச் சமூகத்திற்காக கிராமியக்கல்வி" எனும் தொனிப்பொருளில் பெண்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிக்காக, இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 15 பெண்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியா பயணமாகியுள்ளனர்.

23ஆம் திகதியிலிருந்து 29ஆம் திகதிவரை இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் டும்கூர் நகரில் இந்தத் தலைமைத்துவப் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் சகல பாகங்களிலுமிருந்து பல்வேறு துறைகளில் நிறுவனங்களில் பணி யாற்றும் பெண்கள் இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா மாவட்ட பெண்கள் தொழில் முயற்சியாளர் சங்கச் செயலாளர் எஸ்.ஜிப்ரியா பேகம் தெரிவித்தார்.

மேற்படி தலைமைத்துவப் பயிற்சியை முடித்துக்கொள்ளும் பெண்கள் இம்மாதம் 30ஆம் திகதி நாடு திரும்பவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# திரவபால் சந்தையை அரசு உருவாக்க வேண்டும்

## விலங்கு வைத்தியர் சங்கம் கோரிக்கை



பால் மா உற்பத்தி பிரச்சினை காணப்படுகின்ற போதும் இலங்கையில் திரவ பால் சந்தை இல்லை என அரச விலங்கு வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தேவைக்கேற்ற வகையில் சந்தைக்கு விநியோகிக்க திரவ பால் இல்லை என அரச விலங்கு வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் ஹேமாலி கொத்தலாவ தெரிவித்தார். நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். திரவபால் சந்தை ஒன்றை உருவாக்க அரசாங்கம் முன்வர வேண்டும் அதற்கான கொள்கை ஒன்று அரசாங்கத்திடம் இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அயல் நாடான இந்தியா உலகில் சிறந்த திரவ பால் கொண்ட நாடு எனவும் அதில் உள்ள 28 மாநிலங்களில் சிலவற்றிலேயே நல்ல பால் தயாரிக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார். இலங்கை சிறிய நாடு என்பதால் பிரதேச மட்டத்தில் குளிரூட்டி வைத்து பால் உற்பத்தியாளர்களுக்கு நிவாரணம் வழங்கி, வரி நிவாரணம் வழங்குவதன் மூலம் எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் தற்போது நாளாந்த பால் உற்பத்தி 9 இலட்சம் லீற்றர் எனவும் ஆனால் அது திரவ பாலாக பயன்படுத்தப்படுவது 20% எனவும் ஹேமாலி கொத்தலாவ குறிப்பிட்டார்.

# போத்தலில் அடைக்கப்பட்ட உள்ளூர் நீர் பாதுகாப்பானது

## நீர் உற்பத்தியாளர் சங்கம் தெரிவிப்பு



போத்தலில் அடைக்கப்பட்ட சகல உள்ளூர் நீர் வகைகளுக்கும் சுகாதார அமைச்சினால் தரச்சான்று வழங்கப்படுவதாகவும் அவை உயர் தரத்தில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

போத்தலில் அடைக்கப்பட்ட இலங்கை நீர் உற்பத்தியாளர்கள் சங்கம் உள்ளூர் போத்தல் நீர் நுகர்வுக்கு பாதுகாப்பானது அல்லவென கூறப்படுவதையும் மறுத்துள்ளது.

போத்தலில் அடைத்த நீரில் தொற்று ஏதும் இல்லையென்பதை சுகாதார அமைச்சால் உறுதிப்படுத்த முடியுமா என அரசாங்க மருத்துவ சங்கம் கேட்டுள்ள நிலையிலேயே இலங்கை நீர் உற்பத்தியாளர்கள் சங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

பால் மா தொடர்பான சர்ச்சை காரணமாக போத்தல் நீரின் தரத்தை அரசாங்க மருத்துவ சங்கம் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளதென போத்தல் நீர் உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாம் உயர் தரத்தைப் பேணி வருகின்றோம். இல்லாதுவிடின் எமக்கு போத்தல் நீர் உற்பத்தி செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது. அத்துடன் எமது நீரை தொடர்ந்து விற்கவும் முடியாது என்று சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

நாங்கள் நீர் பெறப்படுகின்ற இடங்களையும் அவற்றின் சுற்றுச் சூழலையும் சோதித்து அங்கு கழிவுப்பொருட்களோ, ,மலசல கூடங்களோ இல்லை என உறுதி செய்துள்ளோம். மேலும், நீர் அடைக்கப்படும் செயன்முறைகளையும் இறுதியாக கிடைக்கும் நீரையும் சுகாதார அமைச்சு மதிப்பீடு செய்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

தீங்கு தரும் இரசாயனங்கள் நீரில் உள்ளததெனவும் காலத்துக்குக் காலம் சுகாதார அமைச்சினால் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனடிப்படையில் எமது உத்தரவுக்கான அனுமதி ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

# மனநலம் பாதிக்கப்பட்டோர் உரிய சிகிச்சையை பெறுவதில்லை

## தேசிய மனநோய் ஆய்வு நிறுவனம் தெரிவிப்பு

இலங்கையில் மனநல குறைப்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்களில் 60 வீதமானோர் உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதில்லை எனத் தேசிய மன நோய் ஆய்வு நிறுவனம் தெரிவிக்கின்றது.

பல்வேறு சமூக ரீதியான காரணங்களின் அடிப்படையில், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சைகளை பெற்றுக் கொள்வதில்லை என தேசிய மன நோய் ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளரும், வைத்திய நிபுணருமான ஜயான் மெண்டிஸ் தெரிவித்தார்.

நாட்டின் சனத்தொகையில் 20 வீதமானோர் சிறு அளவிலான மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நோயினால் கடும் பாதிப்புக்குள்ளான 5 வீதமானோர் இருப்பதாகவும் ஜயான் மெண்டிஸ் குறிப்பிட்டார்.

ஒருவர் மனநல பாதிப்புக்கு உள்ளாகியிருப்பது தெரியவரும் பட்சத்தில் உடனடியாக அவரை சிகிச்சைகளுக்கு உட்படுத்துதல் அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# பொது மக்களுக்கு இடையூறு சுன்னாகத்தில் 15 பேர் கைது

(சுன்னாகம்)


சுன்னாகம் பொலிஸ் பிரிவில், மதுபோதையில் பொது மக்களுக்கு இடையூறாக நடந்து கொண்ட 15 இற்கும் மேற்பட்டவர்கள் கடந்த ஒரு மாத காலத்தில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் இரவு,பகல் ரோந்து நடவடிக்கைகள் பரவலாக இடம் பெற்று வருவதாகவும் இத்தகைய ரோந்து நடவடிக்கைகளின்போதும் மற்றும் பொதுமக்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலும் இத்தகையவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# தகவல் தொழில்நுட்ப கட்டடத்திறப்பு விழா

இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் அமரார்கள் இராசையா இராசம்மா ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப மையக் கட்டடத் திறப்பு விழா நாளை இடம் பெறவுள்ளது.

சொ.ஹரிசங்கர் தலைமையில் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினர்களாக வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலக பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன், வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திர ராசா, கௌரவ விருந்தினாகளாக இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் நா.சிவனேசன், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி க.கிருஸ்ணபிள்ளையும் கலந்துகொள்ளவுள்ளார்கள்

06.  இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

07 நகரம் A யில் இருந்து B வரையுள்ள தூரம் 18km ஆகும். பஸ் ஒன்று A யில் இருந்து B யிற்கு நாளைக்கு 2 தடவைகள் சென்று திரும்பும் எனின் அது ஒரு நாளில் பயணம் செய்யும் மொத்த தூரம் யாது? ......................

08. வாகனமொன்றில் 25 பேர் பயணம் செய்ய முடியும். 85 பேரை ஏற்றிச் செல்லத்தேவையான வாகனங்கள் எத்தனை?

..................... .....................

09. | 5 | 8 | 12 | 17 | 23 | ? | கோலத்தில் வெற்றிடத்தில வரவேண்டிய எண்ணை எழுதுக. ......................

10. இங்கிலாந்தில் நண்பகல் 12.00 மணி ஆக இருக்கும் போது இலங்கையில் நேரம் பி.ப. 4.00 ஆகும். இங்கிலாந்தில் மு.ப. 08.15 இற்கு ஆரம்பமாகும்.கிரிக்கட் போட்டி ஒன்றின் நேரடி ஒளிபரப்பை இலங்கையில் எத்தனை மணிக்குப் பார்க்கலாம்? ......................

11. $1.3 + 0.5 + 2 =$ ---------- வெற்றிடத்தில் வரவேண்டிய விடையை எழுதுக.

12. வயர்த்துண்டு ஒன்றின் நீளம் 8 m 50 cm ஆகும். அதில் 2m 75 cm துண்டு வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சிய வயர்த்துண்டின் நீளம் யாது? ----------------------------------

13. பின்வரும் விலைப்பட்டியலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| பருப்பு | 2kg | 230.00 |
| சீனி | 500g | 105.00 |
| முட்டை | 06 | 66.00 |
| பூடு | 200g | 30.00 |

1. முட்டை 10 இன் விலையைக் காண்க? ......................
2. பூடு 1kg இன் விலையை காண்க? ......................
3. விலைப்பட்டியலின் மொத்த விலையைக் காண்க? ......................

**(10) திடீரென பெய்த மழையில் சிறிது நனைந்து விட்டேன். இதனால் எனக்கு காய்ச்சல் வந்துவிட்டது. இதன் பின்னரான விடயங்களை பொருத்தமானவாறு வாக்கியங்களாக அமைத்து எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களை கொண்டிருப்பதோடு எழுவாய் பயனிலை தொடர்பு சரியாக அமைய வேண்டும்.**

1. ......................
2. ......................
3. ......................
4. ......................
5. ......................
6. ......................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



**(1) பின்வரும் விளம்பரத்தை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

> **சிறுவர் இலக்கியத்தில் அடுத்த பாய்ச்சல்........**
>
> அப்பா!
> என்ன மகனே?
> 'முத்துக்கள்' சஞ்சிகையைப் படித்து முடித்துவிட்டேன்.
> அடுத்த இதழ் வெளிவந்துவிட்டதா அப்பா!
> ஆம், மகனே,
> அதில் பல புதிய அம்சங்கள் உள்ளன.
> கூறுங்கள் அப்பா!
> கூறுகிறேன் கேள்!
> 1. ஒலிம்பிக் தொடர்பான விறுவிறுப்பான தகவல்கள்.
> 2. ஒலிம்பிக் போட்டிகளின் வண்ணப்படங்கள்
> 3. ஜப்பானில் 'ரோபோ' திருவிழா பற்றி ஆச்சரியமான தகவல்கள்
> 4. கதைகள், புதிர்கள்
> 5. இரசிக்கும் தகவல்கள்
>
> இன்னும் பல சுவையான அம்சங்கள் உள்ளன. அப்பா உடனே எனக்கு வாங்கித் தாருங்கள்.
>
> வெளிவந்துவிட்டது
> முத்துக்கள்
> சிறுவர்களின் குதூகலக் கனவை நனவாக்கும் சஞ்சிகை இது

1. எந்த சஞ்சிகைக்காக இவ்விளம்பரம் வழங்கப்பட்டுள்ளது? ......................
2. இச் சஞ்சிகையில் இடம் பெறும் ஆச்சரியமான தகவல்கள் எதைப்பற்றியது? ......................
3. இச்சஞ்சிகையில் இடம் பெறும் வண்ணப்படங்கள் எப்போட்டிகளின் வண்ணப்படங்களாகும்? ......................
4. கனவு எனும் சொல்லின் எதிர்சொல்லைத் தருக? ......................
5. சிறுவர்கள் எனும் சொல்லின் ஒருமைச் சொல்லை தருக? ......................
6. மகனே என்பதன் எதிர்பாற் சொல்லை தருக? ......................
7. ஆச்சரியம் எனும் சொல்லின் ஒத்த சொல்லைத்தருக? ......................

**(2) இடைவெளியை பூர்த்தி செய்க.**

1. அணில் குஞ்சு என்பது போல தவளை ......................
2. எருமை எக்காளமிடும் என்பது போல எருது ......................
3. சிங்கம் கர்ச்சிக்கும் என்பது போல தேவாங்கு ......................
4. மா வடு என்பது போல பனை ......................
5. அவரை , துவரை பருப்பு என்பது போல பலா, தோடை ......................

(3) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

1. ஒழுக்கம் விழுப்பம் தரும் என்பது வள்ளுவர் வாக்கு

2. பெரியவரே கதிரையில் அமர்ந்து ஓய்வெடுங்கள்

**(4) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. நெலும்மல .................................... 2. அம்மா ரெதி சோதனவா ....................................

**(5) கருத்தனை தமிழில் எழுதுக.**

1. I wash my dress .................................... 2. Telephone ....................................

**(6) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. நான் அமரலாமா ....................................

2. தயவு செய்து அமைதியாகப் பேசவும் ....................................

**(7) பின்வரும் பூச்சிகளுக்குப் பொருத்தமான பெயர்களை அடைப்பிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**



.................... .................... .................... ....................

தத்துவெட்டி, பழுசு, வெட்டுக்கிளி, அந்துப்பூச்சி, மின்மினிப்பூச்சி, தேனீ

**(8) மிகச்சரியான விடைகளின் கீழ் கோடிடுக.**

1. மாலை வேளையில் தனது இலைகளை சுருக்கிக் கொள்ளும் தாவரம்.
   1. அகத்தி 2. மா 3. முருங்கை 4. வேம்பு

2. முட்டையின் மூலம் இனப்பெருக்கம் செய்யக்கூடியதும், ஊர்ந்து செல்லக்கூடியதுமானது.
   1. உடும்பு 2. பல்லி 3. கரப்பான் 4. கபரகொயா

3. இலங்கையின் வாவிகளால் சூழப்பட்ட பிரதேசம் என அழைக்கப்படும் மாவட்டங்கள்.
   1. அநுராதபுரம் - கண்டி 2. பொலன்நறுவை - மாத்தளை
   3. அநுராதபுரம் - பொலன்நறுவை 4. கொழும்பு - கோட்டை

4. ஒலிம்பிக்கொடியிலும் இலங்கையின் தேசிய கொடியிலும் அமைந்துள்ள இரு வர்ணங்கள் எவை?
   1. வெள்ளை - நீலம் 2. கறுப்பு - வெள்ளை 3. மஞ்சள் - நீலம் 4. பச்சை - மஞ்சள்

5. வீட்டுத் தோட்டத்தில் பூச்சிகளின் வரவைக்கட்டுப்படுத்த பயன்படுத்தக்கூடிய பொருத்தமான முறை.
   1. கிருமிநாசினி தெளித்தல் 2. புகையிலை நீர் தெளித்தல்
   3. சுடுநீர் ஊற்றுதல். 4. கால்வாய்களை வெட்டுதல்

6. பின்வரும் உபகரணங்களுள் வடக்கு திசையைக் காட்டக்கூடியது?
   1. காற்றுத்திசைக்காட்டி 2. காற்றாடி 3. தொலைநோக்கி 4. கொம்பாஸ்



07. வீட்டுத்தோட்டத்திற்கு வரும் நத்தைகளை அழிக்கக்கூடிய வழிகளில் ஒன்று.
   1. முசுறுக்கூட்டை போடல் 2. சாம்பல் தூவுதல்
   3. வேப்பெண்ணெய்யைத் தெளித்தல் 4. சுண்ணாம்புத்தூளை விசிறுதல்.

08. பின்வருவனவற்றுள் இலைகளில் கூடுகட்டும் பிராணி எது?
   1. சிட்டுக்குருவி 2. மயிர்கொட்டி 3. செவ்வெறும்பு 4. சிலந்தி

09. சிறுவர்களுக்கு எதிரான முறைப்பாடுகள், இடர்பாடுகள் என்பவற்றை அறியப்படுத்துவதற்காக தேசிய சிறுவர் அதிகார சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட தொலைபேசி எண் எது?
   1. 1929 2. 199 3. 118 4. 1919

10. மஞ்சள் நிறகாய்கறி, மஞ்சள் நிறப்பழங்களில் அதிகமாக காணப்படும் ஊட்டச்சத்து?
   1. விற்றமின் D 2. விற்றமின் B 3. விற்றமின் A 4. விற்றமின் C

11. நாற்று மேடைக்கன்றுகள் பின்வருவனவற்றுள் எவை?
   1. தக்காளி - மிளகாய் 2. போஞ்சி - கத்தரி
   3. முள்ளங்கி - சோளம் 4. பசளி - பூசணி

12. சூரியனை நேருக்கு நேர் கண்களால் பார்க்கக் கூடியது?
   1. நாரை 2. கழுகு 3. மயில் 4. வான்கோழி

13. பின்வருவனவற்றுள் விலங்கின் மூலம் பரம்பலுக்கு உட்படும் வித்துக்கள் எவை?
   1. புலிநகம் - நாயுருவி 2. துத்திரி - காசித்தும்பை
   3. வேங்கை துத்திரி 4. அச்சி - ஆடையொட்டி

14. பழுதாகிய தேங்காய்பாதி ஒன்றின் இயல்பு
   1. சிரட்டையிலிருந்து கலரும் தன்மை 3. வலுவலுப்புத்தன்மை கொண்டிருக்கும்
   2. துர்வாடை வீசும். 4. நீல நிற புள்ளிகள் காணப்படும்.

15. சப்ரகமுவ மாகாணத்தில் அமையப்பெற்றுள்ள மாவட்டங்கள்.
   1. இரத்தினபுரி - பதுளை 2. கொழும்பு - கேகாலை
   3. பதுளை - பண்டாரவளை 4. இரத்தினபுரி - கேகாலை

16. 
   இக்குறியீடு குறிக்கும் கருத்தானது
   1. ஓடத்துறை பாதை 2. ஏற்றமான பாதை
   3. ஆபத்தான பாதை 4. சாய்வான பாதை

**(09) பின்வரும் கணித வினாக்களுக்கு விடை தருக.**

1) இலக்கத்தில் எழுதுக. தொண்ணூற்றொன்பதாயிரத்து ஒன்பது ....................................

$X + Y = 10$ $X + X = 8$

$Y + Z = 9$ $Z + W = 5$ எனின் ZWY என்பதை எவ்வாறு இலக்கத்தில் எழுதலாம்? ....................

2) ஒரு பெரிய பையொன்றிலுள்ள சீனியை 1½ kg கொண்ட 10 பைக்கற்றுக்களில் அடைக்க முடியும் எனின் பெரிய பையிலுள்ள சீனியின் நிறை எத்தனை கிலோகிராம் ஆகும்? ....................

3) 1 - 8 வரைக்குமான இலக்கங்கள் ஒவ்வொன்றையும் கூட்டும் போது கிடைக்கும் பெறுமானம் யாது?
....................

4) 436 தோடம்பழங்கள் நான்கு பெட்டிகளில் சமமான எண்ணிக்கையில் அடைக்கப்பட்டுள்ளது. எனின் ஒரு பெட்டியிலுள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது? ....................

# நாடாளுமன்றத்தெரிவுக்குழுவை அமைப்பதன் அவசியம் என்ன?

## கேட்கின்றன எதிர்க்கட்சிகள்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கான அவசியம் என்ன என எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன. இந்த நேரத்தில் நாடாளுமன்றத்தெரிவுக்குழுவினை அமைக்க வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் விளக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் தெரிவித்துள்ளன.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்தத் தவறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது ஜனாதிபதி அளித்த வாக்குறுதிகள் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பிலான வாக்குறுதிகளை அரசாங்கம் உரிய முறையில் அமுல்படுத்தத் தவறியுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் அரசாங்கத்தின் முனைப்பை யதார்த்தமானது எனக் கருத முடி யாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


ஒரு விடயத்திற்காக அடிக்கடி நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்களை அமைப்பதில் எவ்வித பயனும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படவில்லை என ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுத் திட்டங்களை வழங்கியிருக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீர்வுத் திட்டமொன்றை மெய்யாகவே முன்வைக்க வேண்டுமென அரசாங்கம் கருதவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் நாடாளுமன்றத தெரிவுத் திட்ட யோசனையானது பணத்தையும், நேரத்தையும் விரயமாக்கும் மற்றுமொரு முயற்சியாகவே கருதப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். எனவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்பதில் பயனில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வெலிவேரிய தாக்குதல் சம்பவம் விசாரணை அறிக்கை கையளிப்பு




(வெலிவேரிய) - ரதுபஸ்வலவில் சுத்தமான குடிநீருக்காக போராட்டம் நடாத்திய பொதுமக்கள் மீது படையினர் நடத்திய தாக்குதல் தொடரபாக, விசாரிக்க நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றத்தின் அறிக்கை, இராணுவத்தளபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேஜர ஜெனரல் ஜெகத் டயஸ தலைமையிலான, இந்த இராணுவ விசாரணை நீதிமன்றம் கடந்த 2 ஆம் திகதி இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் தயா ரத்நாயக்கவினால் நியமிக்கப்பட்டது.

பிரிகேடியர்கள் ஜெயவீர, என்.ஐ டி சில்வா, கேணல் வீரக்கோன், லெப்.கேணல் நாணயக்கார ஆகியோரை உள்ளடக்கிய இந்த இராணுவ நீதிமன்றம், ரதுபஸ்வல தாக்குதல் தொடர்பான அறிக்கையை நேற்றுமுன்தினம் மாலை இராணுவத் தளபதியிடம் கையளித்தது.

இந்த அறிக்கையின் அடிபபடையில், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இராணுவத் தளபதி சில பரிந்துரைகளை முன்வைப்பார் என்று, கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

# வாக்களிக்க வசதி செய்துதருமாறு இடம்பெயர் மக்கள் விண்ணப்பம்



இடம்பெயர்ந்துள்ள பதினொராயிரத்து 500 வாக்காளர்கள், இம்முறை மாகாணசபைத் தேர்தலில், வாக்களிப்பதற்கு வசதிகளை செய்து தருமாறு கோரி, விண்ணப்பித்துள்ளனர்.

அந்த விண்ணப்பங்களின் தகைமை குறித்து ஆராயும் செயறபாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சு.ஆ.யு.டு ரத்நாயக்க குறிபபிட்டார்.

தமது சொந்த இடங்களில் வதியாதோர், மாகாண .சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் கோரி விண்ணப்பிப்பதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த கால அவகாசம் கடந்த 12 ஆம் திகதியுடன் முடிவடைந்ததாக தேர்தல்கள் செயலகம தெரிவித்துள்ளது.

இதன்பொருட்டு வட மாகாணத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த வாக்காளர்கள் பொருபாலானோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாக தேர்தல்கள் செயலகம் மேலும் கூறியுள்ளது.

# உடைக்கப்பட்ட பஸ் நிலையம் மீள அமைக்கப்படுமோ?

யாழ் கண்டி வீதியில் வீதி அகலமாக்கும் பணிகளும் காப்பெற் இடும் பணிகளும் முடிவடைந்த போதும் உடைக்கப்பட்ட பஸ் தரிப்பு நிலையங்களுக்கு பதிலாக புதிய நிலையங்கள் இதுவரை அமைகக்கபடவில்லையென பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடும் வெயில் , மழை காலங்களில் பொதுமக்கள் பெரிதும் சிரமங்களை எதிர் கொள்வதனைக் காண முடிகிறது. வீதி அகலமாக்கும் பணிகளின் போது உடைக்கப்படும் பஸ் தரிப்பு நிலையங்களை மீள அமைப்பதற்கென ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது எனவும் கேள்வி எழுப்புகின்றனர்.

யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் இது போன்றதொரு நிலைமையே காணமுடிவதனையும் அவதானிக்க முடிகின்றது. 90

# கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுக் கூட்டம் எதிர் வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற வுள்ளது

மாவட்டத்திலுள்ள சிறுவர்களின் உயரிய நலனை மேம்படுத்துதல் தொடர்பான விடயங்கள் இதில் ஆராயப்பட உள்ளது.

இக் குழுவில் அங்கத்துவம் பெறுபவர்களை தவறாமல் கலந்து கொள்ளுமாறு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (90)

# தெரிவுக்குழு முன் தமது கருத்துக்களை புலம்பெயர் மக்களும் தெரிவிக்கலாம்

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழு பொதுமக்களின் கருத்துக்களை நேற்று முன்தினம் முதல் பதியத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில், வடக்கு கிழக்கு பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமது கருத்துக்களை புலம்பெயர்ந்த தமிழர்கள் உட்பட எந்தவொரு தனியாரும் முன்வைப்பதற்கான அரங்கமாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு செயற்படும் என்றும் குழுவின் தலைவரும் அமைச்சருமான நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை இவ்வாறு பொதுவாக திறந்து விடுவதனால் அரசியல் கட்சிகள் பங்குபற்றாமல் போனதால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்ப முடியு மென்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு பிரச்சினை பற்றி தமது கருத்துக்களை வெளிப்படுத்தவும் தமது திட்டங்களை வெளிப்படுத்தவும் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு இது நல்லதொரு வாய்ப்பை வழங்குகின்றது.

அவர்கள் சமாதானத்துக்கான தமது முன்மொழிவுகளையும் அதிகார பகிர்வுக்கான ஆலோசனைகளையும் முன்வைப்பதற்கு இது நல்ல சந்தர்ப்பமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அடையாள அட்டை பெறுவதற்கு நெடுந்தீவு மக்களுக்கு வாய்ப்பு



நெடுந்தீவுப் பகுதியில் இதுவரை தேசிய ஆளடையாள அட்டை பெற்றிருக்காதவர்களுக்காக நிரந்தர தேசிய ஆளடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேச செயலகப பிரிவுக்குள் வசிக்கும் மக்களுக்கு அந்த இடத்திலேயே தேசிய ஆளடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்கும் சேவை நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கபே நிறுவனம் மற்றும் மனித உரிமைகள் ஆராய்ச்சி நிலையம் ஆகியவை இணைந்து தேசிய ஆளடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான இந்தச் சேவைக்கு ஏற்பாடு செய்துள்ளன.

இந்த ஆரம்ப நிகழ்வில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் பொது முகாமைத்துவ சேவை அதிகாரி எஸ்.ஜெயமாலினி, நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் ஆழ்வார்ப்பிள்ளை சிறி, நெடுந்தீவுப் பொலிஸ் நிலைய அதிகாரிகள், கபே நிறுவன யாழ் மாவட்ட இணைப்பாளர் எஸ். மயூரன் ஆகியோருடன் பல் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

2012ஆம் ஆண்டின் வடமாகாண வாக்காளர் கணக்கெடுப் பின்படி வடபகுதியில் சுமார் 85 ஆயிரம் பேருக்கு தேசிய ஆளடையாள அட்டைகள் இல்லை என்ற புள்ளி விபரங்கள் உள்ளன.

இதன் காரணமாகவே அனைவருக்கும் வாக்குரிமையை உறுதிப்படுத்தும் முகமாக தற்சமயம் வடபகுதி மக்களுக்கு தேசிய ஆளடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக கபே நிறுவனத்தின் தேசிய இணைப்பாளர் அஹமட் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.

# அரசின் நடவடிக்கைகளால் நம்பிக்கை இழந்துள்ள "கரு"

(கொழும்பு)



அரசாங்கத்தின் நடவடிக்கைகள மீது நம்பிக்கையில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னதாக பாரியளவில் வன்முறைச் சம்பவங்களும் தேர்தல் சட்ட விதி மீறல்களும் இடம்பெற்று வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறான ஓர் நிலைமையில் தேர்தல் குறித்த நம்பிக்கை வலுவிழந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.தேர்தல்கள் திணைக்களம சிறந்த முறையில் தேர்தல்களை நடாத்த முயற்சிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு இல்லாத காரணத்தினால் தேர்தல்களை சுயாதீனமான முறையில் நடாத்துவதில் சிக்கல் நிலைமை தொடர்வதாகத் தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர்களினால் மேற்கொளளப்பட்டு வரும் கண்மூடித்தனமான வன்முறைகளை தடுக்க முடிவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.தேர்தல் ஆணையாளரின் உத்தரவினை மீறி ஆளும் கட்சியினர் அரச சொத்துக்களை துஸ்பிரயோகம் செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார். அரசாங்க வாகனங்கள தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரச ஊடகங்கள் தேர்தல் சட்டங்களை துளியும் மதிப்பதில்லை எனவும் ஆளும் கட்சிக்காக பகிரங்கமான பிரசாரங்களில் ஈடுபட்டு வருவதாகவும் கரு ஜயசூரிய குற்றம் சுமத்தியுள்ளார்.

# சிரிய இராணுவ இரசாயன தாக்குதலில் உயிரிழந்தோர் 1300 ஆக அதிகரிப்பு



சிரியாவில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட இரசாயன குண்டுத் தாக்குதலில் ஆயிரத்து 300 பேர் கொல்லப்பட்டுள்ளதாக சிரிய கிளர்ச்சியாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். தலைநகர் டமஸ்கசில், கிளர்ச்சியாளர்களின் வசமிருந்த பிரதேசங்ளை இலக்கு வைத்து இரசாயன குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பான ஒளிப்பதிவு ஆவணங்களை கிளர்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளதாக சர்வதேச் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தாக்குதலில் காயங்களுக்குள்ளான சிறுவர்கள், முதியோர்கள் என நூற்றுக்கணக்கானோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இராணுவத்தினர் இரசாயன தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களை அந்நாட்டு அரச தரப்பினர் மறுத்துள்ளனர்.

இதேவேளை சிரியாவில் இரசாயன தாக்குதல் நடத்தப்படுவது தொடர்பில் ஆராய, ஐக்கிய நாடுகள் சபையின் இராசாயன ஆய்வுக்குழுவினர் அங்கு விஜயம் செய்துள்ளனர். அவர்களின் விசாரணை நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கிலேயே இரசாயன தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள். செய்தி வெளியிட்டுள்ளன. இதேவேளை தாக்குதல் தொடர்பில் உண்மை நிலையை கண்டறிய, சம்பவம் இடம்பெற்ற பகுதிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் இராசாயன ஆய்வுக்குழுவினர் விரைவில் செல்ல வேண்டுமென அரபு லீக் வலியுறுத்தியுள்ளது. இதேவேளை அப்பாவி பொது மக்களை கொல்லும் சிரிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் விவாதிக்கப்பட வேண்டுமென சிரிய எதிர்கட்சி தலைவர் அஹமது அலட ஜர்யா கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பூமியை நோக்கி சூரியப்புயல் நாசா ஆய்வு மையம் அறிவிப்பு

சூரியனிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை வெளிப்பட்ட சூரியப்புயல், பூமியை நோக்கி வந்துகொண்டிருப்பதாக நாசா ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனினும் குறித்த சூரியப்புயலால் பூமிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதெனவும், தொலைத்தொடர்பு சாதனங்களுக்கு சிறியளவில் பாதிப்பு ஏற்படலாமெனவும், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சூரியப்புயல் நிகழ்வானது, பல ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம்பெறும் நிகழ்வானது குறிப்பிடப்பட்டுள்ளது. சூரியனின் மேற்புறத்தில் ஏற்படும் பல்வேறு வேதியியல் மாற்றங்களால் கொந்தளித்து காணப்படும் சூரியக்கதிர்கள், அதிலிருந்து வெளிப்படுவதாக நாசா ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சூரியனிலிருந்து பூமி, மிக நீண்ட தூரத்தில் அமைந்துள்ளதால், மிகக்குறைந்தளவிலான வெப்பமே பூமிக்கு வந்தடையும். இதனால் பூமியில் உயிரினங்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாதென விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதேவேளை சூரியப்புயல், பூமியை நோக்கி வந்துகொண்டிருக்கும் நிகழ்வை விஞ்ஞானிகள் அதிநவீன டெலஸ்கோப் மூலம் ஒளிப்பதிவு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விடுத்லையாகும் முபாரக்கை வீட்டுக்காவலில் வைக்க உத்தரவு

(கெய்ரோ)

எகிப்து முன்னாள் அதிபரும், 30 ஆண்டுகாலம் ஆட்சி நடத்தியவருமான ஹோஸ்னி முபாரக்கை (85) விடுவிக்க அந்நாட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. எகிப்து நாட்டில் 30 ஆண்டுகள் அதிபராக ஆட்சி செய்த ஹோஸ்னி முபாரக் (84), 2011ஆம் ஆண்டில் ஏற்பட்ட மக்கள் புரட்சியால் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டார். பின்னர் ஊழல் உள்ளிட்ட் குற்றசாட்டுகளால் சிறையில் அடைக்கப்பட்டார். ஊழல் குற்றச்சாட்டின் கீழ் 2 ஆண்டுகள் வரை முபாரக் சிறையில் இருந்துள்ளார்.



எனினும் அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. எனவே இறுதித் தீர்ப்பு வரும் வரை அவர் சிறையில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நீதிமன்றம் கூறியுள்ளது. 2011இல் நிகழ்ந்த 18 நாள் புரட்சியின் போது 800 பேரை கொலை செய்ததாகவும் முபாரக் மீது குற்றச்சாட்டு உள்ளது. கெய்ரோவில் உள்ள டோரா சிறையில் உள்ள மருத்துவமனையில் முபாரக் இப்போது உள்ளார்.

இந்நிலையில் முபாரக் விடுதலை செய்யப்பட்டால், அவரை கட்டாய் வீட்டுக்காவலில் வைக்க பிரதமரும், தற்போதைய இராணுவத்துறை கமாண்டருமான ஹசன் எல் பெப்லாவி நேற்றுமுன்தினம் மாலை உத்தரவிட்டுள்ளார். முபாரக்கின் வீழ்சசிக்குப்பின் அதிபரான மோர்ஸி இராணுவத்தால் பதவி நீக்கப்பட்டதால், பல்வேறு பிரச்னைகளை சந்தித்து வன்முறைகளமாகியுள்ள எகிப்தில் முபாரக் விடுவிப்பால் பதற்றம் அதிகரிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

# அருணாச்சல எல்லைப் பகுதியில் சீன இராணுவம் ஊடுருவல்

காஷ்மீர் மாநிலம் லடாக் அருகே எல்லையில் இந்தியா மிகப் பெரிய போர் விமானத்தை நிறுத்தியுள்ள நிலையில், அருணாச்சலப் பிரதேசத்தில் ஊடுருவிய இடத்திலிருந்து வெளியேற சீன இராணுவம் மறுத்துள்ளது. அருணாச்சலப் பிரதேசத்தின் சல்கலாம் பகுதியில் அத்துமீறி நுழைந்த சீன இராணுவத்தினர், அங்கு 30 கி.மீ தூரம் வரை ஊடுருவி கூடாரங்களை அமைத்தனர். தற்போது அந்த கூடாரங்கள் அகற்றப்பட்டு விட்டாலும் கூட, சீன இராணுவத்தினர் தொடர்ந்து அங்கேயே முகாமிட்டுள்ளனர். இந்திய இராணுவ அதிகாரிகளின் பேச்சுவார்த்தைக்குப் பின்னரும் கூட, சீனப்டையினர் ஆக்கிரமிப்பு பகுதியிலிருந்து வெளியேற மறுத்து வருகின்றனர்.

இதனிடையே காஷ்மீர் மாநிலம் லடாக் அருகே தவுலத் பெக் ஓல்டி என்ற இடத்தில், சீனா ஊடுருவிய இடத்தில் இந்திய விமானப்படைக்கு சொந்தமான மிகப்பெரிய போர் விமானத்தை இந்தியா நேற்று தரையிறக்கியது. இதனால் ஆத்திரமடைந்துள்ள சீனா அருணாச்சலப் பிரதேசத்தில் ஆக்கிரமித்துள்ள பகுதியிலிருந்து வெளியேறப் போவதில்லை என்று தெரிவித்துள்ளது. இதனையடுத்து அங்கு இந்திய படைகளும் குவிக்கப்பட்டுள்ளதால் எல்லையில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது. இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட ஐ.என்.எஸ் விக்ராந்த் விமானம் தாங்கி போர்க் கப்பல் சீனாவிற்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் என்று சீன ஊடகத்தகவல்கள் எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத் தக்கது

# எல்லை தாண்டும் மீனவரை எச்சரிக்கும் இந்திய் கடற்படை

(நாகப்பட்டினம்)

தமிழக மீனவர்கள் மீது, இலங்கை கடற்படை தாக்குதல் நடத்துவது அதிகரித்ததை அடுத்து, வங்கக் கடற் பரப்பில், இந்திய கடற்படை ஹெலிகொப்டர்கள், தீவிரமாக ரோந்து சுற்றி வருவதுடன் எல்லை தாண்டிச்செல்லும் மீனவர்களை, வீரர்கள் எச்சரிக்கின்றன. நாகை, இராமேஸ்வரம் கடல்பகுதியில்,

இந்திய கடற்படையினரும், கடலோர காவல் படையினரும் இணைந்து, தமிழக கடல் பகுதியில், தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்திய கடற்படை ஹெலிகொப்டர்கள், வங்கக் கடல் பகுதியில், இந்திய எல்லைப் பகுதியில், தாழ்வாக பறந்து, கண்காணிப்பு பணியை செய்து வருகின்றன. இலங்கை கடல் எல்லைக்குள், தமிழக மீனவர்கள் அத்துமீறினால், அவர்களை எச்சரித்து, இந்திய எல்லைக்கு திருப்புகின்றனர்.

இந்த நடவடிக்கை, மிகுந்த பாதுகாப்பையும், நம்பிக்கையும் ஏற்படுத்துவதாக, தமிழக மீனவர்கள் தெரிவித்தனர்.

உலகச் செய்திகள்

# இயேசு கூறியதனால் பதவியிலிருந்து விலகினேன்

(ரோம்)



இயேசு என்னை பதவி விலகச்சொன்னதாலேயே பாப்பரசர் பதவியிலிருந்து விலகியுதாக முன்னாள் பாப்பரசர் பெனடிக்ட் தெரிவித்துள்ளார். நான் தனிப்பட்ட முறையில் கடவுளிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். அப்போது கடவுள் இயேசு எனக்கு கட்டளை பிறப்பித்தார். என்னை பதவி விலகும்படி அவர் கேட்டுக் கொண்டார்.

கடவுளின் விருப்பத்திற்கு இணங்க நான் பதவி விலகினேன். எனது பதவி விலகல கடவுள் எடுத்த முடிவு என்று கூறியுள்ளார். இந்தத் தகவலை இத்தாலிய கத்தோலிக்க மத செய்தி நிறுவனமான ஹசெனித் வெளியிட்டுள்ளது.

# உயிருக்கு போராடிய பூனைக்கு இரத்ததானம் அளித்த நாய்



நியூசிலாந்து, தவுரங்கா பகுதியைச்சேர்ந்த கிம் எட்வர்ட்ஸ் என்னும் பெண் ரோரி என்னும் பூனையை வளத்துவருகிறார். இப்பூனை எதிர்பாராத விதமாக எலிகளுக்கு வைக்கப்பட்ட விஷத்தைச் சாப்பிட்டு மயங்கி விழுந்தது.

உடனடியாக ரோரியை மருத்துவமனையில் அனுமதித்த கிம், மருத்துவர்கள் ரோரியை காப்பாற்ற வாய்ப்புகள் குறைவாக உள்ளது எனத் தெரிவித்ததும் அதிர்ச்சி அடைந்தார்

கிம்மின் நிலையை உணர்ந்த மருத்துவர் கேட் ஹெல்லெர் உடனடியாக மிச்சேல் 'விட்மோர் என்னும் நபரை தொடர்பு கொண்டு, இரத்ததானம் செய்யும் அவருடைய நாயான மேகியை மருத்துவமனைக்கு அழைத்து வரும்படி கூறினார்.

மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்ட மேகி இரத்த தானம் செய்ததும், அதன் இரத்தம் ரோரி பூனையின் உடலில் ஏற்றப்பட்டது. மேகியின் இரத்த தானத்தால் உயிர்பிழைத்த ரோரி தற்போது ஆரோக்கியமாகவும், உடல்நலத்தோடு உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

# பாதுகாப்பு அதிகரிப்பு

(சென்னை)

தமிழகத்திற்குள் கடல்வழியாக புகுந்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாமென உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளதைத் தொடர்ந்து கடலோரப்பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. நாகை மாவட்டம் மயிலாடுதுறையில் விடிய, விடிய பொலிஸார் சோதனை நடத்தினர். மயிலாடுதுறையில் லாட்ஜ்கள், தங்கும் விடுதிகள், பேருந்து நிலையங்களில்,ஹோட்டல்களில் இந்த சோதனை நடந்தது.

# நிரந்தர நியமனம் கிடைப்பது எப்போது?

## பட்டதாரி பயிலுநர்கள் ஏக்கம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதங்கள் பலாத்காரமாக திரும்பப் பெறப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பட்டதாரிகள் மத்திய நிலையம் இக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

கடந்த 14 ஆம் திகதி வழங்கப்பட்ட பட்டதாரி நியமனங்களே உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தரவில் நேற்று முன்தினம் இவ்வாறு திரும்பப் பெறப்பட்டுள்ளதாக பட்டதாரிகள் மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை, தெவுந்தர பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களே காரணம் தெரிவிக்கப்படாமல் பலாத்காரமாக திரும்பப் பெறப்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

7 வருடங்களுக்கு பின் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்ட போதும் 6 மாதங்களில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என வாக்குறுதி அளித்தும் அது இன்றும் நடைபெறவில்லை.

ஒரு வருடமும் ஆறு மாதங்களும் கழிந்துள்ள நிலையில் 50 ஆயிரத்து 823 பேரில் 22 ஆயிரத்திற்கும் அதிகமானவர்களுக்கு நிரந்தர நியமனம் இதுவரை கிடைக்கவில்லை. 35 வயதிற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் இதனால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### பொட்டுக்கேடுகளை...

கருத்துத் தெரிவிக்கையில்,

இன்று கூட்டமைப்பில் உள்ள வேட்பாளர்கள் ஒருவரை ஒருவர் கழுத்து வெட்டும் வேலையைத் தான் செய்து கொண்டிருக்கின்றனர். மன்னாரில் எடுத்துக் கொண்டால் அங்குள்ள கூட்டமைப்பு வேட்பாளர்கள் அதன் முதலமைச்சர் வேட்பாளரின் படத்தைப் போட்டுத்தான் போஸ்டர்கள் மற்றும் பிரசுரங்கள் என்பவற்றை அடிக்கின்றனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள நிலைமையைப் பார்த்தால் வேறுவிதமாகவுள்ளது என்று தெரிவித்த அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு வேட்பாளர் வாக்குக் கேட்டு மக்களிடம் சென்று சொல்லியிருக்கின்றார் அரசியல் என்பது சாக்கடை, விக்னேஸ்வரன் நின்று பிடிக்கமாட்டார். அவர் நிச்சயமாக சிறிது காலத்தில் அரசியலில் இருந்து சென்று விடுவார். எனக்கு அதிகப்படியான வாக்கு கிடைக்கப் பண்ணுங்கோ என்று. ஆகவே அவரது நிலைப்பாடு என்னவென்றால் இப்படியாக வாக்கு தனக்குக் கிடைத்தால் விக்னேஸ்வரன் ஒதுங்கும் பட்சத்தில் முதலமைச்சர் பதவியைத் தனக்குத் தரவேண்டும் என்று மற்றவர்கள் மூலமாக அடிபட்டு எடுக்கலாம் என்று ஒரு இடத்தில் சொல்லியிருக்கின்றார். இப்படி ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு விதமாக பிரசாரம் செய்கின்றார்கள். இதில் மிக முக்கியமாக சொல்லப்போனால் தமிழரசுக் கட்சியினரைத் தெரிவு செய்த ஒரு பெரியார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. ஒருவரைப் பற்றி அவதூறாகப் பேசித்திரிகின்றார்.

அவர் இப்போது சொல்கிறார் தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றுபட வேண்டும் என்று. ஆனால் கூட்டமைப்பு வேட்பாளர்கள் இதுவரை ஒன்றுபடவில்லை. எனது அரசியல் அனுபவத்தில் சொல்வது என்னவென்றால் நிச்சயம் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம், கூட்டமைப்பு அங்கத்தவர்கள் வென்றால் அவர்களை உடைத்து தன்னோடு சேர்த்து ஒரு முதலமைச்சரை தங்களோடு இணைத்து ஆக்குவார்கள் என்றும் தெரிவித்த மாணிக்கசோதி அவ்வளவாக தமது கூட்டமைப்பு வேட்பாளர்களின் கருத்தை வெட்டும் பிரசாரத்தில் கூட்டமைப்பினர் ஈடுபட்டு வருகின்றனர் என்றார். (பா, இ)

## மல்லாகத்தில் விபத்து

(மல்லாகம்)

மல்லாகம் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக மல்லாகம் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 4.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீதியால் வந்த மோட்டார் சைக்கிள்கள் எதிர் எதிராக மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவ்விடத்தில் நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் ஆட்டோவும், மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளான நிலையில் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (66)

### இறுதிப்போர்...

ஆர்.சிவராஜா தெரிவித்துள்ளார்.

தமிழருக்கு மனிதாபிமான ரீதியில் உதவ முன்னர் ஏற்கனவே தனது கணவர் செய்த தவறுகளுக்கு ஒட்டுமொத்த தமிழர்களிடமும் குறிப்பாக தமிழ்ப் பெண்களிடமும் பகிரங்க பொது மன்னிப்பை அனந்தி எழிலன் கோரவேண்டும் என்று ஆர்.சிவராஜா மேலும் தெரிவித்துள்ளார். தமிழர்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளருடன் பேசவுள்ளதாக அனந்தி எழிலன் தெரிவித்திருப்பது பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

புலிகளின் திருமலை அரசியல் பொறுப்பாளராக எழிலன் இருந்த போது தான் மாவிலாறு அணையை இழுத்து மூடி இறுதிப் போருக்கு பிள்ளையார் சுழி போட்டார். நீரை வைத்து நிபந்தனை இட்டு போராடக்கூடாதென பல தரப்பில் கோரப்பட்டாலும் மாவிலாறு அணை விடயத்தில் எழிலன் எடுத்த மோசமான முடிவுகள் இறுதிப் போருக்கு வித்திட்டன.

போரில் பெருமளவு மக்களும் குழந்தைகளும் பாதிக்கப்பட்டனர் எனக் கூறும் அனந்தி எழிலன் தனது கணவரும் இவற்றுக்கான மூலகர்த் தாக்களில் ஒருவர் என்பதனை ஏற்றுக்கொள்ளவேண்டும். மக்களை நடுத்தெருவுக்கு கொண்டுவந்து இப்போது மீண்டும் இவர்கள் உணர்ச்சி வசனங்களை பேசுவதன் நோக்கம் என்ன?

மாவிலாறு அணையை எழிலன் மூடியது சரி என்பதனை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூட ஏற்கமாட்டார். இறுதிப்போரை ஆரம்பிக்க அடித்தளம் இட்டபோது எழிலனின் மனைவி உண்மையில் தமிழர்கள் மீது அக்கறை கொண்டிருந்தால் அணையை மூடும்போது அப்படியான பாரதூரமான செயலைச் செய்ய வேண்டாமெனக் கணவரைத் தடுத்திருக்க வேண்டும். அப்போது அமைதியாக இருந்து பேரழிவுக்கு துணை போன அனந்தி இப்பொது தமிழர்களைப் பற்றி நீலிக்கண்ணீர் வடிப்பது அர்த்தமற்ற விடயமாகும்.

அணையை மூடியதன் பின்னர் புலிகள் இணக்கப் பேச்சு நடத்தும் சூழலில் இருந்து வெளியேற வேண்டி வந்தது. போர் மட்டும் தான் தீர்வு என மக்களை துன்பத்தில் தள்ளி விட்டு இப்போது எந்த முகத்தை வைத்து அனந்தி அரசியலுக்கு வந்துள்ளார் என்பது தெரியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தனது கணவரின் பெயரை வைத்து அரசியல் நடத்தும் அனந்தி தனது கணவரின் தவறுகளுக்காக தமிழ் மக்களிடம் பொது மனிப்பைக் கோர வேண்டும். அது மட்டும் பிராயச்சித்தமாக இருக்காது. வீரவசனங்ளைக் கூறி எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கையை வீணடிக்காதிருக்கவும் அவர் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரசியல் தீர்வுக்கு...

பரிசீலித்ததா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த வெளியுறவுத்துறை இணையமைச்சர் பிரனீத்கவுர், பிரதமர் பங்கேற்பது பற்றி முடிவெடுக்கும் போது தேசிய மற்றும் சர்வதேச அம்சங்கள், நாட்டு நலன்கள் ஆகியவை கவனத்தில் கொண்டு முடிவெடுக்கப்படும் என்றார்..

அத்துடன், இலங்கையின் 13ஆவது அரசியல் சாசன திருத்தத்தை நடைமுறைப்படுத்த இந்தியா வலியுறுத்துமா என்று பா.ஜ.க.வின் ரவிசங்கர் பிரசாத் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில்தான் தீர்வு காண இந்தியா மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறது என்றார்.

## உரிமைக்கான பயணத்தை...

கண்டும் வருகின்றோம்.

உரிமை என்பது வெறுமனே பேசிக்கொண்டிருப்பதற்கான வெற்று வேஷ வாய்ப்பேச்சு அல்ல. அது அடைந்தே தீர வேண்டிய எமது மக்களின் மாபெரும் சொத்து.

உரிமை என்பது தனியே அரசியலுரிமை மட்டுமல்ல. எமது மக்களின் வரலாற்று வாழ்விடங்களை அபிவிருத்தியால் தூக்கி நிறுத்தி, எமது மக்களின் மனங்கள் தோறும் முழுமையான மகிழ்ச்சியைத் தரு வித்து, வாழ்வியல் எழுச்சியை இங்கு உருவாக்கி மக்களின் துயர் துடைக்கும் தேச இலட்சியப் பணிகளையும் கொண்டதே உரிமை ஆகும்.

வெற்று வீரப் பேச்சுக்களால் எதையும் பெற்றுவிட முடியாது. அர்த்தமற்ற, போலியான எதிர்ப்புக் கோஷங்களால் எமது மக்கள் ஒரு போதும் நிமிர்ந்தெழவும் முடியாது. கடந்த காலங்களில் அரசியல் அதிகாரங்களைப் பெற்ற தமிழ்க் கட்சிகள் அந்த அதிகாரங்களைச் சரியான முறையில் பயன்படுத்தியிருக்கவில்லை.

மாறாக, தாம் பெற்ற அரசியல் வாய்ப்புக்களை மக்கள் நலன் சார்ந்து பயன்படுத்தாமலும், கிடைத்த அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்து, இருண்ட வரலாறுகளையே சுயலாபக் கட்சிகளும், இயக்கங்களும் எமது மக்கள் மீது சுமையாகச் சுமத்தி வந்திருக்கின்றன. கடந்த காலங்களில் அரசியல் அதிகாரங்களை எமது மக்கள் எமக்குப் போதியளவு வழங்கியிருந்தால், அரசாங்கத்தை, அரசியல் தீர்வின் திசை நோக்கி நாம் அழைத்து வந்திருப்போம்.

தமிழ்பேசும் மக்களின் அரசியல் தலைவிதியை நாம் அடியோடு மாற்றியிருப்போம்.

எமது மக்களை அழிவுகளில் இருந்தும், அவலங்களில் இருந்தும், சொந்த நிலங்களைக் கைவிட்டு ஓடும் இடப்பெயர்வுகளில் இருந்தும் பாதுகாத்திருப்போம். ஆனாலும், அந்த அரிய வாய்ப்பு எமக்கு கிடைத்திருக்கவில்லை. அதற்கான ஆணையை எமது மக்கள் எமக்கு வழங்கியிருக்கவில்லை.

ஆகவே, இதுவரை தவறான அரசியல் கட்சிகளைத் தேர்ந்தெடுத்ததால் தோற்றுப்போன வழிமுறைகளைப் படிப்பினையாகக் கொண்டு எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தலில் சரியானவர்களை எமது மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். அதன் மூலமே எமது மக்கள் ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று, ஆடிப்பாடி மகிழும் அரசியல் சூழலை நோக்கிச் செல்ல முடியும். எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் என்பது, எமது மக்கள் தமது இலட்சியக் கனவுகளை நோக்கி நடைமுறைச் சாத்தியமான பாதையில் நடப்பதற்கான ஒரு வாசல் கதவாகும்.

வட தேச மக்களின் விடிவெள்ளியாகத் திகழப்போகும் முதலமைச்சர் யார் என்பதை தீர்மானிக்கப் போகின்ற தேர்தலாகும்.

எம் இனிய மக்களே!

எமது மக்கள் அவலப்படும் போது மக்களை கைவிட்டு நாம் எங்கும் ஓடிப்போனவர்கள் அல்லர்.

பலத்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும், எரிந்து போன எம் தேசத்தில் நின்று, நலிந்து போன எமது மக்களின் துயர் துடைத்தவர்கள் நாம்.

ஆகாயத்துச் சூரியனையும், சந்திரனையும் பிடித்து, பூமிக்குக் கொண்டு வந்து தருவோம் என்று, போலி வாக்குறுதிகளை அள்ளி வழங்கி,.. பட்டு வேட்டி பற்றிய கனவு கண்டு, கட்டியுள்ள கோவணத்தையும் களவாடக் கொடுத்தவர்கள் அல்லர் நாம்.

மாறாக நாங்கள், நடைமுறைச் சாத்தியமான வழி நின்று 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்து அரசியல் உரிமைக்கான திசை நோக்கி நடக்க ஆரம்பிப்போம் என்று எமது மக்களுக்குத் தீர்க்கதரிசனமாகக் கூறி வந்தவர்கள் நாம்.

அதை நடைமுறைப்படுத்துவதற்காக அயராது உழைத்தும் வந்தவர்கள் நாம்.

எதை நாம் சொல்லி வந்தோமோ அதுவே இங்கு நடந்து முடிந்திருக்கிறது.

எதை நாம் சொல்லிவருகின்றோமோ அதுவே இங்கு நடந்து கொண்டிருக்கிறது.

இனி, எது இங்கு நடக்க வேண்டுமோ அது சரியாக நடக்க வேண்டுமேயானால்,

எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் தமது கடந்த கால அனுபவங்களைப் படிப்பினையாகக் கொண்டு தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய, நாம் எமது வேட்பாளர்களைத் தேர்தல் களத்தில் இறக்கியுள்ளோம். எமது வேட்பாளர்களை நீங்கள் தெரிவு செய்து, அரசியல் அதிகாரங்களை எம்மிடம் பெற்றுத் தந்து, எமக்கு நீங்கள் ஆணை வழங்கும் போது...,

உங்களால் தெரிவு செய்யப்பட்ட எமது கட்சியைச் சேர்ந்த உங்களது பிரதிநிதிகளை, உங்கள் அரசியல் இலக்கின் திசை நோக்கி நானே நேரில் நின்று வழி நடத்திச் செல்லத் தீர்மானித்திருக்கிறேன். அத்தோடு 13 ஆவது திருத்தச் சட்டத்தை பாதுகாப்பதோடு, அதைப் பலப்படுத்தி மேலும் வளர்த்தெடுத்து, ஒளிமயமானதொரு எதிர்காலத்தை நோக்கி எமது மக்களை நானே அழைத்துச் செல்வேன். அதற்கான சாணக்கிய தந்திரோபாயமும், மதிநுட்பமும் நிறைத்த வழிமுறையும் எம்மிடம் மட்டுமே உண்டு என்பதை எமது மக்களாகிய நீங்கள் அறிவீர்கள்.

இதேவேளை, எமது வட தேச வரலாற்று வாழ்விடங்களை அபிவிருத்தியால் தூக்கி நிறுத்தியும், இன்னமும் மீளக் குடியேறாது எஞ்சியுள்ள எமது மக்களையும், அவர்களது சொந்த வாழ்விடங்களில் மீளக் குடியேற்றியும் வைப்போம். அரசியலுரிமை நோக்கிய உங்களது இலட்சியக் கனவுகளை நிறைவேற்ற, வட மாகாண சபையை வழி நடத்தும் வரலாற்றுக் கடமை யினை நானே உங்களுக்காக பொறுப்பேற்று செயற்படுத்துவேன்.

அது போலவே நீங்கள் எமக்கு ஆணை வழங்கும் போது உங்களது விருப்பங்களை ஏற்று, ஜனாதிபதியை இணங்க வைத்து, வட தேச விடிவெள்ளியாகத் துலங்கி, உங்களை வழி நடத்திச் செல்ல வேண்டிய முதலமைச்சர் யார் என்பதையும் நானே தீர்மானிப்பேன்.

அப்போது உங்களது கனவும், எனது கனவும் ஒன்றாக நிறைவேறும். சகல உரிமைகளும் பெற்றோம் என்ற நல்ல செய்தி இங்கு அரங்கேறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் சேவையில் வெறுப்பு
# 5263 பேர் பதவி துறப்பு



கடந்த 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதி வரை பொலிஸ் திணைக்களத்தின் 5263 உத்தியோகத்தர்கள் பதவிகளை விட்டுச் சென்றுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஸ் குணவர்தன நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இதுவரை பொலிஸ் திணைக்களத்தின் 593 உத்தியோகத்தர்கள் பதவிகளை விட்டுச் சென்றுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்தபோதே ஆளும் கட்சியின் பிரதம கொறடா இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டு யூலை முதலாம் திகதி வரை காணாமற்போயுள்ள அல்லது சேவைக்கு சமூகமளிக்காதிருக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் எதிர்க்கட்சியின் சபையில் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களின் சம்பளம் தொடர்பிலும் எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்தில் இன்று கேள்வி எழுப்பினர்.

இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களின் சம்பள உயர்வு மற்றும் நிலுவைச் சம்பளம் தொடர்பில் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

எதிர்க் கட்சியினரின் கேள்விக்கு பதிலளித்த போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, 2012 ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி தொடக்கம் ஊழியர்களுக்கு உரிய முறையில் சம்பளம வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

# குற்றம் புரிந்தால் பாரபட்சமற்ற தண்டனை
## இராணுவத் தளபதி அறிவிப்பு

வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஏற்பட்ட சம்பவத்தில் இராணுவதத்தினர் சட்டவிரோதமாக செயற்பட்டிருந்தால், அவர்களுக்கு எதிராக கடும் தண்டனை வழங்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இராணுவம் தொடர்பில் மக்களிடம் இருக்கும் நம்பிக்கையையும் கௌவரத்தை அழிக்க எந்த அதிகாரிக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

சம்பவத்தில் குற்றமிழைத்த எந்த இராணுவத்தின் அதிகாரியாக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

வெலிவேரிய சம்பவம் தொடர்பில் இராணுவ நீதிமன்றம் நடத்திய விசாரணைகளின் அறிக்கை இராணுவத்தின் சட்டப் பணிப்பாளரின் ஆய்வுக்காக வழங்கப்பட்டுள்ளது என்றார்.

# வர்த்தக நிலையங்கள் கூறை மூதூரில் நள்ளிரவு அடாவடி

(திருகோணமலை)

மூதூர் பிரதான வீதியிலுள்ள முஸ்லிம்களுக்கு சொந்தமான சுமார் 13 வியாபார நிலையங்கள இனந்தெரியாதவர்களினால் உடைத்து தேசமாக்கப்பட்டுள்ளன. இந்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இந்த வியாபார நிலையங்களின் கூரைகளை உடைத்து. உள்நுழைந்து பின்வழியால் சென்றுள்ள குறித்த நபர்கள் உடைமைகள் எவற்றையும் திருடவில்லை என வியாபார நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மூதூர் பிரதேசத்தில் பிரச்சினையொன்றை ஏற்படுத்தும் நோக்கில் இயங்கும் சில தீய சக்திகளின் வேலையாக இது இருக்கும் என நம்பப்படுகின்றது.

# இந்த ஆண்டின் சிறந்த பெண்மணி விருதை வென்றார் மட்டு. அரச அதிபர்

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் P.S.M. சார்ள்ஸுக்கு இந்த வருடத்தின் சிறந்த பெண்மணிக்கான விருது வழங்கப்பட்டிருக்கிறது.

கொழும்பில் ஹேற்று நடைபெறவுள்ள விருது வழங்கும் நிகழ்வொன்றில் இந்த விருது வழங்கப்பட்டதாகத் தகவல் திணைக்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

பெண்களுக்கான முகாமைத்துவ நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் இந்த விருது வழங்கும் நிகழ்வில் துறைசார் ரீதியில் இந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட சில பெண்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, இலங்கைக்கான அவுஸ்ரேலிய் தூதுவர் றொபின் மூடி ஆகியோர் கலந்துகொண்டனர்.


தொழிசார் அபிவிருத்திகளையும் பெண்களின் முன்னேற்றத்தையும் ஊக்குவிக்கும் வகையில் 2012 ஆம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவன் அடித்துக்கொலை

ஓட்டமாவடி, மடுவத்து வீதியிலிருந்து சுமார் 11 வயது மதிக்கத்தக்க சிறுவனொருவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சடலம் நேற்று மாலை 4.00 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சிறுவன் அடித்து கொலை செய்யப்பட்டுக் கற்களால் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட மேற்படி சடலத்தை, அப்பகுதிக்கு மாடு மேய்ப்பதற்காகச் சென்ற ஒருவர் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இதுவரையில் சடலம் அடையாளம் காணப்படவில்லை என்றும் இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.



மன்னார் கடலில் நேற்று கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர் ஒருவருடைய வலையில் இந்த முதலை அகப்பட்டது. இந்த முதலையை கடற்கரைக்கு கொண்டுவந்த மீனவர்கள் மீண்டும் அதைக் கடலில் விட்டுள்ளனர்.

# இலங்கைப் பெண் மரணம்; அமெரிக்கப் பிரஜை கைது

இலங்கை பெண்ணொருவரின் மரணத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் அமெரிக்க பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சவுதி அரேபியாவில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. அமெரிக்க கிறிஸ்த்தவ பிரஜையான இவர் சவுதியில் இஸ்லாமுக்கு மதமாற்றி இலங்கை பெண்ணை திருமணம் முடித்து வாழ்ந்து வந்துள்ளார். சவுதியில் வாழ்ந்து வந்த இந்த ஜோடிக்கு இடையில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்நிலையிலேயே தனது மனைவி காணாமல் போனதாக அவர் கூறி வந்துள்ளார். எனினும், அவரது சடலம் குழாய்யொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# கட்டுவனில் அடிதடி; மோதலில் சிக்கிய பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு குழுக்களுக்கு இடையே இடம் பெற்ற சண்டையைத் தொடர்ந்து ஒரே குடும்பத்தைச்சோந்த மூவர் உட்பட ஐவர் படுகாயங்களுடன் தெல்லிபழை ஆதாரவைத்தியசாலையில் நேற்று மாலை வரை அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். கட்டுவன் மேற்குப் பகுதியில் உள்ள ஒருவரை நேற்று இரவு தாக்கிய சம்பவத்தைத் தொடர்ந்து இன்று பகல் மீண்டும் எழாலையைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மகன்கள் மற்றும் சிலர் சென்று கட்டுவன் மேற்குப் பகுதியில் தாக்குதலை மேற்க்கொண்டுள்ளாாகள்.

இதனால் ஆத்திரம் அடைந்த அந்தப் பகுதி மக்கள் திரண்டு குறிப்பிட்டவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

ஏழாலை பகுதியைச் சேர்ந்த க.மகாதேவன் வயது 52 மகன மயூரன் வயது 26 விஜிதரன் வயது 22 மற்றும் ஞானசேகரம் மனோகரன் கட்டுவன் பகுதியைச் சேர்ந்த சரவணமுத்த சுதாகரன் ஆகியோர் அடிகாயம் வெட்டக்காயங்களுடன் பொலிசாரினால் தெலலிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை மயூரன் மயகமுற்று பலத்த வெட்டுக்காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எற்க்கனவே குறிப்பிட்ட சம்பவம் ஏற்படுவதற்க்கு காரணமாக இருந்தவர்களினால் நேற்று முன்தினம் இரவு தாக்குதலுக்கு உள்ளாகி தலையில் படுகாயத்திறக்கு உள்ளாகிய கட்டுவன் மேற்கைச் சேர்ந்த சந்திரன் திலக் (வயது - 35) என்பவர் நேற்று இரவு தெல்லிப்பழை பொலிசாரின்ால் தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.




இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஆகஸ்ட் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.